# உதயன்

**28:** பக்கங்கள் சுடர் 27 கதிர் 312 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 17 புதன்கிழமை (03/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 20.00




# காலத்தை இழுத்தடித்துச் செல்லாமல் உடனடியாக அரசியல் தீர்வு காணுங்கள்



### பிரிஸிடம் பான் கீ - மூன் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக்.3

கடந்தகால மோதல்களுக்குக் காரணமான பிரச்சினைகளுக்கு, இலங்கை அரசு காலதாமதமின்றி அரசியல்தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ -மூன் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் சென்ற இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுமுன்தினம் ஐ.நா. பொதுச்செயலர்

பார்க்க பக்கம் 4

### ஐ.நா. மீது நம்பிக்கை குறைகிறது

**-அமைச்சர் பீரிஸ்**

*சில நாடுகளை மட்டும் தெரிந்தெடுத்து அவற்றின் உள் விவகாரங்களில் எதேச்சாதிகாரமாகத் தலையிடும் தற்போதைய போக்குக் காரணமாக ஐக்கிய நாடுகள் சபை மீது கொண்டிருந்த நம்பிக்கை குறைந்து வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.*

ஐ.நா. பொதுச்சபையின் 67ஆவது

பார்க்க பக்கம் 4

# தீர்வுக்கு அல்ல; மீள்குடியமர்வுக்கே இந்தியா வழங்குகிறது முன்னுரிமை

### மன்மோகன் சிங் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 3

ஈழத் தமிழர்கள் விடயத்தில், போருக்குப் பின்னர், அவர்களின் மீள்குடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கே இந்தியா கூடுதல் முன்னுரிமை கொடுத்து வருகின்றது; அரசியல் தீர்வுக்கல்ல என்ற சாரப்பட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதிக்குக் கடிதம் எழுதியுள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி ஈழத் தமிழர் விவகாரம் குறித்து மன்மோகனுக்கு கருணாநிதி எழுதிய கடிதத்துக்கு அவர் பதிலளித்துள்ளார். தனது கடிதத்தில் கருணாநிதி, ஈழத் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்று கிடைக்கக்கூடிய வகையில் ஐ.நா. பொதுச் சபையிலும் மனித உரிமைகள் சபையிலும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

பதில் கடிதத்தில் மன்மோகன் சிங் கூறியிருப்பதாவது:-

பார்க்க பக்கம் 4

**2** புதிய வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு இல்லாதுவிட்டால் வீதியில் இறங்கிப் போராடுவர் மக்கள்-ரணில்

**8** இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி குல்தீப் சிங் பிரார் லண்டனில் கத்திக் குத்துக்கு இலக்காகி படுகாயம் அடைந்துள்ளார்.

**9** பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசியின் உத்தரவின் பேரில், பிரான்ஸ் நாட்டின் உளவுப் பிரிவினரே லிபிய அதிபர் கடாபியை சுட்டுக்கொன்றனரா?

**10** ஹொங் கொங்கிற்கு அருகில் இரு பயணிகள் படகுகள் மோதி விபத்துக்குள்ளானதில் 36 பேர் உயிரிழந்தனர்.

### இலங்கை குறித்த கேள்விக்கு ஐ.நாவில் அனுமதி மறுப்பு

கொழும்பு, ஒக்.3

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை உள்ளிட்ட சில குறிப்பிட்ட நாடுகள் தொடர்பிலான கேள்விகளை கேட்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்று 'இன்னர் சிட்டி பிரஸ்'

பார்க்க பக்கம் 4

## 'திவிநெகும' குறித்து வடக்கு ஆளுநர் கருத்து வெளியிடத் தடை கோரி மனு

### நீதிமன்றில் மாவை எம்.பி. தாக்கல்

கொழும்பு, ஒக்.3

'திவிநெகும' சட்டமூலம் தொடர்பில் வடக்கு மாகாண சபையின் கருத்து எது என்பதை வடக்கு மாகாண ஆளுநர் பிரதிபலிக்க முடியாது. எனவே, அவ்வாறு வடக்கு மாகாண சபையின் சார்பில் ஆளுநர் கருத்து வெளியிட முடியாது என உத்தரவிடுங்கள்.

- இவ்வாறு கோரும் 'ரிட்' மனு ஒன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. எஸ்.சேனாதிராஜா.

நேற்று தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும்போது மனுதாரர் சார்பில் சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி

பார்க்க பக்கம் 4

## இந்திய வீடமைப்புத் திட்டத்தின் 2 ஆம் கட்டம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

இந்திய அரசின் இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டப் பணிகள் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மூன்று மாவட்டங்களிலும் இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டத்துக்கு முன்னுரிமைப் பட்டியலில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டத்துக்குரிய காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

பார்க்க பக்கம் 4

## கல்விப் பணிப்பாளர் இடமாற்றத்தால் அபிவிருத்திப் பணிகள் பெரும் பாதிப்பு

### முல்லைத்தீவு அதிபர்கள் கவலை

யாழ்ப்பாணம்,ஒக்.3

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரை இடமாற்றியதன் மூலம் பாடசாலைகளில் நடைபெற்று வந்த அபிவிருத்திப் பணிகள் தடைப்பட்டுள்ளதுடன் போரால் பாதிக்கப்பட்ட கல்வி வலயத்துக்கு இந்த இடமாற்ற நடவடிக்கை பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளதாக முல்லைத்தீவு வலய அதிபர்கள் சங்கத்தினர் கவலை வெளியிட்டு உள்ளனர்.

இது தொடர்பாக அதிபர்கள்

பார்க்க பக்கம் 4

### பஸ் கட்டணம் அதிகரிக்கும்

கொழும்பு, ஒக்.3

அதிகரிக்கப்பட்டுள்ள டீசல் விலைக்கேற்ப உரிய எரிபொருள் மானியத்தை அரசு வழங்கவேண்டும். இல்லையேல் பஸ் கட்டணத்தை உடனடியாக அதிகரிப்போம் என்று அகில இலங்கை தனியார் பஸ் நிறுவன சங்க சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரியங்ஜித தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் டீசலின் விலையை நான்கு ரூபாவால் அதிகரித்துள்ளது. இதனால் தனியார் பஸ் சேவையை மேற்கொள்வதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

எனவே, தற்போதுள்ள

பார்க்க பக்கம் 4

## கேப்பாபிலவு மக்களுக்கு குடிதண்ணீர் வசதிகள்

வவுனியா,ஒக்.3

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சூரியபுரம் பகுதியில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிதண்ணீர் வசதிகளை செய்து கொடுப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த கேப்பாபிலவைச் சேர்ந்த சுமார் 110 குடும்பங்கள் எவ்விதமான அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்படாத நிலையில் சீனியாமோட்டை என்ற இடத்திலுள்ள சூரியபுரம் பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

பார்க்க பக்கம் 4

## கிழக்கில் 'திவிநெகும' நிறைவேறியது; அரசின் மிரட்டலுக்கு பணிந்தது மு.கா.

கொழும்பு, ஒக்.3

அரசின் கொள்கைகளுக்கு ஆதரவளிக்காவிடின் அமைச்சுப் பொறுப்புகளிலிருந்தும், அரசிலிருந்தும் விலகிவிடுமாறு அரச உயர்மட்டத் தரப்புகள் விடுத்த மிரட்டலுக்கு அடிபணிந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நேற்று கிழக்கு மாகாண சபையில் 'திவிநெகும' சட்டமூலத்திற்கு அங்கீகாரம் வழங்குவதற்கான ஆதரவை வழங்கியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்ப்பை வெளியிட்டு 'திவிநெகும'

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தேச வாக்காளர் பட்டியல் வியாழன் முதல் பார்வைக்கு

## திருத்தங்கள் இருப்பின் முறையிடலாம்

**“ஏ”, “பி” பட்டியலில் தொடர்பிலான முறைப்பாடுகள் இருப்பின் அவற்றை கிராமசேவையாளர் ஊடாக அல்லது நேரடியாக மேற்கொள்ளலாம்**

யாழ்ப்பாணம்,ஒக்.3

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலில் சேர்க்கப்பட்டோர் மற்றும் நீக்கப்பட்டோர் விவரங்கள் நாளை வியாழக்கிழமை முதல் பொதுமக்கள் பர்வைக்காக வைக்கப்படவுள்ளன.

இந்தப் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் கிராம சேவையாளர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ மாவட்ட செயலக தேர்தல் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜூன் மாதத்திலிருந்து நடைபெற்று வருகின்றது. இந்த வருடம் டிசெம்பர் மாத இறுதியில் புதிய வாக்காளர் பெயர் பட்டியல் வெளியிடப்படமாட்டாது. அதற்கு அமைய முதல் கட்டமாகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் நீக்கப்பட்டோர் பெயர்பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலிருந்து நீக்கப்பட்டவர்களின் விவரங்கள் “ஏ” பட்டியலிலும் , புதிதாக சேர்க்கப்பட்டவர்களின் விவரங்கள்“பி” பட்டியலிலும் நாளை வியாழன் முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்படவுள்ளன.

பிரதேச செயலகம், கிராம சேவையாளர் அலுவலகம், பிரதேச சபை என்பனவற்றில் இவை நாளை முதல் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இவற்றில் வாக்காளராவதற்கு தகுதியுடையவர்களின் பெயர் இடம் பெறாவிட்டால் கிராம சேவையாளர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ மாவட்ட செயலக திணைக்களத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

மேலும் “ஏ”, “பி” பட்டியலில் தொடர்பிலான முறைப்பாடுகள் இருப்பின் அவற்றை கிராமசேவையாளர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ மேற்கொள்ளலாம் -என்றார்.

(த-5)

# ஆளுநரின் அங்கீகாரத்துடன் வடமாகாணத்தில் திவிநெகும

## அமைச்சர் பஸில் திட்டம்

கொழும்பு,ஒக்.3

சர்ச்சைக்குரிய திவிநெகும சட்டவரைவு வடமாகாண சபையில் நிறைவேற்றப்படாமல் அது தொடர்பான செயற்பாடுகளை அரசு முன்னெடுக்க முடியாது என்ற கருத்து உருவாகி இருந்த போதிலும் வடமாகாண ஆளுநரின் அங்கீகாரத்துடன் செயற்படுத்துவதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் திட்டமிட்டு வருவதாக கூறப்படுகின்றது.

திவிநெகும சட்ட வரைவு உயர்நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்பட்டதால் அது முதலில் மாகாண சபைகளினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. இதன் காரணமாக அது தற்பொழுது ஊவா, வடமேல் மாகாண சபைகளால் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. மத்திய மாகாணம் கிழக்கு மாகாண சபைகளில் நேற்று அது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தெற்கு, வடமத்திய மற்றும் சப்பிரகமுவா மாகாணங்களில் இன்று அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

எதுவானாலும் வடக்கு மாகாண சபை இன்னமும் தெரிவுசெய்யப்படாமல் இருப்பதால் அதன் அங்கீகாரமில்லாமல் இந்தச் சட்டத்தைச் செயற்படுத்த அரசினால் முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐதே.கவும் தெரிவித்துள்ளன. ஆனால் இதற்குப் பதில் அளிக்கும் வகையில் சமுர்த்தி அதிகார சபையின் ஊடாக பேச்சாளர் சேனக உபபேசிங்க வெளியிட்டுள்ள கருத்தில் வடமாகாண ஆளுநர் அங்கீகாரம் அளித்தால் போதுமானது என்று கூறியிருந்தார்.

வேறு சில சட்ட முன் வரைவுகளை வடமாகாண ஆளுநர் முன்பு அங்கீகரித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ப)

# சம்பள உயர்வு இல்லாவிடில் வீதியில் இறங்குவர் மக்கள்

## எச்சரிக்கிறார் ரணில்

கொழும்பு,ஒக். 3

அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படாதுவிடின், மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவார்கள் என ஜக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த அரசு பொருள்களின் விலையை அதிகரித்துள்ளது. ஆனால் சம்பள அதிகரிப்பை மாத்திரம் மேற்கொள்ளவில்லை எனக் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் கூறினார்.

மக்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர்; அமைச்சரவையைத் தவிர ஒவ்வொருவருக்கும் இது தெரியும். மின்சாரம், எரிபொருள் உட்பட பல பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் கடனாளிகளாக உள்ளனர் எனவும் அவர் கூறினார்.

சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளவேண்டுமென நாடாளுமன்றத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்துத் தொழிற் சங்கங்களுக்கும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். இதற்கு நாங்களும் உதவுவோம் எனவும் ரணில் கூறினார்.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் சம்பள அதிகரிப்புத் தொடர்பாக தொழிற்சங்கங்கள் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும்.

வரவு செலவுத்திட்டத்தில் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளவேண்டுமென்று அரசை வலியுறுத்தி அதற்கு போராட்டங்களை முன்னெடுப்போம். திருடர்களை மாத்திரமே இந்த அரசு காப்பாற்றுகின்றது. ஜனாதிபதி பங்குச்சந்தை மோசடி தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். இந்த விடயங்கள் தொடர்பில் அரசு தொழிற் சங்கங்களுடன் கலந்துரையாடியுள்ளதா? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

(த)

# முன்னாள் தேரருக்கு 20 வருடங்கள் சிறை

கொழும்பு,ஒக் 03

கேகாலையில் 28 வயதான பெண்ணொருவரைப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியமை தொடர்பில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட எஸ்.சாந்த என அறியப்படும் முன்னாள் தேரர் றுவன்வெல்ல சோபிதவுக்கு 20 வருடகாலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குற்றவாளியாக இனங்காணப்பட்ட இவரது இரு நண்பர்களுக்கும் 20 வருடகாலச் சிறைத்தண்டனையை றுவன்வெல்ல நீதவான் வழங்கினார்.

குற்றவாளிகள் தலா ஒவ்வொருக்கும் 20,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்டவருக்கு 200,000 ரூபா இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறும் உத்தர விடப்பட்டுள்ளது.

இவர்கள் அபராதம் செலுத்தத் தவறினால் மேலும் 18 மாதங்களுக்கு சிறைத்தண்டனை நீடிக்கப்படுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கலந்துரையாடல்

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வடமாகாணத்திலுள்ள மாகாண செயலாளர், மாவட்ட செயலாளர், வலயச் செயலாளர், கோட்ட செயலாளர்களுடனான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 131, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள சங்கத்தின் தலைமைப் பணிமனையில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. (த-5)

# மோ.சைக்கிள் விபத்தில் மாணவி காயம்

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி, முரசுமோட்டைப் பகுதியில் பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் மாணவி ஒருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மாணவி மீது மோதியதில் அவர் காயமடைந்தார். சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பிச்சைரத்தினம் மேனகா (வயது-17) என்பவரே காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளால் மோதிவிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட இருவரும் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (10-6)

# கல்வி அமைச்சரின் செயலாளருக்கு உயர் நீதிமன்றம் கடும் கண்டனம்

கொழும்பு,ஒக்.3

பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு முற்றிலும் மாறாக பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமித்தமைக்காக கல்வி அமைச்சின் செயலாளரை உயர் நீதிமன்றம் கடுமையாக கண்டித்துள்ளது.

திசாநாயக்க திலகவதி என்ற அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் தொடர்பான மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது உயர்நீதிமன்ற நீதியரசர்களால் இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் சிராணி ஏ.பண்டாரநாயக்க தலைமையில் நீதியரசர்கள் கே.சிறிபவன், பிரியசாத் டெப் ஆகியவர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். எம். கோத்தபாய ஜயரட்னாவைக் கண்டித்தது.

பண்டாரவளை விஷாக பாலிக்க மத்திய மகாவித்தியாலயத்துக்கு அதிபர் ஒருவரை நியமிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக நீதியரசர் சிறிபவன் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கேள்வி கேட்டார்.

பொதுச் சேவைப் பணியாளர் என்ற முறையில் எவ்வாறு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தை இரத்துச் செய்துவிட்டு, அதற்கும் மேலாக உங்களால் செயற்பட முடியும் என்று நீதியரசர் சிறிபவன் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கேட்டார்.

பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டில் தலையிடுவதானது அரசமைப்பின்படி ஒரு குற்றமாகும் என்று நீதியரசர் எச்சரிக்கை செய்தார். பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானங்களில் ஒருவரது தலையீடு கண்டுபிடிக்கப்பட்டால் அவர் குற்றம் ஒன்றைப் புரிந்துள்ளார் என்ற வகையில் நீதிமன்றத்தினால் தண்டிக்க முடியும் என்றும் அவர் கூறினார். நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த கல்வி அமைச்சின் செயலாளர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். (ப)

# இலங்கை அணி வென்றால் நாட்டு மக்களுக்கு நடுக்கம்

## ஏதாவது ஒரு பொருளின் விலை அதிகரிக்கும் என்கிறார் மனோ

கொழும்பு,ஒக் 03

20/20 கிரிக்கெட் போட்டியில், இலங்கை அணி இங்கிலாந்தை வென்ற சந்தோசத்தில் நாட்டு மக்கள் திளைத்திருந்த ஆரவாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு இந்த அரசு, இரவோடு இரவாக டீசல் விலையை உயர்த்திவிட்டது. இலங்கை அணி இந்தியாவை வென்றால், பெற்றோல் விலையையும், உலகக் கிண்ணத்தை வென்றால், மண்ணெண்ணெய், பால்மா, காஸ், சீனி விலைகளையும் இந்த அரசு உயர்த்தலாம். இதனால், இன்று நமது அணியினர் விளையாட்டில் வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என விரும்பும் நாட்டுப்பற்றாளர்களுக்கும் மனதில் பயம் ஏற்பட்டுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

டீசல்விலை உயர்வு தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிரிக்கெட் போட்டியில் பெற்ற வெற்றி ஆரவாரத்தில் மக்கள் மூழ்கி இருக்கும் போது இந்த அரசு டீசல் விலையை உயர்த்தியுள்ளது. இது தேரோட்டங்களின் போது சங்கிலி அறுப்பதை போன்ற திருட்டுச் செயலாகும். கொழும்பில் ஆடிவேல், யாழ்ப்பாணத்தில் நல்லூர் ஆலயங்களின் தேரோட்டங்களின்போது பக்திப் பரவசத்தில் மக்கள் அரோஹரா கோஷம் போடுவார்கள். அவ்வேளைகளில், திருடர்கள் அவர்களின் கழுத்தில் தொங்கும் தங்கச் சங்கிலிகளை அறுத்துக்கொண்டு ஓடுவார்கள். அதைப்போல், இந்த அரசு செயற்படுகிறது. திருட்டுச் சங்கிலியுடன் ஓடுகின்ற திருடனும், அரோஹரா எனக் கத்திக்கொண்டு ஓடுவதைபோல், இந்த அரச அமைச்சர்களும், விலைகளை உயர்த்திவிட்டு விளையாட்டு வெற்றிகளைப் பற்றி உரக்கப் பேசுகிறார்கள். விளையாட்டுப் போட்டிகளுக்கு நேரடியாகச் சென்று தொலைக் காட்சிகளில் காட்சி தருகிறார்கள்.

கிரிக்கெட் போட்டியில் நமது நாட்டு வீரர்கள் தமது திறமையால் பெறுகின்ற வெற்றிகளை, இந்த அரசு தனது பொருளாதாரத் தவறுகளை மறைப்பதற்குப் பயன்படுத்துகிறது. இதனால், இன்று நமது அணியினர் விளையாட்டில் வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என விரும்பும் நாட்டுப்பற்றாளர்களுக்கும் மனதில் பயம் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு வெற்றிக்கும் ஒரு விலை கொடுக்க வேண்டிய பரிதாப நிலைமை நமக்கு ஏற்பட்டுள்ளது-என்றார்.(த)

# அமெரிக்கா 'கிறீன்காட்' விண்ணப்பங்கள் ஏற்பு

கொழும்பு,ஒக் 03

கிறின் காட் லொத்தர் என நன்கு அறியப்பட்ட பல்வகைமை குடிவரவு விஸா லொத்தர் திட்டத்துக்கான இணையத்தள விண்ணப்பங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஏற்றுக்கொள்ளப்படுவதாகக் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலதிக தகவல்களை பெறுவதற்காக srilanka.usembassy.gov/visas/diversity&vi sa&lottery &program.html என்ற கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் இணையத்தளத்தின் ஊடாக அறிய முடியும். அத்துடன் ; www.dvlottery.state.gov.என்ற இணையத் தளத்தின் ஊடாக அமெரிக்க கிறின் காட் லொத்தருக்கு விண்ணப்பிக்க முடியும்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேப்பாபிலவு மக்களுக்கு உடனே உதவி வழங்குக

## முல்லைத்தீவு அரச அதிபரிடம் கூட்டமைப்பினர் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக். 3

முல்லைத்தீவு கேப்பாபிலவுக் காட்டில் அநாதைகளாக விடப்பட்டுள்ள 158 குடும்பங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் கனடா 'வாழவைப்போம்' அமைப்பு என்பன இணைந்து அவசர பண உதவிகளைச் செய்ததோடு அவர்களது குறைபாடுகளைக் கேட்டறிந்து முல்லைத்தீவு அரச அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வந்தனர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவுக் காட்டில் அநாதைகளாக விடப்பட்டுள்ள 158 குடும்பங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் கனடா 'வாழவைப்போம்' அமைப்பு என்பன இணைந்து அவசர பண உதவிகளைச் செய்ததோடு அவர்களது குறைபாடுகளைக் கேட்டறிந்து முல்லைத்தீவு அரச அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வந்தனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை கேப்பாபிலவுக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மற்றும் சி.சிறிதரன் ஆகியோர் அங்கு 60- 70 வருடங்களாக பாவனையற்றிருந்த அடர் காட்டுப் பகுதியில் தனியார் காணியொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ள 158 குடும்பங்களின் நிலைமைகள் தொடர்பில் நேரடியாகக் கேட்டறிந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிநிதியில் இருந்தும் கனடா 'வாழவைப்போம்' அமைப்பு நிதியில் இருந்தும் இந்தக் குடும்பங்களுக்கு அவசர தேவைகளுக்காக தலா 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கினர். இதன்போது தாம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாகவும் தற்போது பெய்த மழை காரணமாக விசஜந்துக்களின் அச்சுறுத்தல் அதிகரித்திருப்பதாகவும் குழந்தைகள், பெண்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லையெனவும் கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் அந்த மக்கள் முறையிட்டனர்.

இதேவேளை அந்த மக்களின் குறை, நிறைகளைக் கேட்டறிந்த கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனுடன் கலந்துரையாடினர்.

இதன்போது கேப்பாபிலவு நொத்தாரிசு தோட்டத்தில் அநாதரவாக விடப்பட்டுள்ள குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினர். இதன்போது கருத்துத் தெரிவித்த அரச அதிபர் நெருக்கடிச் சூழல் மக்களுக்கு நிலவுவதை தான் உணர்வதாகவும் மக்களின் நிலைமைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி அவர்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இதேவேளை நாயாற்றுப் பகுதிக்குச் சென்ற கூட்டமைப்பு உறுப்பினர்கள் அங்கு குடியேற்றப்பட்டுள்ள குடும்பங்களின் வாழ்வாதார தொழில் நடவடிக்கைகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேரடியாக கலந்துரையாடினர். (10-6)

## திருட்டுச் சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு

மன்னார், ஒக்.3

மன்னாரில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் பெண் உட்பட்ட நான்கு பேர் மன்னார் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் சாவற்கட்டுப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கடந்த ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி நண்பகல், கையடக்கத் தொலைபேசி உட்பட்ட சுமார் ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பாக மன்னார் பொலிஸில் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-86)

## தேவிபுரத்தில் முன்பள்ளி கட்டடம் திறந்துவைப்பு

புதுக்குடியிருப்பு தேவிபுரம் அ.பகுதியில் உள்ள செந்தமிழ் முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வும் சிறுவர்தின நிகழ்வும் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு சமூக ஆர்வலர் ஐ.மாதவராஜா தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வுக்கு முன்னதாக முன்பள்ளிச் சிறார்கள் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். முன்பள்ளியின் கட்டடத்தை 'சோஆ' நிறுவனத்தின் இணைப்பாளர் சுஜிதரன் திறந்து வைத்தார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும், முன்பள்ளியில் கல்வி பயிலும் 73 சிறுவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பொது மக்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (க-6)

## முருகானந்தாவில் பொதுக்கூட்டம்

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறுமெனக் கல்லூரி அதிபர் ரி.வரதன் அறிவித்துள்ளார்.

முற்பகல் 10 மணியளவில் கல்லூரியின் மண்டபத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பழைய மாணவர் சங்கத்தின் யாப்பு அங்கீகாரம், பழைய மாணவர்களைப் புகைப்படம் எடுத்தல், கல்லூரியின் 75 ஆவது விழாவுக்கான ஏற்பாடுகள், பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான ஆலோசனை என்பன தொடர்பாகக் கலந்துரையாடவிருப்பதால் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபல் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (க-6)


## சிறந்த பெறுபேறு

கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கண்டாவளைக் கல்விக் கோட்டத்திலுள்ள தருமபுரம் இல.1 அ.த.க.பாடசாலை தரம்-5க்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது.

கண்டாவளைக் கல்விக் கோட்டத்திலுள்ள 23 பாடசாலைகளிலிருந்து இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் மொத்தமாக 6 பேர் சித்திபெற்றுள்ளனர். இவர்களுள் இருவர் தருமபுரம் இல.1 அ.த.க.பாடசாலையைச் சேர்ந்தவர்கள்.

மேலும் இந்தப் பாடசாலையிலிருந்து தோற்றிய 28 மாணவர்கள் 70 க்கும் மேலான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

கந்தசாமி பிரதீபா 160 புள்ளியையும், சிவகுமார் அருண்குமார் 158 புள்ளியையும் பெற்றுச் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (க-405)



*வவுனியா வடக்கிலுள்ள நெடுங்கேணி சின்னடம்பன் கிராமத்திலுள்ள வீதியொன்றில் அமைந்துள்ள பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றன. (க-18)*

## புரட்டாதி பௌர்ணமி விழா

மன்னாரில் புரட்டாதி பௌர்ணமி விழா கோலாகலமாக இடம்பெற்றது.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மன்னார் வலயக் கல்வி அலுவலகத்தினால் இந்தப் பௌர்ணமி விழா கடந்த சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்ட மன்னார் மைந்தர்களும் பேராசிரியர்களுமான வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் அ.சிலுவைதாசன், எருக்கலம்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் எஸ்.எச்.ஹிஸ்புல்லா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் மன்னார் வலயப் பாடசாலைகளின் முத்தமிழ் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-12)

## வடமாகாண ஓவியப் போட்டியில் பட்டிக்குடியிருப்பு அ.த.க, புனித சவேரியார் சாதனை

நெடுங்கேணி, ஒக்.3

விசேடகல்விநூற்றாண்டை முன்னிட்டு வடமாகாணப் பாடசாலைகள் மட்டத்தில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் பட்டிக்குடியிருப்பு அ.த.க, மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை என்பன சாதனை படைத்துள்ளன.

வவுனியா மாவட்ட மட்டத்தில் ஆரம்பப் பிரிவில் பட்டிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த யோ.திலக்சனா, கோ.கீர்த்திகா, ம.கோபிகா ஆகியோரும் இடைநிலைப்பிரிவில் ஜீ.ருசிகரன், ம.நிலானி, இ.நிரஞ்சனா ஆகியோரும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

மன்னார் மாவட்டத்தில் ஆரம்பப்பிரிவில் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த லி.கிசாந்தனா, எஸ்.அனுஷா, எஸ்.சிவானிகா, ந.தக்ஷா ஆகியோரும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

இடைநிலைப்பிரிவில் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த மரியகொன்சிகா, பாத்திமா நிப்லா, எலனா கிறிஸ்டல் ஓவியா பெர்னாண்டோ ஆகியோரும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

மேற்பிரிவில் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த ச.அனோஜா, ட.தர்சிகா ஆகியோரும் முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பப்பிரிவில் மல்லாவி ம.க. சேர்ந்த சி.கமல்ராஜ், தே.திருசன் ஆகியோரும் முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றனர்.

இடைநிலைப் பிரிவில் முல்லைத்தீவு ம.வியை சேர்ந்த ஆ.அண்டனி விதுர்சன், அண்டனி சியாந் ஆகியோரும் முறையே முதலாம், இரண்டாம், இடங்களையும் மல்லாவி ம.கவைச் சேர்ந்த ம.திசாந் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

மேற்பிரிவில் புதுக்குடியிருப்பு ம.வி சேர்ந்த வீ.டமரூகா முதலிடத்தைப் பெற்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பப்பிரிவில் கனகபுரம் ம.வியைச் சேர்ந்த சி.துவிபன், ர.அபிசர், ஜீ.சாருஜன் ஆகியோரும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

இடைநிலைப் பிரிவில் கனகபுரம் ம.வியைச் சேர்ந்த சி.ஜெகஸ்ரிகா, நி.துலக்சின், கே.திருமகன் ஆகியோரும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றனர். (க)

## முருகானந்தாக் கல்லூரிக்கு புதிதாக ஆசிரியர்கள் நியமனம்

### நன்றி கூறுகின்றனர் பெற்றோர்

கிளிநொச்சி முருகானந்தா கல்லூரிக்கு முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்களை வழங்கியுதவிய வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளுக்குப் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் நன்றி தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி மாவட்டத்தின் முதன்மையான பாடசாலைகளில் ஒன்றாகக் காணப்படுகின்ற போதும் உயர்தர வகுப்புகளுக்கு போதிய ஆசிரியர்வளம் இன்மையால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகக் குறித்த பாடசாலையின் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் கவலை தெரிவித்துப் பத்திரிகைக்குச் செய்தியை வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த பாடசாலைக்கு வருகை தந்த கல்வித்துறைசார் அதிகாரிகள் நிலைமைகளை பார்வையிட்டதுடன் ஆசிரியர்களையும் நியமித்துள்ளனர்.

இணைந்த கணிதம், உயிரியல், பௌதிகவியல் ஆகிய பாடங்களுக்கே மேற்படி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பின்தங்கிய தமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிய அதிகாரிகளுக்கும், வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் முருகானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சமூகம் மற்றும் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் நன்றி தெரிவித்துள்ளனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் ...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு பஸ் பயணிகள் தொடர்பில் அக்கறை செலுத்தி அரசு எரிபொருள் மானியம் வழங்கும் எனத் தான் நம்புவதாகவும் பிரியங்ஜித தெரிவித்துள்ளார்.

## கல்விப் பணி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

மீளக்குடியேற்றத்தின் பின்னர் முல்லைத்தீவு வலயப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றன. இந்தக் குறுகிய காலத்தில் நான்கு தடவைகள் கல்விப் பணிப்பாளரும் கணக்காளரும் மாற்றப்பட்டு உள்ளனர். இதனால் பாடசாலைகளின் பௌதிக, கல்வி அபிவிருத்தியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் திடீரென ஏற்பட்ட முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றத்தால் நாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம். கல்விப் பணிப்பாளர் ஒவ்வொரு பாடசாலை அதிபர்களுடனும் சுமுகமான உறவைப் பேணி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளை அவரை திடீரென இடமாற்றி உள்ளனர்.

முல்லைத்தீவு வலயத்தில் கல்வி அபிவிருத்திக்காக நிரந்தரமாக கடமையாற்றக்கூடிய வகையில் குறிப்பிடப்பட்ட கால எல்லையில் கல்விப் பணிப்பாளரையும் கணக்காளரையும் நியமிக்க வேண்டும். இதன் மூலமே கல்வி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் அதிபர்கள் சங்கங்கள் கேட்டுள்ளன. (10-433)

## இந்தியா...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத் திட்டப் பணிகள், முதல்கட்ட முன்னோடித் திட்டம் நிறைவுற்ற நிலையில் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மன்னாரில் மாந்தை மேற்கு பெரியமடு மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கான காசோலை வழங்கப்பட்டது. அதன் பின்னர் நண்பகல் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் பாலிநகர் மகாவித்தியாலயத்தில் வீட்டுத் திட்டத்துக்கான ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

இறுதியாக நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள எழுதுமட்டுவாழில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து வீட்டுத்திட்ட பயனாளிகளுக்குரிய காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் இலங்கைக்கான இந்திய தூதுவர் அசோக் கே.காந்தா, துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, றிஷாட் பதியுதீன், விமல் வீரவன்ச, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5-9)

## தீர்வுக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இலங்கையில் முரண்பாடு முடிவுக்கு வந்ததில் இருந்து இலங்கைத் தமிழர்களின் நலவாழ்வு மற்றும் அவர்களுக்கான நன்மைகள் குறித்தே இந்திய அரசு கவனத்தைக் குவித்திருந்தது என்பதை வலியுறுத்த இந்தச் சந்தர்ப்பத்தை மீண்டும் பயன்படுத்திக் கொள்கிறேன்.

தமிழர்களின் மீள்குடியமர்வு மற்றும் மறுவாழ்வுதான் எமது அரசின் உயர் மற்றும் மிக முக்கிய முன்னுரிமை விடயங்களாக இருந்தன. அதேவேளை, தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான பேச்சுக்களை தமிழர் பிரதிநிதிகளுடன் முன்னெடுக்குமாறு இலங்கை அரசிடம் தெரிவித்திருந்தோம்.

இந்த அடிப்படையிலேயே, தமிழர்கள் சமத்துவத்துடனும் கௌரவத்துடனும் நீதியுடனும் சுயமதிப்புடனும் வாழத்தக்கதான எதிர்காலத்தை அடையும் இலக்குடன் இலங்கை அரசுடன் தொடர்ந்தும் பேசி வருகின்றோம் - என்றுள்ளது. (உ-01)

## கேப்பாபிலவு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இவர்கள் குடிதண்ணீர் உட்பட நீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கும் சூழ்நிலையில் தற்போது ஒரு குழாய்க் கிணறு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளதுடன் 5 குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பகுதியில் தங்கியுள்ள மக்கள் தமது அன்றாட அத்தியாவசியமான பொருள்களை கொள்வனவு செய்வதற்கென 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு சகல குடும்பங்களுக்கும், வீடுகளின் கூரைகளுக்கு இடுவதற்கென தறப்பாள்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை இப்பகுதிக்கு நேற்றுச் சென்றிருந்த கேப்பாபிலவு இராணுவ பொறுப்பதிகாரி கேணல் மார்க் மக்களின் தேவைகள் தொடர்பாக கலந்துரையாடியதுடன் மிகவிரைவில் மின்சார வசதிகள் அனைத்தும் செய்துதருவதாக உறுதியளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை குறித்த...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

குற்றஞ் சுமத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் பான் கீ - மூன் மற்றும் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரின் சந்திப்பிற்குப் பின்னர், பான் கீ மூன் செய்தியாளர்களைச் சந்திப்பதாக இருந்தது. இதற்காக சில கேள்விகளை இன்னர் சிட்டி பிரஸ் முன்னதாகவே சமர்ப்பித்திருந்தது எனக் கூறப்படுகிறது.

எனினும் பான் கீ - மூன் உரையாற்றும்போது, கேள்விகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற திட்டமிடப்பட்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிப் பொதுச்செயலாளரது ஊடக சந்திப்பும் இடைநிறுத்தப்பட்டது.

அத்துடன், வழமையாக இடம்பெறுகின்ற ஐக்கிய நாடுகளின் பேச்சாளரது நாளாந்த சந்திப்பு, நேற்று நடைபெறவிருந்த சபையின் பிரதிப் பொதுச்செயலாளர் ஜோன் எலிசனின் செய்தியாளர் சந்திப்பின் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது இந்தச் சந்திப்பும் இடைநிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பான் கீ மூனின் ஐக்கிய நாடுகள் சபையில், இலங்கை தொடர்பான கேள்விகளை முன்வைக்க தடை செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் கூறும் விடயங்களுக்கு புறம்பாக எதனையும் கேட்க முடியாதிருக்கிறது எனவும் இன்னர் சிட்டி பிரஸ் தெரிவித்துள்ளது.

## கிழக்கில்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சட்டமூலத்திற்கான அங்கீகாரத்தை கிழக்கு மாகாணசபை வழங்கக்கூடாதென வலியுறுத்திய நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முழு ஒத்துழைப்புடன் 'திவிநெகும'விற்கான அங்கீகாரத்தை அரசு நேற்று பெற்றுக்கொண்டது.

கிழக்கு மாகாணசபையில் 'திவிநெகும' நீண்ட விவாதத்திற்குப் பின்னர் நேற்றைய தினம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஆளுங்கட்சிக்கு ஆதரவாக 21 வாக்குகளும் எதிராக 15 வாக்குகளும் கிடைத்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் எதிராக வாக்குகளை அளித்தன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்களில் ஒருசாரார் 'திவிநெகும' சட்டமூலம் கிழக்கு மாகாணசபையில் அங்கீகாரம் பெற முஸ்லிம் காங்கிரஸ் ஒத்துழைக்கக்கூடாதென்று தீவிர அழுத்தங்களை வழங்கிய போதும் அவை எதுவுமே பயனளிக்கவில்லை.

கிழக்கு மாகாணசபையில் 'திவிநெகும' சட்டமூலத்திற்கு அங்கீகாரம் வழங்குவதா இல்லையா என்பது குறித்தும், இது விடயத்தில் அரசுக்கு ஆதரவளிப்பதா எதிர்த்து நிற்பதா என்பது பற்றியும் நேற்றுக் காலைவரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இறுதிமுடிவு எதனையும் எடுத்திருக்கவில்லை.

என்றபோதிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணசபையில் அரசுக்கு ஆதரவளிக்காது போனால் அவர்களை அமைச்சரவையிலிருந்தும், அரசிலிருந்தும் நீக்குவதென அரச உயர்மட்டம் தீர்மானித்து அதனை மு.காவிற்குத் தெரியப்படுத்தியதையடுத்தே ஆதரவளிக்கும் முடிவை முஸ்லிம் காங்கிரஸ் தலைமை எடுத்ததாகத் தெரிகிறது.

## ஐ.நா. மீது...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அமர்வின் பொது விவாதத்தின் போது உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகளின் பட்டயத்தில் பொறிக்கப்பட்ட அடிப்படைத் தத்துவமான நாடுகளின் சமத்துவம் என்பதன் அடிப்படையில் சர்வதேச பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் இலங்கை நம்பிக்கை கொண்டுள்ளது.

உலகளவில் பொருளாதார நெருக்கடி காணப்பட்ட நிலையில் கடந்த 2011இல் இலங்கை 8.2 சதவீத பொருளாதார வளர்ச்சியைக் கண்டது.

போரினால் பாதிக்கப்பட்ட சகல தரப்பினரதும் குறைகளைத் தீர்த்துவைப்பதில் இலங்கை உறுதியாக உள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்காக ஒரு வேலைத்திட்டத்தை இலங்கை வகுத்துள்ளது.கால எல்லை நிர்ணயிக்கப்பட்டு மனித உரிமைகளுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய தேசிய வேலைத்திட்டம் ஒன்றை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

போருக்குப் பின்னரான நல்லிணக்கப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென வெளிப்படையான, ஜனநாயக வழியாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அரசு முன்மொழிந்துள்ள போதும் எதிர்க்கட்சிகள் இதைக் குழப்பி வருகின்றன.

இலங்கை 66/6 இலக்க ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தீர்மானத்தை ஆதரிக்கிறது.கியூபாவுக்கு எதிரான நீதியில்லாத பொருளாதார, வர்த்தக, நிதித் தடைகள் நீக்கப்பட வேண்டும்.பலஸ்தீன மக்களுக்கான ஒரு நாடு அமைவதற்கு வழிவகுக்கும் பலஸ்தீனம் மீதான ஐ.நா.வின் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவதை இலங்கை பூரணமாக வரவேற்கின்றது.

சமயங்கள் மற்றும் சமயத் தலைவர்களை இழிவுபடுத்தும் செயல்கள் யாவற்றையும் இலங்கை கண்டிக்கிறது.

பேச்சுரிமை எமது விழுமிய முறைமையில் அடிப்படையாக இருப்பினும் நாம் எந்தவொரு சமயத்தினரதும் உணர்வுகளையும் புண்படுத்தக்கூடாது.சமயங்களை கேவலமாகச் சித்திரிப்பதை தடுக்கவும் சமய சின்னங்களை வர்த்தக நலனுக்காகப் பயன்படுத்தப்படுவதை தடுக்கவும் சகல பொறிமுறைகளும் பயன்படுத்தப்பட வேண்டும் -என்றார். (த)

## காலத்தை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பான் கீ - மூனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது, போருக்கு பிந்திய இலங்கையின் நிலைமைகள் குறித்தும் ஐ.நாவுடனான ஒத்துழைப்புக் குறித்தும் பான் கீ மூன் கேட்டறிந்து கொண்டார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டம், மீள்குடியேற்றம் ஆகியன குறித்தும், இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் ஐ.நா. பொதுச்செயலர் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, கடந்தகால மோதல்களுக்குக் காரணமான பிரச்சினைகளுக்கு இலங்கை அரசு காலதாமதமின்றி அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டறிய வேண்டும் என்று பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும் பங்கு கொண்டார்.

## 'திவிநெகும' குறித்து...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வாதாடவிருக்கின்றார்.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி இந்த மனுவில் எதிர் மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். மாவை சேனாதிராஜா சார்பில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட 'ரிட்' மனுவின் சாரம்சம் வருமாறு:-

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மனுதாரர் தமது சார்பிலும், வடக்கு மாகாண மக்களுக்கு 13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட உரிமைகளைப் பாதுகாத்து உறுதிப்படுத்தும் நோக்குடனும் இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றார்.

எதிர்மனுதாரராகக் குறிப்பிடப்படும் வடக்கு மாகாண ஆளுநர் வடக்கு மாகாண மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லர். எனவே, அவர் எந்த வகையிலும் வடக்கு மாகாண மக்களின் கருத்து நிலைப்பாட்டையோ, அபிலாஷைகளையோ, விருப்புக்களையோ பிரதிபலிப்பவராகக் கருதப்பட முடியாதவர். ஆகவே, வடக்கு மாகாண மக்களின் நியாயமான கருத்துக்களை நேர்மையாக வெளிப்படுத்துவதற்கன தகுதியோ திறமையோ உடையவராக அவரைக் கொள்ள முடியாது.கடந்த ஓகஸ்ட் 10ஆம் திகதி 'திவிநெகும' சட்டமூலம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டது.

இந்தச் சட்டமூலத்தை விசாரித்த உயர்நீதிமன்றம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் மாகாண சபைக்குரிய பட்டியலில் அடங்குபவை என்பதால் அச்சட்டமூலத்தை அரசமைப்பின் 154 (எ)(3) ஆம் பிரிவின் கீழ் மாகாண சபைகளின் கருத்துக்கு ஜனாதிபதி சமர்ப்பிக்காத நிலையில் அது சட்டமாக முடியாது என உத்தரவிட்டது.

உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை அடுத்து மேற்படி சட்டமூலம் நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டதாக மனுதாரருக்குத் தெரியவந்தது.

இப்போது அந்தச் சட்டமூலம் நாட்டின் எட்டு மாகாண சபைகளுக்கும் அவற்றின் கருத்துக்களை அறிவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது என மனுதாரருக்கு நம்பகமாக அறியவந்துள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண சபையின் கருத்தை அறிவதற்காகவும் இச்சட்டமூலம் ஜனாதிபதியினால் அனுப்பப்பட்டிருப்பதாக மனுதாரருக்கு அறியக் கிடைத்துள்ளது.

இவ்விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் தமது கருத்தை ஜனாதிபதிக்கு வெளிப்படுத்தியுள்ளார் அல்லது விரைவில் வெளிப்படுத்தவுள்ளார் என மனுதாரர் கருதுகிறார்.

அதேசமயம், இந்தச் சட்டமூலத்தை ஜனாதிபதி வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்ப கருத்துக் கோருகின்றமை அவர் வடக்கு மாகாண ஆளுநர் என்ற வகையிலா அல்லது கலைக்கப்பட்ட வடக்கு மாகாணசபைக்கு என்ற விதத்திலா என்பது மனுதாரருக்குத் தெரியவில்லை.

ஒரு சட்டமூலம் தொடர்பில் மாகாண மக்களின் கருத்து நிலைப்பாடு இதுதான் என்பதை மக்களினால் தேர்ந்தெடுக்கப்படாத பிரதிநிதியாக இல்லாத ஆளுநரால் பிரதிபலிக்க முடியாது.

இதேசமயம், மாகாணசபை ஒன்றைக் கலைக்கும் அதிகாரம் உள்ள மாகாண ஆளுநரிடம் ஒரு சட்ட மூலம் தொடர்பில் மாகாண மக்களின் கருத்து நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் தகுதியும் உரிமையும் உள்ளது என்று கருதும் நிலைப்பாடு உருவாகுமானால் அது பல ஆபத்தான, விபரீதமான விளைவுகளை ஏற்படுத்திவிடலாம்.

ஜனாதிபதியின் வழிகாட்டலில் செயற்படும் ஆளுநர் ஒருவருக்கு அத்தகைய தகுதியும் அதிகாரமும் இருக்குமானால் மாகாண சபைகளைக் கலைத்துவிட்டு, அரசமைப்பின் கீழ் மாகாணசபைப் பட்டியல் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பிடுங்கிக் கொள்ளும் எதேச்சதிகார நிலைமை உருவாகும்.

அதாவது அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமைகள் விடயத்தில் சட்ட வாக்கத்துறையினால் மட்டுமே கையாளக்கூடிய நிலைமைக்கு மாறாக, நிறைவேற்று அதிகாரத்துறையே அதில் நேரடியாகத் தலையிட்டுக் கையாள்வதற்குரிய பாதுகாப்பை வழங்கி, அரண் அமைப்பதாக அது அமைந்துவிடும்.

எனவே, ஜனாதிபதியின் முகவராக ஒரு மாகாணத்துக்கு நியமிக்கப்பட்ட ஆளுநர் அந்த மாகாண மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபையின் கருத்துகளைப் பிரதிபலிக்கும் தகைமை உடையவராகக் கருதப்படக்கூடாது. அப்படிக் கருதப்படுமானால் அது அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட நோக்கத்தையே சிதறடித்துவிடும்.

எனவே -

இம்மனு தொடர்பில் எதிர் மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பவும் -

மேற்படி சட்டமூலம் தொடர்பில் வடக்கு மாகாண சபையின் சார்பில் கருத்து இதுதான் என்பதை எதிர்மனுதாரர் வெளிப்படுத்த முடியாது என இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை உடன் வழங்கவும் -

'திவிநெகும' சட்டமூலம் தொடர்பில் வடக்கு மாகாண சபையின் கருத்தை வடக்கு மாகாண ஆளுநர் பிரதிபலிக்க முடியாது என நிரந்தரத் தடை உத்தரவு வழங்கவும் -

மனுதாரர் கோருகின்றார் - என்று உள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வாளாதிருந்தால் மாறும் நம் வாழ்வும் வரலாறும்

வவுனியா மனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த, முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு, மந்துவில் கிராமங்களைச் சேர்ந்த மக்கள், அவர்களின் விருப்பத்துக்கு மாறாக, அடிப்படை வசதிகள் எதுவுமற்ற சூரியபுரம் காட்டுப் பகுதியில் அரசினால் குடியமர்த்தப்பட்டமை இப்போது மறந்த கதையாகிவிட்டது-

கேப்பாபிலவில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம் அந்தப் பிரதேசத்துக்கு மிக்க அவசியமானது என்றும், அதனை மேன் மேலும் பலப்படுத்தப்பட வேண்டியது அவசியமும் இன்றியமையாததும் என்று அரச ஆதரவாளர்களும் அரச ஊடகத்தினர்களும் சேர்ந்து மேளம் கொட்டுகிறார்கள்!

போரினால் இடம்பெயர்ந்தவர்கள், அவரவர் சொந்த இடங்களில் இன்னும் முழுஅளவில் மீளக்குடியமர்த்தப்படவில்லை; அவர்களது சொந்த இடங்களில் அடிப்படைவசதி, வாய்ப்புகளுடன் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

இது மீளக்குடியமர்வுக்கான அனைத்துலக நியமங்களை மீறிய செயற்பாடு என்று எழுந்த குற்றச்சாட்டுக்களையும், விமர்சனங்களையும் காதில் போட்டுக்கொள்ளாமல், அரசாங்கம் தான் நினைத்ததை, திட்டமிட்டதை செய்து முடித்து விட்டது! வெற்றி அதற்கே!!

இப்போது, அரசின் அடுத்த கட்ட வேலைத்திட்டம் ஆரம்பமாகி உள்ளது. மனிக்பாம் அமைந்துள்ள சுமார் 6,200 ஏக்கர் பரப்பளவு நிலத்தை இராணுவத்தின் பாவனைக்கும் பயன்பாட்டுக்கும் வழங்குவதற்கு அது முடிவு செய்துவிட்டது. இது தமிழ் மக்களின் நிலங்களை கபளீகரம் செய்யும்அரச வாய்ப்பாடுகளின் மற்றொரு வடிவம்.

கிடைக்கக் கூடிய தகவல்களின் பிரகாரம், வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மனிக்பாம் ஆரம்பத்தில் - அண்ணளவாக ஐம்பதுகளில் - தனியாருக்குச் சொந்தமான விவசாயப் பண்ணையாக அமைந்திருந்தது.

அங்கு ஆழ்கிணறுகள் அமைக்கப்பட்டு பயிர்ச் செய்கையும் விலங்கு வேளாண்மையும் மேற்கொள்ளப்பட்டன. மூன்று தசாப்தங்களுக்கு முன்னர், அரசுக்கும் தமிழ் இளைஞர்களுக்கும் இடையில் சிறு அளவில் ஆயுத மோதல்கள் ஆரம்பமான கட்டத்தில், பொருளாதார வளர்ச்சி நாடிய பண்ணைகள் செயலிழக்க நேர்ந்தது.

அங்குள்ள நீர்வளத்தை ஆதாரமாக்கி, வன்னி இறுதிப் போரின் போது இடம்பெயர்ந்தவர்களை தங்க வைப்பதற்கான அகதி முகாம்கள் அங்கு அரசினால் அமைக்கப்பட்டன.

முதலில் மனிக்பாமில் உருவாக்கப்பட்ட அகதி முகாம்கள், பின்னர் அகதிகளின் எண்ணிக்கை இலட்சக் கணக்கில் நாளாந்தம் மேலுயர உயர 6,200 ஏக்கர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டன. சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்கள் கம்பி வேலிகளால் உருவாக்கப்பட்ட முகாம்களுக்குள் நரகலோக வாழ்க்கை நடத்த நிர்ப்பந்தமாகியது. அது நலிவுற்ற வரலாறும் ஆகிவிட்டது.

பன்னாட்டு அரசுகளின் பல்வேறு வகைப்பட்ட அழுத்தங்களால், மனிக்பாம் மற்றும் அதனுடன் இணைந்த முகாம்கள் மூடப்பட்டதும் அரசாங்கத்தின் கழுகுக் கண் மனிக்பாம் மீது ஊன்றி விழுந்துள்ளது.

கடந்த வாரத்தில், மனிக்பாமை (முகாமை) மூடும் போது, அதனை இராணுவத் தரப்பிடம் கையளிக்குமாறு கொழும்பிலிருந்து உத்தரவுகள் நிர்வாகத் தரப்புகளுக்குப் பறந்தன.

ஏற்கனவே (மூன்றாவது பகுதியில்) இயங்கி வந்த இராணுவப் பயிற்சி முகாமை விஸ்தரிப்பது, அதனை இராணுவ விவசாயப் பண்ணையாக மாற்றுவது, முகாம் பகுதியை அண்டியுள்ள ஆற்றிலிருந்து கோடை காலத்திலும் விவசாய உற்பத்திகளைப் பயிர் செய்தல், அந்த ஆற்றங்கரை ஓரமாக சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வது, என்பன ஏற்கனவே உள்ளூரத் திட்டமிடப்பட்ட வகையறாக்கள் என்று தகவல்கள் அரசல்புரசலாக இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன!

நாடு சுதந்திரம் பெற்ற ஒரு சில வருடங்களில், அபிவிருத்தி சார்ந்த குடியேற்றங்கள் என்ற "லேபலில்" கிழக்கு மாகாணத்தில் தமிழர் பிரதேசங்கள் கபளீகரம் செய்யப்பட்டமை இப்போது "வரலாறு" ஆகிவிட்டது. இப்போதும் அரசின் அனுசரணையுடன் அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

வடக்கிலும், அதே காலப் பகுதியில் வவுனியாவில் நூற்றுக் கணக்கான சிங்கள மக்களுக்கான கிராம சேவையாளர் பிரிவுகளும், உதவி அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர் பிரிவுகளும் முளைத்தன, தோற்றுவிக்கப்பட்டுவிட்டன. இப்போதும் அது தொடரவில்லை என்று சொல்வதற்கு இல்லை.

அதற்குப் புறம்பாக, வடக்கு மாவட்டங்களில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில், இராணுவத்தினரின் உறவினர்களைக் குடியமர்த்தும் பணிகள், கண்ணுக்குப் புலப்படும் விதத்திலும், புலப்படாத உபாயங்களுடனும் ஒப்பேற்றப்படுகின்றன.

இது, தமிழ் மக்களின் பிறப்புரிமைகளான நிலம் மற்றும் மொழி உரிமைகளைச் சீண்டிச் சிதைக்கும் பேரின வாதத்தின் பிரதான வடிவங்களில் முதன்மையானது. அனைத்துலக மட்டத்தில் இஸ்ரேல், ஆஸ்திரேலியா ஆகியன எமது இன்றைய நிலைக்குச் சமாந்தரமானவை என்று கொள்ளலாம்.

மொத்தத்தில் -

தமிழ் மக்களின் இருப்பையும், அடையாளத்தையும், அவர்களின் பூர்வீக நிலத்தையும் முறையே நலிவுறச் செய்து, கபளீகரம் செய்யும் பெரும் நயவஞ்சகத் திட்டம் உள்ளாடும் கள்ளாடுமாக, மெதுமெதுவாக அரங்கேற்றப்பட்டு வருகிறது.

ஜனநாயகம் அல்லது பெரும்பான்மை இனத்தவரின் மேலோங்கிய ஆட்சி என்ற நிலை நின்று, தமிழர்களின் இரண்டு கண்களான நிலம் மற்றும் மொழியை அபகரிக்கவும் புறந்தள்ளவும் திட்டமிட்ட முறையில் காரியங்கள், கைங்கரியங்கள் நடந்தேறுகின்றன, நிறைவேற்றப்படுகின்றன. தட்டிக் கேட்க எவருமில்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டம் என்ற போக்கில் அநீதிகளும், அதீத அதிகாரங்களும் ஒப்பேற்றப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களின் தலைகள் மீது ஏற்றப்படுகின்றன.

இது தொடர்பில் தம்மை மனதார ஈடுபடுத்தி, எமது தனித்துவத்தையும் இருப்பையும் காப்பாற்ற உழைப்பது முழுத் தமிழ் மக்களதும் உணர்வாக வடிவெடுக்க வேண்டும்.

வெறுமனே அரசியல் வாதிகளின் கைகளில் இதனைக் கொடுத்து விட்டு மக்கள் வாளாதிருந்தால், வரலாறு மாறிவிடும்; எதிர்காலம் எங்களை மன்னிக்கவும் மாட்டாது. இதனை எம்மவர் ஒவ்வொருவரும் ஆழ்மனதிருத்திச் சிந்திப்போமாக.

# விதிமுறைகளைப் புறந்தள்ளிய அரசியல் பரிந்துரையால் குழப்பம்

## கோப்பாயில் இரு கழகங்களிடையே மனக்கசப்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

அரச அதிகாரிகளின் தெரிவைப் புறக்கணித்து விதிமுறைகளுக்கு மாறாக, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கிய பரிந்துரையால் வலி.கிழக்கில் இரு விளையாட்டுக் கழகங்களிடையே மனக்கசப்பு ஏற்பட்டுள்ளது. முரண்பாட்டு நிலையும் தோன்றியுள்ளது.

கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்ற விளையாட்டுத்துறை தொடர்பிலான கலந்துரையாடலில் வடக்கிலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் ஒவ் வொரு விளையாட்டுக் கழகத்தைத் தெரிவு செய்து அதன் மைதானத் தைப் புனரமைப்பதுடன் திறந்த வெளி அரங்கும் அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைவாக யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மூன்று விளையாட்டுக்கழக மைதானங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன. நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம், எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம், வீனஸ் விளையாட்டுக் கழகம் என்பனவே பரிசீலிக்கப்பட்டன. இவர்களுக்கான கலந்துரையாடல் கடந்த மாதம் 12 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடை பெற்றது.

இதில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தை வெளியாள்கள் பயன்படுத்தமுடியாது என்ற காரணத்தினால் தெரிவிலிருந்து நீக்கப்பட்டது. வீனஸ் விளையாட்டுக் கழகத்திடம் மைதானத்திற்குரிய உறுதி இல்லாத காரணத்தால் அதுவும் தெரிவிலிருந்து நீக்கப் பட்டது. எவறெஸ்ட் வி.கழகம் தெரிவு செய்யப்பட்டது.

எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரிக்குக் கோப்பாய் பிரதேச செயலரால் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

ஆனால் திடீரென இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின், வீனஸ் கழகத்தை மேற்படி தெரிவுக்குத் தான் பரிந்துரை செய்வதாக தெரிவித்துக் கோப்பாய் பிரதேச செயலருக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் மேற்படி பரிந்துரைக் கடிதத்துடன், வீனஸ் விளை யாட்டுக் கழகத்தின் மதிப்பீட் டறிக்கையும் இணைத்து மேல் நடவடிக்கைக்காக யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் ஏன் தெரிவிலிருந்து நீக்கப்பட்டது என்பது தொடர்பில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபனிடம் உதயன் கேட்டபோது, "ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கடிதம் மூலம் பரிந்துரை அனுப்பியிருந்தார். அதனை நாம் மாவட்ட செயலகத்துக்கு அனுப்பியுள்ளோம். இதில் நாம் ஒன்றும் செய்ய முடியாது" - என்றார்.

அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்படி முறை தவறி நடப்பது குறித்து எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் கவலை அடைந்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரின் இந்தத் தான் தோன்றித் தனமான செயற் பாட்டால் மேற்படி இரு விளை யாட்டுக் கழகத்தினரிடையேயும் மனக்கசப்பும் முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. (உ-5)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒரு தொகுதி சீன நிறுவனத்திடம்

கொழும்பு, ஒக்.3

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபத்தின் வசமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒரு தொகுதியை சீன நிறுவனம் ஒன்றுக்கு கையளிப்பது சம்பந் தமாக சில உயர்மட்டப் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 360 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 107 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன்மூலம் இலங்கையின் எண்ணெய் ஏகபோக உரிமை கூட்டுத் தாபனத்திடம் இருந்து கைநழுவிப் போயுள்ளது என்றும் அதன் பின்னர் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த முடிவின் காரணமாக சீனாவும் இந்தியாவும் இலங்கையில் நிகழ்த்திவரும் போட்டி மேலும் தீவிரமடையக்கூடும். அத்தோடு, இந்தப் பேச்சுகள் தொடர்பாக சீனத் தூதரக மட்டத்திலான அதிகாரி ஒருவர் பங்களிப்புச் செய்துள்ளார். (ம-22)

## கைதடியில் கண்காட்சி 7 ஆம் திகதி வரை

யாழ்ப்பாணம்,ஒக்.3

கைதடி அரச முதியோர் இல்லத்தில் முதியோர் வாரத்தை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்புக் கண்காட்சி எதிர்வரும் 7 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும். இதில் பாடசாலை மாணவர்களை கலந்து கொண்டு பயன்பெறுமாறு இல்லத்தின் அத்தியட்சகர் ரி.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

இந்தச் சிறப்புக் கண்காட்சியில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவச பஸ் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு, இலவச போக்குவரத்து வசதியைப் பெற விரும்பும் பாடசாலைகள் கைதடி முதியோர் இல்லத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அத்தியட்சகர் கூறியுள்ளார்.(த-17)

## செய்தி விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 3

கடந்த 30ஆம் திகதி உதயன் பத்திரிகையில், 'சிறுவர் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகம் தமிழ் இன அழிப்பின் ஓர் அடையாளமே' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் கொழும்புத் தலைமையகம் விளக்கம் ஒன்றைத் தெரிவித்துள்ளது.

அன்றையதினம் கருத்துரை வழங்கிய சிறுவர் பாதுகாப்பு ஆலோசகர் ஜெ.தற்பரனின் உரையில் அந்தப் பகுதி தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஊடகப் பொறுப்பாளர் மேனகா கல்யானரட்னே தெரிவித்துள்ளார்.

அதிகரித்துவரும் பாலியல் துஷ்பிரயோகங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் என்பன தமிழ் இன அழிப்பின் குறிகாட்டி என்ற சாரப்பட தற்பரனின் கருத்துக்கள் அமைந்திருக்கவில்லை என்று அவர் கூறுகின்றார். (உ-01)

# சேவைக் காலத்துக்கு ஏற்றவாறு பணியாளர்களுக்குப் பதவியுயர்வு

## கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக்.3

கூட்டுறவுச் சங்கங்களில் கூட்டுறவு உயர்தரப் பயிற்சி பெற்றவர்களை அவர்களின் சேவைக் காலத்துக்கு ஏற்றவாறு பொது முகாமையாளர் பதவிக்கு உள்வாங்குவதற்குக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

பெரும்பாலான கூட்டுறவு நிறுவனங்களில் பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடம் நிரப்பப் படாமல் உள்ளது. சங்கங்களில் உயர் பதவிகளில் இருப்போரே தற்போது தற்காலிகமாக மேலதிக பொது முகாமையாளராகவும் கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வாறு பொது முகாமையாளர் பதவிகள் நிரப்பப்படாமல் உள் ளமை குறித்துக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு கவனத்தில் எடுத்து இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டது.

ஏற்கனவே பலருக்குப் பொது முகாமையாளர்களுக்கான கல்வித் தகைமை மற்றும் சேவை மூப்பு அடிப்படை என்பன இருந்தும் இந்தப் பதவிக்கு நியமிப்பதில் இழுபறி நிலை இருந்தது.

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு இது குறித்து ஆராய்ந்து சங்கங்களில் கூட்டுறவு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பணியாளர்களின் சேவைக் காலத்தைக் கருத்தில் கொண்டு அவர்களைப் பொது முகாமையாளர் பதவிக்கு உள்வாங்குவதற்கு அனுமதித்துள்ளது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமைகள் ஆணைக்குழு கிளி, முல்லை மாவட்டங்களிலும்

யாழ்ப்பாணம், ஒக்.3

இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப் பாணப் பிராந்திய அலுவ லகம் தனது சேவையை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் விஸ் தரிக்கவுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இன்று தொடக்கம் ஒவ்வொரு புதன் கிழமை தோறும் நடமாடும் சேவையாக ஆணைக்குழு வினரின் பணிகள் இடம்பெற வுள்ளன.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை கிளி நொச்சி மாவட்டச் சுகாதார வைத்திய அதிகாரி காரியா லயக் கட்டடத்தில் இந்தச் சேவை இடம்பெறவுள்ளது.

பொது மக்கள், பொது அமைப்புக்கள், அரச அலுவலர்கள் ஆணைக் குழுவுக்கு விடுத்த வேண்டு கோளைத் தொடர்ந்து இந்த நடமாடும் சேவை இடம் பெறவுள்ளது.

இதனைப் பொதுமக்கள் அரச அலுவலர்கள் ஆகி யோர் பயன்படுத்திக் கொள்ளுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளரான த.கனகராஜ் யாழ்.பணி

**பொதுமக்கள் பொது அமைப்புக்கள் ஆணைக்குழுவுக்கு விடுத்த வேண்டு கோளைத் தொடர்ந்து இங்கு நடமாடும் சேவை இடம் பெறவுள்ளது.**

மனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந் திப்பின் போது தெரிவித்தார்.

போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட் டங்களைச் சேர்ந்த மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின் றனர். இவர்கள் எதிர்கொள் ளும் பிரச்சினைகள் தொடர் பாக முறையிடுவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற அமைப்புக்கள் இதுவரை இல்லாத நிலையே இங்கு காணப்பட்டது.

தற்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் சேவைகள் இங்கு இடம்பெறவுள்ளதால் இங் குள்ள மக்கள் அதிக பயன் களைப் பெறுவரென எதிர் பார்க்கப்படுகின்றது. (க-7)

## மரங்களுக்கு தீ வைத்துவிட்டு தறித்தவர்கள் விளக்கமறியலில்

வலி.வடக்கு, ஒக்.3

வவுனியா ஓமந்தைக் காட்டுப் பகுதியில் தீயை வைத்துவிட்டு மரங்களைத் தறித்து கடத்த முற்பட்ட ஐந்து சந்தேகநபர்கள் விளக் கமறியலில் வைக்கப்பட்டுள் ளனர்.

இவர்கள் காட்டில் தீயை வைத்துவிட்டு 20 வீரை மரங்களைத் தறித்த துடன் அவற்றைக் கடத் தவும் முற்பட்டுள்ளனர்.

இது தொடர்பான தக வல் கிடைத்ததும் அங்கு சென்ற பொலிஸார் சந் தேகநபர்கள் ஐவரையும் கைது செய்தனர். பின்னர் வவுனியா நீதிமன்றத்தில் இவர்கள் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இவர் களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவர்கள் மீது காட் டுக்குத் தீ வைத்தமை, சட்ட விரோதமான வகைகளில் மரங்களைத் தறித்துக் கடத்த முற்பட்டமை ஆகிய குற்றச் சாட்டுகளின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (க-86)

## கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் திருக்குறள் மாநாடு அடுத்த வாரம்

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடத்தும் 10 ஆவது திருக்குறள் மாநாடு எதிர்வரும் 08 ஆம் திகதி கிளிநொச்சி கனகபுரத்தில் இடம்பெறவுள்ளது.

கனகபுரம் விளையாட் டுத்திடலுக்கு அருகிலுள்ள நண்பர்கள் விருந்தக மண்டபத்தில் காலை 9 மணி யளவில் திருக்குறள் கருத் தரங்குடன் இந்த மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

பிற்பகல் 2.30 மணியள வில் திருவள்ளுவர் விழா வும் பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளன.

காலை அமர்வுகளுக்கு வே.இறைபிள்ளை தலைமை தாங்கவுள்ளார். முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், வேளாண்மைப் பணிப்பாளர் க.சுப்பிரமணியம், கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ் வரன் மன்னார் தமிழ்ச் சங்கத் தின் செயலளார் சு.சிவகரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

மாலை நிகழ்வுகள் க.ம.பத்ம நாதன் தலைமையில் இடம் பெறவுள்ளன. வடக்கு மாகாண கல்வி விளையாட்டுத்துறை, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரான சி.சத்தியசீலன் பிரதம விருந் தினராக கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி.றூபாவதி கேதீஸ் வரன், கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி அரு ளானந்தன் யாவிஸ், கிளி நொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபர் சி. பாலகிருஷ்ணன், கிளிநொச்சி கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையா ளர் சி.தவராசா ஆகியோர் கலந்து கொள்வர். (க)

# வவுனியா வடக்கில் குடியேற்றம் தமிழர் நிலங்கள் பறிப்பு

### எல்லைக் கிராமங்களுக்கு செல்ல மக்கள் அச்சம்

நெடுங்கேணி, ஒக்.3

வவுனியா வடக்கிலுள்ள பல தமிழ்க் கிராமங்களில் பெரும்பான்மையின மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள தனிக்கல், டொலர் பாம், கென்ற் பாம் ஆகிய பாரம்பரிய தமிழ்க் கிரா மங்களே இவ்வாறு சிங்களக் கிராமங்களாக உருமாறி விட்டன என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

வவுனியா வடக்கிலுள்ள நெடுங்கேணிப் பிரதேசத் தின் வெடிவைத்தகல்லுக் கிராமத்துக்கு அப்பால் எந்த வொரு தமிழ் அதிகாரிகளோ அல்லது மக்களோ செல்ல முடியாத அவல நிலையே நீடிப் பதாகத் தெரிய வருகின்றது.

மேலும் 1984 ஆம் ஆண்டு வவுனியா வடக்கின் பல கிராமங்களிலிருந்து விரட்டப் பட்ட தமிழ் மக்கள் இன்ன மும் தமது சொந்த இடங் களுக்குச் செல்ல முடியாத நிலையே நீடிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இங்கு வந்து மீள்குடிய மர்வதற்கு மக்கள் தயங்கு வதாக அரச அதிகாரிகள் கூறிய போதிலும் ஒதியமலை யில் நிகழ்ந்த படுகொலை தொடர்பான அச்ச உணர்வு மக்களின் மனங்களிலிருந்து இன்னமும் மறையாத நிலையி லேயே உள்ளதை அவதா னிக்க முடிகின்றது.

இதனால் எல்லைக் கிராமங் களுக்குச் சென்று மீள்குடிய மர்வதில் அவர்கள் தாமதம் காட்டுகின்றனர்.

மேலும் புலம்பெயர்ந்த வர்கள், போரில் இறந்தவர் கள் ஆகியோரின் காணி களை அரசுடைமையாக்கும் செயற்றிட்டமொன்று அரசி னால் வவுனியா வடக்கில் துரிதமாக செயற்படுத்தப் பட்டுவருகிறது என்றும் இதற்கு இங்குள்ள தமிழ் அதிகாரிக ளும் உடந்தையாக இருக் கின்றனர் என்றும் இங்குள்ள மக்கள் வேதனையுடன் தெரி விக்கின்றனர். (க-18)



*தருமபுரம் இல.1 அ.த.க. பாடசாலையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட சிறுவர் பூங்காவின் தோற்றம். (க-405)*

## வவுனியா வடக்கிலும் கிரவல் மண் குவியல்

கிளிநொச்சி, ஒக்.3

வவுனியா வடக்கின் சில பகுதிகளிலுள்ள வீதிகளில் பரவாத நிலையில் குவித்து வைக்கப்பட்டுள்ள கிரவல் மண் குவியல்களால் போக்கு வரத்துச் செய்வதில் மக்கள் அதிக இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இங்குள்ள நைனாமடு, ஆயிலடி, சின்னடம்பன் ஆகிய பகுதிகளிலுள்ள வீதிகளில் குவிக்கப்பட்டுப் பரவாத நிலை யில் காணப்படும் கிரவல் மண் குவியல்களே இவ்வாறு போக்குவரத்துக்கு இடையூ றான வகையில் காணப் படுகின்றன.

இந்த வீதியைப் புனர மைக்கவெனக் குவிக்கப் பட்டுள்ள இந்த மண் குவி யல்கள் நீண்ட காலமாகவே பரவப்படாது இருப்பது தொடர் பாக யாரிடம் முறைப்பாடு தெரிவிப்பது என்ற குழப்பத் தில் மக்கள் உள்ளனர்.

மேலும் உரிய அதிகாரி கள் இது தொடர்பாகக் கவனம் செலுத்துவதுடன் இந்த மண் குவியல்களைப் பரவுவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் அவர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். மக்கள் மீள்குடியமர்த்த பல இடங்களி லும் இத்தகைய செயற்பாடு கள் இடம்பெற்று வருகின் றமை குறிப்பிடத்தக்கது.(க-18)

## முகமாலை வடக்கில் நேற்றுமுன்தினம் 20 குடும்பங்கள் மீள்குடியமர்வு

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முக மாலை வடக்குப்பகுதியில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 92 பேர் நேற்று முன்தினம் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை அவர் களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

முகமாலை வடக்கு பொந்தர் குடியிருப்பு நாச்சிமார் கோவில் முன்றிலில் பளைப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபாவதி கேதீஸ் வரன், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதி கள், அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

முகமாலை வடக்கு பொந் தர் குடியிருப்புப் பகுதிகளில் 68 குடும்பங்கள் மீள்குடிய மர்த்தப்படவுள்ளன. நேற்று முன்தினம் 20 குடும்பங்க ளைச் சேர்ந்த 92 பேர் தமது பதி வுகளை மேற்கொண்டனர்.

மீள்குடியமர்ந்த இவர் களுக்கு உடனடியாக உதவிப் பொருள்களும், சமைத்த உணவுகளும் வழங்கப்படு வதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித் துள்ளார். (க-6)

## குறைந்து வரும் வீதி இராணுவக் காவலரண்கள்

கிளிநொச்சி, ஒக்.3

கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களிலுள்ள வீதிகளின் இருமருங்கிலும் காணப்பட்ட இராணுவக் காவலரண்களின் எண் ணிக்கை குறைக்கப்பட் டுள்ளதாக தெரிய வருகின் றது.

கிளிநொச்சி முல்லைத் தீவு மாவட்டங்களின் ஏ-35, ஏ-32, ஏ-9 மற்றும் ஏனைய குடியிருப்பு வீதிகளின் முக்கிய சந்திகள், மற்றும் பொது இடங்களில் இருந்த இராணுவக் காவலரண் களின் எண்ணிக்கைகள் குறைக்கப்பட்டுள்ளன.

**ஆரம்பத்தில் அதிக காவலரண்கள் இங்கு அமைந்திருந்த போது பொதுமக் களுக்குப் பல்வேறு இடையூறுகள் காணப்பட்டன.**

ஏ-35 வீதியின் பரந்தன் சந்திக்கு அண்மித்த பகுதி கோரக்கன் கட்டுச் சந்தி, முரசுமோட்டைச் சந்தி, வெலிக் கண்டல் சந்தி, புளியம் பொக்கணைச் சந்தி, மற்றும் ஏனைய கிராமிய வீதி களிலும் பொது இடங்களி லும் காணப்பட்ட சுமார் 20 இற்கும் மேற்பட்ட காவல ரண்கள் அகற்றப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் அதிக காவ லரண்கள் இங்கு அமைந் திருந்த போது பொதுமக் களுக்குப் பல்வேறு இடையூ றுகள் காணப்பட்டன. தற் போது காவலரண்களின் எண் ணிக்கை குறைக்கப்பட்டுவரு வதால் இடையூறு குறைந்து பொதுமக்களின் போக்கு வரத்துக்கள் இலகுவாக மாறியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை செல்லாத 7 சிறுவர்கள் சிக்கினர் திருநெல்வேலியில்

## பெற்றோருடன் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.3

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஜே/114 கிராம அலுவலர் பிரிவில் திருநெல்வேலி பாற்பண்ணைக்கு அருகில் பாடசாலைக்குச் செல்லாமல் விளையாடிக் கொண்டிருந்த 7 சிறுவர்கள் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகியோரிடம் மாட்டிக் கொண்டனர்.

இவர்கள் உடனடியாக சிறுவர்நீதிமன்றுக்குக்கொண்டு செல்லப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

நன்னடத்தை உத்தியோகத்தர் தலைமையில் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் செயற்பாடுகள் தற்போது இடம்பெறுகின்றன.

கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறுவர் நல உத்தியோகத்தர்கள் இந்தப் பகுதிக்குச் சென்றபோது பல சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களைக் கண்டதும் பெருமளவு சிறுவர்கள் ஓடி ஒளித்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உத்தியோகத்தர்களிடம் பிடிபட்ட சிறுவர்கள் பெற்றோர்களுடன் சிறுவர் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுக்குப் பாடசாலை செல்லுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டதுடன் தொடர்ந்தும் பாடசாலைக்குச் செல்லாவிட்டால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவீர்கள் என எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (த-7)

# பாஷையூர் மீன் சந்தையின் கூரை கடுமையாகச் சேதம்

## வியாபாரிகள் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக்.3

பாஷையூர் சந்தையில் மீன்களைக் கூறு போட்டு விற்பனை செய்யும் மண்டபத்தின் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளதால் மழை காலத்தில் வியாபாரிகள் பெரும் சிரமங் களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த மீன் கூறுவிலை மண்டபம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ். மாநகர சபையால் புனரமைப்புச் செய்யப்பட்டது.

தற்போது அதன் கூரைக்குப் போடப்பட்டிருந்த சீற்றுகள் உடைந்து சேதமடைந்துள்ளமையால் மழை காலத்தில் மழை நீர் உட்புகுகின்றது.

இதனால் வியாபாரிகள் மீன் விற்பனையில் ஈடுபட முடியாது சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இதனைப் புனரமைத்துத் தருமாறு மீன் வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-17)

## வேலை வங்கியின் கிளை திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.03

தேசிய வேலை வங்கியின் யாழ்.பிராந்திய காரியாலயம் இன்று மு.ப.10.30 மணிக்கு இலுப்பையடி சந்தியில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனதிராசா, முருகேசு சந்திதரகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இம்முறை பெரும்போகத்தில் அறிமுகமாகிறது புதிய சம்பா

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ். மாவட்டத்தில் இந்தமுறை பெரும்போக நெற்செய்கையின்போது புதிய சம்பா இன நெல் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

பரந்தன் விவசாயப் பண்ணையில் இருந்து இதற்கென 120 புசல் புதிய இனச் சம்பா நெல் தருவிக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பீஜி-358, பி.ஜி.-360 இனங்களை உடைய வெள்ளைச் சம்பா விதை நெல் யாழ்ப்பாணத்துக்குத் தருவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பா விதை நெல் முதன்முறையாக சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் செய்கை பண்ணப்படவுள்ளது.

குடாநாட்டில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட இருக்கும் இந்தப் புதிய விதை நெல் உற்பத்தி வெற்றியளிக்கும் பட்சத்தில் பெரும்போகத்தில் இந்த இனத்தை மேலும் அதிக அளவில் செய்கை பண்ண நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (த-17)

# ரியூசன் செல்லாமல் சாதித்த மாணவன்

தென்மராட்சி, ஒக்.3

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஆயிரக்கணக்கான ரூபா பணம் செலவழித்தும் சித்தி பெறாத மாணவர்கள் மத்தியில் தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்லாமல் தனது சொந்த முயற்சியில் 157 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த மாணவன் குறித்துப் பாடசாலைச் சமூகம் மகிழ்வு கொண்டுள்ளது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவனான தனலிங்கம் ஜேவிட்சன் என்னும் மாணவனே இவ்வாறு சித்தி பெற்றவராவார்.

குடும்ப சூழ்நிலை காரணமாகத் தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்ல முடியாததால் அந்த மாணவன் வகுப்பில் கற்பித்ததைக் கிரகித்து பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கல்லூரியில் இந்த மாணவன் மட்டுமே ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# மூடப்பட்டது புனர்வாழ்வுக் கிளை

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கி வந்த புனர்வாழ்வு புனரமைப்பு செயலகக் கிளை மூடப்பட்டு அதன் பணிகள் தற்போது மாவட்ட திட்டமிடல் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

> புனரமைப்புக் கிளையை மூடுமாறு அமைச்சால் அறிவுறுத்தல் வழங்கப் பட்டிருந்தது.

போர் நடைபெற்ற காலத்தில், கப்பல் பதிவுகள் மேற்கொள்ளல், கப்பல் ஊடாகக் குடாநாட்டுக்குத் தேவையான பொருள்களை இறக்கி விநியோகித்தல், போர் முடிந்தபின்னரான காலப் பகுதியில் நிவாரணப் பணிகள் என்பன புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலக கிளையாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்த நிலையில் கடந்த வருடமே புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலக கிளையை மூடுமாறு அமைச்சால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகக் கிளை மூடப்படாமல், மீள்குடிய மர்வு தொடர்பிலான அறிக்கையிடல் பணிகளை மேற் கொண்டு வந்தது.

தற்போது புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகக் கிளை மூடப்பட்டு அதன் பணிகள் மாவட்ட செயலகத் திட்டமிடல் கிளையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் திட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ம.பிரதீபன் இந்தப் பொறுப்பில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டு கோப்பாய் பிரதேச செயலராக மட்டுமே கடமையாற்றவுள்ளார். (த-5)

## ஆஸ்பத்திரி வீதிக்கு 'காப்பெற்' போடும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்.நகரப்பகுதியில் ஆஸ்பத்திரி வீதிக்கு 'காப்பெற்' போடும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யாழ்.சத்திரச் சந்தியில் இருந்து யாழ்.பஸ்தரிப்பு நிலையம் வரையான பகுதிக்குக் கடந்த மாதத்தில் 'காப்பெற்' போடப்பட்டது.

தற்போது யாழ்.பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து ஆஸ்பத்திரி வீதியும் பலாலி வீதியும் சந்திக்கும் இடம் வரை 'காப்பெற்' போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-17)

# நாகதம்பிரானின் அருள் காண ஆயிரக்கணக்கில் பக்தர்கள்

வடமராட்சி, ஒக்.3

நாகர்கோயில் பூர்விக நாகதம்பிரான் கோயில் சிறப்புத் திருவிழாவான கப்பல் திருவிழா கடந்த 12 வருட இடைவெளிக்குப் பின்னர் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர் கள் இதில் கலந்து கொண் டனர்.

அன்றைய தினம் விசேட மேளக்கச்சேரி, வில்லுப்பாட்டு, கோலாட்ட நடன நிகழ்வுகள் நிறைவுற்றதும் நேற்று அதிகாலை 3 மணிக்கு அலங்காரத் தண்டிகையில் சுவாமி வீதி வலம் வந்து வடக்கு வீதியை அடைந்த போது அங்கு கப்பல் ஆட்டும் கப்பல் திருவிழா நடைபெற்றது. திருவிழாவைத் தொடர்ந்து சுவாமி இருப்பிடம் அடைந்தார்.

பெருமளவு பக்தர்கள் திருவிழாவில் கலந்து கொண்டதுடன் கோயி லின் வடக்கு வீதியில் உள்ள வெண்மணற் பரப்பில் ஆற அமர இருந்தும், உறங்கியும் மணல் திட்டின் ரம்மியத்தை அனுபவித்ததைத் காணக் கூடியதாக இருந்தது. (16-8)

# ஒளிராத வீதி விளக்குகளுக்கு கட்டணம் செலுத்தும் சபைகள்

வடமராட்சி, ஒக்.3

வீதிகளில் ஒளிராத விளக்குகளுக்கு வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் இலங்கை மின்சார சபைக்கு மின்கட்டணங்கள்செலுத்திவருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகள், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பிரதேச சபைகள் கணிசமான மின்குமிழ்களை வீதிகள் தோறும் பொருத்தியுள்ளன.

இந்த மின்குமிழ்களில் சில பொருத்தப்பட்ட நாள்களில் இருந்தும், ஏனைய மின்குமிழ்கள் இடை நடுவிலும் ஒளிராமல் உள்ளன. ஒளிராமல் இருக்கும் மின்குமிழ்களைத் திருத்த இந்தப் பிரதேசத்தில் உள்ள சபைகளான உள்ளூராட்சி மன்றங்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒளிராத மின்குமிழ்களையோ, இணைப்புகளையோ பழுது பார்க்கும் மின்சார ஊழியர்கள் எவரும் இந்தச் சபைகளில் இல்லை.

இந்த நிலையில் வீதி விளக்குகளின் எண்ணிக்கை, அவற்றின் கிலோவாற்ஸின் அளவு, ஒளிரும் மணித்தியாலங்கள் என்பவற்றுக்கு ஏற்ப மின்சார சபை கட்டணங்களை சபைகளிடம் இருந்து வசூலிக்கிறது.

இதனால் ஒளிராத மின் விளக்குகளுக்கும் சபைகள் மின்கட்டணத்தை மின்சார சபைக்கு வீணாகச் செலுத்திக் கொண்டிருக்கின்றன.

வீதிகளில் ஒளிராத மின் விளக்குகளை இலங்கை மின்சார சபையின் உதவிகளைப் பெற்று அவற்றைத் திருத்தி மீளவும் ஒளிர வைக்க வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகள் முன்வர வேண்டும். இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் சபைகளின் நிதி உரிய வகையில் பயன்படுத்தப்படுவதுடன், வரியிறுப்பாளர்களுக்கும் நன்மை கிடைக்கும் என வரியிறுப்பாளர்கள் வற் புறுத்தி வருகின்றனர். (த-8)

# சங்கங்களை இலாபத்தில் செயற்படுத்த ஊழியர்களின் ஒத்துழைப்பு அவசியம்

வடமராட்சி, ஒக்.3

கடந்த காலங்களில் பெருநட்டத்தில் இயங்கி வந்த சங்கத்தை இலாபகரமாக முன்னெடுக்க அனைத்துத் தரப்பு ஊழியர்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். சங்கம் இலாபகரமாக இயங்கினால் ஊழியர்களும் வசதி வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.செல்வராசா கூறினார்.

சங்கத்தின் பணியாளர்கள் சந்திப்பும், நுகர்வோருக்கான மாதாந்தப் பரிசுச் சீட்டிழுப்பும் சங்கத் தலைவர் தலைமையில் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சங்கத் தலைவர் செல்வராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:

சங்கப் பணியாளர்கள் அனைவரும் சங்கத்தை தங்கள் சொத்தாக நினைத்துப் பேண வேண்டும். அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டும். வீழ்ச்சியடைந்துள்ள இந்தச் சங்கத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும். சங்கத்தில் இருந்து குறைந்தது 5 சதவீத சம்பள உயர்வு ஆகுதல் பெற உழைத்துப் பாடுபட வேண்டும்.

நுகர்வோரை ஊக்குவிக்கும் பொருட்டு வருடம் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாவுக்கு மேல் ஒருவர் பொருள்களைக் கொள்வனவு செய்தால் சிறந்த பரி சு வழங்கப்படுவதுடன் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட மேற்பட்ட பொருள்களைக் கொள்வனவு செய்யும் 10 பேரை ஒரு கிளை முகாமையாளர் இணைத்துக் கொண்டால் சிறந்த முகாமையாளருக்கான சிறந்த பரிசு வழங்கப்படும். இந்த நடவடிக்கைகள் சங்கத்தை வளர்ச்சிப்பாதைக்குக்கொண்டு செல்லும் நோக்குடனேயே நடைமுறைப்படுத்தப்படுகிறது- எனத் தெரிவித்தார். (த-8)

## முதியோர் தின விழிப்புணர்வு பேரணி ஞாயிறன்று கைதடியில்

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணி ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி கைதடியில் நடைபெறவுள்ளது. கைதடி அரச முதியோர் இல்லத்தின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வுப் பேரண இடம்பெற்றது.

பெற்றோர்களைப் பிள்ளைகள் எவ்வா பராமரிப்பது என்பது பற்றிய விழிப்புணர்வைச் சமுகத்தில் ஏற்படுத்து வதற்காக இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக முதியோர் இல்ல அத்தியட்சர் தெரிவித்தார். இந்த விழிப்புணர்வுப் பேரணியின் போது வாகனங்களில் ஒட்டுவதற்கான முதியோர் தின விழிப்புணர்வு ஸ்ரிக்கர்களும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது. (த-17)

# யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் 8 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள தாக அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய முன்னாள் படைத் தளபதி மீது லண்டனில் மர்மநபர்கள் கத்திக்குத்து

இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி குல்தீப் சிங் பிரார் மீது மர்ம நபர்கள் லண்டனில் கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது அவர் கத்திக் குத்துக்கு இலக்காகி படுகாயம் அடைந்துள்ளார்.

பஞ்சாப் மாநிலம் சீக்கிய மத பொற்கோயிலில் சீக்கிய தீவிரவாதிகள் மீது 1984 இல் 'புளூஸ்டார்'என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்குத் தலைமை வகித்தவர் லெப்டினன்ட் ஜெனரல் குல்தீப்சிங் பிரார். இவர் தற்போது லண்டன் சென்றுள்ளார். அங்கு ஒரு இரவு விருந்தில் பங்கேற்றுத் திரும்பிய போது 4 பேர் கொண்ட மர்ம நபர்கள் இவரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தினர். இவருடன் வந்த மனைவியை அடித்துத் தாக்கி தரையில் தள்ளினர்.



பின்னர் அங்கிருந்து தப்பித்து ஓடி விட்டனர்.

இந்த நபர்கள் யார் ? என்ன காரணத்துக்காக அவரைத் தாக்கினர் என்ற விவரம் இன்னும் அறியப் படவில்லை. முன்னாள் இராணுவ அதிகாரி தாக்கப் பட்ட சம்பவம் இங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பாக பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில்;

4 பேர் வர்ண்ண ஆடை அணிந்திருந்தனர். சிலர் முகத்தை மூடியிருந்ததாகத் தெரிகிறது. ஒரு சிலர் நீண்ட தாடி வைத்திருந்தனர். பிரார் தாக்கப்பட்டது தொடர்பாக முழு அளவில் விசாரித்து வருகிறோம்.

அருகில் இருந்த இரகசியக் கமரா தகவல்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் -என்றார்.

இந்த நபர்கள் யார் ? என்ன காரணத்துக்காக அவரைத் தாக்கினர் என்ற விவரம் இன்னும் அறியப் படவில்லை. முன்னாள் இராணுவ அதிகாரி தாக்கப் பட்ட சம்பவம் லண்டனில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**கண்டிக்கிறார் அமைச்சர் கிருஷ்ணா**

இதேவேளை இந்தச் சம்பவம் குறித்து இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பிராருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு உத்தர விட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன் கூட்டியே அவர் இந்தியத் தூதரகத்துக்கு தகவல் தெரிவித்திருந்தால் உரிய பாதுகாப்பு வழங்கப் பட்டிருக்கும் - என்றார்.

## சோனியாவின் வெளிநாட்டு பயண செலவு ரூ.46327 கோடி

காங்கிரஸ்தலைவர்சோனியா காந்தி தனது வெளிநாட்டு பயணத்துக்காகரூ.46327கோடி செலவு செய்ததாக குஜராத் முதல்வர் நரேந்திரமோடி குற்றம் சாட்டியுள்ளார்.

குஜராத்தில் சட்டசபை தேர்தல் வரும் மாதங்களில் நடைபெறஉள்ளது. அதற்கான தேர்தல் பிர சாரத்தை ஆரம்பித்துள்ள அந்த மாநில முதல்வர் மோடி, காங்கிரஸ் அரசை விமர்சித்து வருகின்றார். இந்த நிலையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேரடி அந்நிய முதலீட்டுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதன் மூலம் அமெரிக்க நிறுவனங்களுக்கு காங்கிரஸ் பாதையைத் திறந்து விட்டுள்ளது.

மேலும்காங்கிரஸ்தலைவர் சோனியா காந்தியின் வெளிநாட்டு செலவுக்காக கடந்த 3 ஆண்டுகளில் மத்திய அரசு ரூ. 46327 கோடியை செலவிட்டுள்ளது -என்றார். மன்மோகன் சிங்கும், சோனியா காந்தியும் மக்கள் பணத்தை வீணடிப்பதாக குற்றம் சாட்டும் மோடி, தன் மாநிலமான குஜராத்தில் நடக்கும் பண்டிகைகளுக்கு அரசு பணம் பல கோடியைச் செலவிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒக். 10 இல் தமிழக சட்டசபை சபாநாயகருக்கான தேர்தல்

சென்னை, ஒக்.3

தமிழக சட்டசபை சபாநாயகர் தேர்தல் எதிர்வரும் 10 ஆம் திகதி நடை பெற உள்ளதாக தமிழக சட்டசபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

தமிழக சபாநாயகராக இருந்த டி. ஜெயக்குமார் திடீரென தமது பதவியை சில தினங்களுக்கு முன் ராஜினாமாச் செய்தார். அதைத் தொடர்ந்து சபாநாயகர் பொறுப்பு பி. தனபால் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்று தமிழக சட்டப்பேரவைச் செயலாளர் வெளியிட்ட அறிக்கையில் இதுகுறித்து மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

எதிர்வரும் 10 ஆம் திகதி தமிழக சட்டசபைக் கூட்டம் நடைபெற உள்ளது. அன்றைய தினமே சட்டசபை சபாநாயகர் தேர்தல் நடைபெற உள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி சட்டசபையின் வைர விழாக் கொண்டாட்டம் நடை பெறவுள்ளது. அதன்பின்னர் எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் சட்ட சபைக் கூட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது.

இதனிடையே சபாநாயகர் தேர்தலில் அ.தி.மு.கவின் அதிகாரபூர்வ வேட்பாளராக தற்போதைய துணை சபாநாயகர் ப. தனபாலை தமிழக முதல்வரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதையடுத்து துணை சபாநாயகர் யார் என்ற விவாதம் எழுந்துள்ளது.

(வ)


## இலங்கை குற்றவாளிகள் இந்தியாவில் 'கியூ' பிரிவுப் பொலிஸார் தகவல்

இலங்கையில் தேடப்படும் கடத்தல் குற்றவாளிகள் தண்டனைக்குப் பயந்து, தப்பி வந்து தமிழகத்தில் பதுங்கியுள்ளனர் என்று இந்திய கியூ பிரிவு பொலி ஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக இராமநாதபுரம் மாவட்டம், தனுஷ்கோடி அரிச்சல்முனையில் வந்திறங்கிய அனோஜ் (22) என்பவரிடம் கியூ பிரிவு பொலிஸார் விசாரணை செய்தனர். இவர், இலங்கையில் நுவரெலியா மாவட்டம் புசல் லாவையைச் சேர்ந்தவர்.

இவரும் கொழும்பில் உள்ள ரிஷ்வி என்பவரும், தாய் வான் உட்பட சில நாடுகளுக்கு, வாசனைத் திரவியம் என்ற பெயரில், போதைப் பொருள்களைக் கடத்தியுள்ளனர். இலங்கை பொலிஸார், ரிஷ்வியைக் கைது செய்த பின், அனோஜை, தேடி வந்தனர். அனோஜ், படகோட்டிகளிடம் 40 ஆயிரம் கொடுத்து, தனுஷ் கோடிக்குத் தப்பி வந்தார் என்று தெரியவந்தது.

அண்மைக்காலமாக இலங் கையில் கடத்தல் தொழிலில் ஈடுபடும் சிலர், அங்குள்ள பொலிஸாருக்குப் பயந்து தமிழகத்தில் பதுங்கி விடுகின்றனர். பின்னர் பொலிஸில் சிக்கி, சிறையில் அடைக்கப்படுகின்றனர்.



அண்ணல் காந்தியடிகளின் 144 ஆவது பிறந்த தினமான நேற்று சென்னை, காமராஜர் வீதியில் அமைந்துள்ள அவரின் திருவுருவ படத்துக்கு தமிழக ஆளுநர் ரோசய்யா மற்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

## காந்தியைப்போல் வேடம் பூண்டு 520 மாணவர்கள் உலக சாதனை



திருச்சி ஜெகன்மாதா மெட்ரிக் குலேசன் பாடசாலையில் 520 மாணவர்கள் உலகி லேயே மிக அதிகமானோர் காந்தியைப் போல வேடமணிதல் எனும் புதிய உலக சாதனை படைத்துள்ளனர்.

இது குறித்து குறித்த பாடசாலை அதிபர் தெரிவித்ததாவது:-

இந்தியா மீது காந்தியடிகள் கொண்டிருந்த பற்று இந்திய மக்கள் மீது கொண்டிருந்த அன்பு, அஹிம்சை முறையில் அவர் நடத்திய அறவழிப் போராட்டம், கத்தியின்றி ரத்தமின்றி, வாங்கப் பட்ட இந்திய சுதந்திரம் என்று எண்ணிலடங்காதவை. அவருடைய நற் செயல்களை மாணவர்களின் மனதில் பதிய வைக்கவும், அவருடைய வரலாறு மற்றும் நற்பண்புகளை அனைவரும் பின்பற்றும் நோக்கத்துடன் 520 மாணவ மாணவிகளை காந்தியடிகளைப் போல் வேடம் அணியச் செய்து இந்த விழாவில் உலக சாதனையைப் படைத்துள்ளோம்.

ஒரே நேரத்தில் 520 பேர் தோன்றி மேடையில் ரகுபதி ராகவ ராஜாராம் பாடலை தொடர்ச்சியாகப் பாடி உலகிலேயே மிக அதிகமானவர்கள் காந்தியடிகளைப் போல வேடமணிதல் எனும் புதிய உலக சாதனையைப் படைத்துள்ளோம். இந்த புனிதமான உலக சாதனை நிகழ்வுக்காக கடந்த 4 மாத காலம் காந்தியடிகள் பற்றியும் அவர் எமது தேசத்துக்கு ஆற்றிய தொண்டுகளையும் எடுத்துரைத்து, அவர் பின் பற்றிய அஹிம்சை வழியையும் மாணவ மாணவி களுக்கு உணர்த்தியுள்ளோம்- என்றார்.

## அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### கொண்டு வரத் தயார் என்கிறார் மம்தா

மத்திய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரத் தயாராக உள்ளதாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடுக்கு மத் திய அரசு அனுமதி வழங்கிய தற்கு மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையில் நேற்று முன் தினம் டில்லியில் போராட்டம் நடைபெற்றது. முன்னதாக மம்தா தலைமையில் திரிணா முல் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் அமைச்சர் தினேஷ் திரிவேதி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பேரணியாகப் புறப்பட்டு ஜந்தர்மந்தர் மைதானத்துக்கு வந்தடைந்தனர்.

அதன்பின்னர் கூடியிருந்த ஆதர வாளர்களிடையே மம்தா பானர்ஜி பேசினார். இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அடுத்த மாதம் முதல் நாடு முழுவதும் போராட்டம் நடத்தப்படும். இந்திய வணிகர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களைப் பாதுகாக்கும் நோக்கில் நாடு முழுவதும் நான் சென்று போராட்டங்களில் பங்கேற்பேன். நவம்பர் மாதம் டில்லியில் 48 மணி நேரம் கடையடைப்புப் போராட்டம் நடத்தப்படும். உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் நடத்தவுள்ள பேரணி மற்றும் போராட்டத்தில் பங்கேற்கும்படி சமாஜ்வாடிக் கட்சியின் தலைவர் முலாயம்சிங் யாதவ், மாநில முதல்வர் அகிலேஷ் யாதவ் ஆகியோருக்கு அழைப்பு விடுக்க உள்ளேன்.

இந்த அரசு ஆட்சியில் தொடருவதை நானும் விரும்பவில்லை. தேவைப்பட்டால் மத்திய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரத் தயார். முலாயம்சிங் எனக்கு ஆதரவு அளித்தால், இந்தப் பிரேரணையைக் கொண்டு வருவேன். நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே, அதாவது அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இடைத்தேர்தல் வரும் என கேள்விப் பட்டேன். எனவே இதற்குத் தீர்வு காண்பதற்கு நான் தயார்.

அரசுக்கு ஏனைய கட்சிகளும் ஆதரவு அளிப்பதை நிறுத்திவிட்டு, அரசின் முடிவுகளுக்கு எதிரான எங்கள் கட்சியின் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் விமானங்களை சோதனை செய்யுங்கள்

## ஈராக்குக்கு அமெரிக்கா உத்தரவு

சிரியாவுக்குப் பயணிக்கும் ஈரான் விமானங்கள் ஈராக் வழியாகப் பயணிப்பதால் அந்த விமானங்களைத் தடுத்து நிறுத்துமாறும் அவற்றில் ஆயுதங்கள் கடத்தப்படுகிறனவா என்று சோதனை நடத்துமாறும் ஈராக்குக்கு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் ஆதரவாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையேயான உள்நாட்டு போர் தீவிரமடைந்து வருகின்றது.

இந்தத்தாக்குதலில் இதுவரை 25 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர ஐ.நா.வும், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் தீவிரமாக உள்ளன.

**அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று வடகொரிய விமானத்தைத் தரையிறக்கி ஈராக் சோதனை நடத்தியுள்ளது.**

ஆனால் ஜனாதிபதி அசாத் பதவி விலக மறுப்பதுடன் போராடும் மக்களைக் கொலை செய்வதில் தீவிரம் காட்டி வருகிறார்.

இதற்காக இராணுவத்துக்கு ஈரான், வட கொரியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்து கடத்தி வருகிறார். எனவே, ஆயுதக் கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரம் காட்டி வருகிறது. சிரியாவுக்கு புறப்படும் ஈரான் விமானங்கள் ஈராக் வழியாகத்தான் பறந்து செல்கின்றன.

எனவே, அந்த விமானங்களைத் தடுத்து நிறுத்துமாறும் அவற்றில் ஆயுதங்கள் கடத்தப்படுகிறனவா? என்று சோதனை நடத்துமாறும் ஈராக்குக்கு அமெரிக்கா கட்டளையிட்டுள்ளது.

கடந்தவாரம் ஈராக் தலைநகர் பாக்தாத்துக்குச் சென்ற அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் இது குறித்து அந்தநாட்டு துணை ஜனாதிபதி குதயர் அல்-குஷாயியுடன் பேச்சு நடத்தினார்.

அதைத் தொடர்ந்து தனது வான் எல்லையில் பறக்கும் ஈரான் விமானங்களைத் தரையிறக்கி ஆயுதம் உள்ளதா? என்று சோதனை நடத்த ஈராக் முடிவு செய்துள்ளது. இந்தத் தகவல் ஈரானிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சிரியாவுக்கு ஆயுத உதவியோ அல்லது நிதி உதவியோ செய்ய வேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையே, அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று வடகொரிய விமானத்தை தரையிறக்கி ஈராக் ஆயுத சோதனை நடத்தியுள்ளது.(வ)

## நிதிநிலை கொள்கையை எதிர்த்து பிரான்ஸில் மக்கள் ஆர்ப்பாட்டம்




ஐரோப்பாவின் புதிய நிதிநிலை அறிக்கைக் கொள்கையை பிரான்ஸ் பின்பற்றக் கூடாது என்று தலைநகர் பரிஸில்80ஆயிரம்பேர் திரண்டு போராட்டம் நடத்தினர்.

கடந்த வெள்ளிக்கிழமை புதிய அரசு 2013 ஆம் ஆண்டுக்கான தனது நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தது.

அதில் 37 மில்லியன் யூரோ அளவுக்கு வரி உயர்வும் செலவுக் குறைப்பும் காணப்பட்டது. இதை அறிந்ததும் ஐரோப்பாவின் நிதிநிலைக் கொள்கையைப் பின்பற்றி பிரான்ஸின்நிதிநிலைஅறிக்கை அமைந்திருக்கிறதே என்று மக்கள் கொதித்தெழுந்தனர்.

இந்தப் போராட்டம் ஜனாதிபதி ஒலாண்டுக்கு எதிரானது அன்று, ஐரோப்பாவின் பொதுநிதிக் கொள்கைக்கு எதிரானதாகும்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க பாஸ்ட்டில் பகுதியில் கூடி நின்ற மக்கள் 'தடை, தடை' ஐரோப்பிய நிதிக்கொள்கைக்கு பிரான்ஸில் தடை விதிக்க வேண்டும் என்று கோஷமிட்டனர்.

இத்துடன் நூற்றுக்கணக்கான கொடிகளையும், எதிர்ப்பு அடையாள அட்டைகளையும் ஆர்ப்பாட்டத்தின் போது ஏந்தி வந்தனர். (வ)

## ஆப்கன் நிலைமை மிக மோசமானது

### ஜேர்மனியின் புலனாய்வு அறிக்கை




ஆப்கானிஸ்தானில் நிலவி வரும் சூழல் குறித்து அந்த நாட்டு அரசு தெரிவித்ததை விட மிக மோசமாக உள்ளது என்று ஜேர்மனியின் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

ஜேர்மனியின் பி.என்.டி. (BND) என்ற புலனாய்வுத் துறை ''2014 வரை ஆப்கானிஸ்தான்'' என்ற அறிக்கையைச் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஆப்கானிஸ்தானில் நிலவி வரும் சூழல் மிக மோசமாக உள்ளது. அங்கு ஊழலும், சலுகைகளும் நாட்டைச் சீரழித்து விட்டன.

அரச அதிகாரிகள் தமது குடும்பத்தினரே அனைத்து அதிகாரங்களையும், பதவிகளையும் அனுபவிக்க வேண்டும் என்று கருதுகின்றனர். தற்போதைய ஜனாதிபதி ஹமீத் கர்சாய் அடுத்த ஆண்டு தனது அண்ணனுக்கு உயர் பதவி கிடைக்க வேண்டும் என்று பாடுபடுகிறார்.

2014 ஆம் ஆண்டுடன் நேட்டோப் படைகள் வெளியேறத் திட்டமிட்டுள்ளனர். இருப்பினும் தலிபான்கள், அல்குவைதா தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக சுமார் 3500 வெளிநாட்டுப் படையினராவது அங்கு தங்கியிருக்க வேண்டும்.

இந்த அறிக்கை ஜனாதிபதி கர்சாய் அரசின் மீது கடுமையான கண்டனங்களைச் சுமத்தியுள்ளது. நாட்டின் ஊழலை ஒழிக் காமல் தனது அதிகாரத்தை நிலைநாட்டுவதிலேயே கர்சாய் அக்கறை காட்டுகிறார் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(வ)

## 63 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடியது சீனா




*சீனாவின் 63 ஆவது சுதந்திர தினம் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் சீனாவின் முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர்.*

*சீனத் தலைநகர் பீஜிங் கில் உள்ள தியானென்மென் சதுக்கத்தில் நடந்த விழாவில் கலந்து கொண்ட சீனத் தலைவர்கள், தேசிய விடு தலைப் போராட்ட தியாகிகளை நினைவு கூர்ந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்வில் சீன ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசியல் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

## சட்டவிரோத இணையதள பதிவிறக்கத்துக்கு தடை

ஜப்பானில் சட்டவிரோத இணையத்தள பதிவிறக்கச் செயற்பாட்டில் ஈடுபடுவோருக்கு தண்டனை விதிக்கப்படவுள்ளது.

இதன்பிரகாரம் பதிப்புரிமையை மீறி கோப்புக்களை பதிவிறக்கம் செய்வோருக்கு இரண்டு ஆண்டுகள் சிறை அல்லது 25 ஆயிரத்து 700 அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்படவுள்ளது.

2010 ஆம் ஆண்டு முதல் இவ்வாறான பதிவிறக்க நடவடிக்கைகள் சட்ட விரோதமானவை என்ற போதிலும், இதுவரை தண்டனை எதுவும் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## ஜப்பான் அமைச்சரவையில் திடீர் மாற்றம்

கிழக்கு சீன கடல் விவகாரம் தீவிரமடைவதைத் தொடர்ந்து, ஜப்பான் அமைச்சரவை நேற்று முன்தினம் திடீரென மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் ஜப்பான் ஜனநாயகக்கட்சி ஆட்சியில் உள்ளது. தற்போதைய பிரதமராக யாஷி ஹிட்டோநௌடா உள்ளார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் திடீரென அமைச்சரவை மாற்றி அமைக்கப்பட்டது. அதன்படி நிதி அமைச்சராக கொர்கி ஜோஜிமா, வெளிவிவகாரத்துறை அமைச்சராக கொய் ஜிரோ ஜெம்பா, கல்வி அமைச்சராக மகிக்கோ டானாக்கா ஆகியோர் புதிய அமைச்சர்களாகப் பதவியேற்றனர். இதற்கு முன்னதாக கிழக்கு சீனக் கடல் விவகாரம் தொடர்பாக பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் கடும் விமர்சனங்களைத் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. (வ)

## ஆப்கனில் மனித வெடிகுண்டு 14 பேர் சாவு; 57 பேர் படுகாயம்





கிழக்கு ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மனித வெடி குண்டுத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர்.

இதில் மூன்று நேட்டோ சேவையாளர்கள், 4 பொலிஸார் மற்றும் பொதுமக்கள் 7 பேர் அடங்குவர். இந்தத் தாக்குதலில் மேலும் 57 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று ஆப்கானின் உள்துறை அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட நபர் ஐ.எஸ்.ஏ. எப். எனப்படும் ஆப்கனில் குடியிருக்கும் சர்வதேச பிரதிப் பாதுகாப்புப் படைப் பிரிவையும், ஆப்கன் பொலிஸாரையும் குறி வைத்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் கட்டப்பட்டிருந்த வெடி குண்டுகளுடன் வந்து மோதி வெடிக்கச் செய்துள்ளார்.

ஐ.எஸ்.ஏ.எப். ஐச் சேர்ந்த கொல்லப்பட்ட குறிப்பிட்ட படையினரரின் சொந்த நாடு எதுவென்று இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை தலிபான் அமைப்பின் பேச்சாளர் ஷபி ஹுல்லாஹ் முஜாஹித் இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்று ஊடகங்களுக்கு தகவல் அளித்துள்ளார். (வ)

## கடாபியை கொலை செய்தது பிரான்ஸின் உளவுப் பிரிவு?

### அம்பலமாக்குகிறது 'டெய்லி மெயில்'

லண்டன், ஒக்.3

பிரான்ஸ் ஜனாதிபதியாக இருந்த நிக்கோலஸ் சர்கோசியின் உத்தரவின் பேரில், பிரான்ஸ் நாட்டின் உளவுப் பிரிவினர்தான் கடாபியை சுட்டுக்கொன்றனர் என்று 'டெய்லி மெயில்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

லிபியாவை, 42 ஆண்டு காலம், ஆட்சி செய்தவர் மும்மர் கடாபி. துனிசியா, எகிப்து உள்ளிட்ட நாடுகளில் ஏற்பட்ட கிளர்ச்சியை போன்று லிபியாவிலும், கடாபியை பதவி விலகக் கோரி, மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆபிரிக்கக் கூலிப் படையினரை வைத்து, போராட்டக்காரர்களைக் கொன்று குவித்தார் கடாபி.

இதன் காரணமாக, கடாபியின் வெளிநாட்டுக் கணக்குகள் முடக்கப்பட்டன. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், லிபியா மீது, பொருளாதாரத் தடை விதித்தன. ஒரு கட்டத்தில் கிளர்ச்சியாளர்கள் ஆயுதம் ஏந்தி, அரச படைக்கு எதிராகப் போரிட்டனர். கடாபியின் மகனை சிறைப் பிடித் தனர். அதன்பின் அரண்மனையிலிருந்து தப்பியோடி தலைமறைவானார் கடாபி. கடந்த ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி தனது சொந்த ஊரான சிர்டியில் கால்வாய் ஒன்றில் மறைந்திருந்த போது கிளர்ச்சியாளர்கள் கடாபியைச் சுற்றி வளைத்தனர். கடாபி சரணடைய முன்வந்த போதும், அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானில் இந்திய மீனவர்கள் 33 பேர் கைது

எல்லை தாண்டி மீன் பிடித்த இந்திய மீனவர்கள் 33 பேர் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் மீனவர்கள் தங்களது கடல் எல்லைகளை மீறி மீன் பிடித்து கைதாவது வாடிக்கையான விடயமாகிவிட்டது.

இந்த வகையில் பாகிஸ்தான்கடல் எல்லைப் பகுதியில் அத்துமீறி மீன்பிடித்ததாக இந்திய மீனவர்கள் 33 பேர் அந்நாட்டு கடலோர காவல் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்கள் மீன் பிடிக்க உபயோகப்படுத்திய ஐந்து படகுகள், பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் கராச்சியில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# படகு விபத்தில் 36 பேர் சாவு

## ஹொங்கொங்கில் பரிதாபம்



ஹொங்கொங், ஒக்.3

ஹொங்கொங்கிற்கு அருகில் இரு பயணிகள் படகுகள் மோதி விபத்துக்குள்ளானதில் 36 பேர் உயிரிழந்தனர்.

வாணவேடிக்கையைப் பார்வையிடுவதற்காக சுமார் 120 பேரை ஏற்றிச்சென்ற படகுகளில் ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு லமா தீவுக்கருகில் விபத்துக்குள்ளானது. இதனைத் தொடர்ந்து படகின் அரைவாசிப்பகுதி நீரில் மூழ்கத் தொடங்கியது.

இதன்போது 28 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். சுமார் 100 பேர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செலப்பட்டனர். 8 பேர் பின்னர் அங்கு உயிரிழந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானம் மற்றும் கப்பல்கள் மூலம் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை வைத்தியசாலைகளில் சேர்த்த மேற்படி விபத்தில் பாதிக்கப்பட்ட 100 பேரில் 9 பேர் ஆபத்தான நிலையிலுள்ளனர் என்று ஹொங்கொங் அரசு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சீனாவின் தேசிய தினம் கொண்டாடப்பட்டுவரும் நிலையில், ஹொங்கொங்கின் கடல்வழியில் வழமையை விட போக்குவரத்து அதிகமாகக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(வ)



## நேபாளத்தில் நிலச்சரிவு; 7 பேர் சாவு

நேபாளத்தில் பெய்து வரும்கனமழையைத்தொடர்ந்து ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இந்தியர்கள் உட்பட ஏழு பேர் உயிரிழந்தனர்.

நேபாளத்தில் பல இடங்களில் கனமழை பெய்து வருகின்றது. இதையடுத்து அங்குள்ள மக்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்தநிலையில் இலாம் என்ற இடத்தில், மெச்சி நெடுஞ்சாலையில் ஏற்பட்ட நிலச்சரிவில், அந்த வழியாகச் சென்ற வாகனங்கள் புதையுண்டன.

நிலச்சரிவில் சிக்கிய 14 பேரில் ஏழு பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

இதில் உயிரிழந்தவர்களில் ஒருவர் இந்தியர். மீதமுள்ளவர்களைக் காணவில்லை. காணாமற் போன 7 பேரில், 5 பேர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களைத் தேடும் பணியில் நேபாள பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர். (வ)

# ஐ.நா. வெளி உலகின் மீதும் கவனத்தைத் திருப்ப வேண்டும்

## பொதுச் சபையில் பிரிட்டன் வெளியுறவு அமைச்சர்

நியூயோர்க், ஒக்.3

ஐ.நா. சபையானது தன்னைப் பற்றிய விடயங்களிலேயே அதிக காலத்தைச் செலவிடுகிறது என்று நான் நினைக்கின்றேன். வெளியிலும் கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது.

- இவ்வாறு தெரிவித்தார் பிரிட்டன்வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் பெயார்ட். ஐ.நா. பொதுச் சபையில் உலகத் தலைவர்கள் மத்தியில் கடந்த திங்கட்கிழமை அவர் உரைநிகழ்த்தினார்.

நடைமுறைகள் செயற்பாடுகள் என்று தொடர்ந்து மூழ்கிக் கிடப்பதனால் ஏதேனும் பெறுபேறுகள் வெளிவர வேண்டும். ஐ.நா. சபையானது அதன் செயற்பாடுகள் மூலம் நாடுகளின் சுபீட்சம், பாதுகாப்பு மற்றும் மனித கௌரவம் போன்றவற்றை நிலைநாட்டுமானால் சீர்திருத்தம் என்பது தானே உருவாகிவிடும் - என்றார்.

ஐ.நா. என்பது ஒரு லட்சியம் அல்ல. ஆனால் முக்கிய லட்சியங்களை அடைவதற்கு அது ஒரு வழிமுறை என்றார் பெயார்ட்.

பெயார்ட் தொடர்ந்து பேசுகையில் சிரியாவில் வன்செயல்களுக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். சிரிய அதிபர் அல்- அஜாத் பதவி விலக வேண்டும் என்றும் வலியுறுத்தினார். சிரிய மக்கள் மீது அசாத் நடத்திவரும் தாக்குதல்களை நிறுத்துவதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபையால் ஒன்றுமே செய்ய முடியாதிருப்பதை அவர் கண்டித்தார். (ப)

### சர்ச்சைக்குரிய திரைப்பட இயக்குநரின்

# கொலைக்கு பணப் பரிசு 2 லட்சம் அமெ. டொலர்

முகமது நபியை அவமதிக்கும் திரைப் பட இயக்குநரைக் கொலை செய்பவருக்கு, 2 லட்சம் அமெரிக்க டொலர் பரிசாக அளிக்கப் படும் என்று பாகிஸ்தானின் முன்னாள் சட்டசபை உறுப்பினர் ஒருவர் அறிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய 'இன்னேசன்ஸ் ஒப் முஸ்லிம்ஸ்' என்ற திரைப்படத்தின் சில காட்சிகள், இணையத்தளத்தில் வெளியாகி உலக நாடுகள் முழுவதிலும் அமெரிக்காவுக்கு எதிரான போராட்டங்கள் ஏற்பட வழிசெய்தன.

இந்தத்திரைப்படத்தின் காட்சிகளை, இணையத் தளத்தில் வெளியிட, பாகிஸ்தான் அரசு தடை விதித்தது. இதற்கிடையே, 'நபிகள் நாயகத்தை அவமதிக்கும் வகையில் திரைப் படத்தைத் தயாரித்த, இயக்குநரைக் கொலை செய்பவருக்கு, ஒரு லட்சம் அமெரிக்க டொலர்கள் பரிசுத் தொகையாக வழங்கப் படும் என்று பாகிஸ்தான் ரயில்வே அமைச்சர் குலாம் அகமது பிலாவர் அறிவித் திருந்தார். இதற்கு, அமெரிக்க அரசு கண்டனம் தெரிவித்திருந்தது. (வ)


## English Classes

Grammer & Literature are Conducted at 10, Senkuntha Road, Nallur (Near Poonkanicholai) by a veteran English Teacher

Sivasubramaniam

(23483)(5.6.7)

## தவறிவிட்டது

கர்ராஸ் ரோட் மருதடி வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த தேதீஸ்வரன் விஜிந்தா என்பவருடைய ஆஸ்பத்திரி கிளினிக்கொப்பி மற்றும் முக்கியமான ஆவணங்கள் அடங்கிய ஒருவை (25.09.2012) செவ்வாய் அன்று கோப்பாய்க்கும் நுணாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 9228 373

(6/3772) (45.6.7)

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி A 9 வீதியில் நீதிமன்றம் முன்பாக 15 அடி அகலமும் 55 அடி நீளமும் உடைய கிணறு, மலசல கூட வசதியுடன் கூடிய கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 3752 930

(23394) (45.6.7)

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் உடுவில் மானிப்பாய் வீதியில் 7¾ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 075 043 3771/021 224 0973

(23520)(5-6-7)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் தி. ஸ்ரீசந்திரகுமார் அவர்களின் அன்பு மாமனார்.

### இரத்தினசபாபதி செல்வரட்ணம்

அவர்கள் 25.09.2012 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிகழகம்,
கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்.

(23462)(6.7.8)


## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட், தினமும் சுத்தம் செய்யப் பட்டு விற்பனையாகின்றது. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை திறக்கப்படும்.

இறைச்சிக்கோழி ரூ.480/= மட்டும்.

நல்லூர் பாம் சென்ரர்,
# 19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர்,யாழ்ப்பாணம்

(23438)(5-6-7)


## வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

பளை இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலய பரிபாலனசபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் எதிர்வரும் 15.10.2012 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆலய முன்றிலில் தலைவர் செ.கந்தசாமி அவர்களது தலைமையில் நடைபெற உள்ளது. இதில் நிர்வாக உறுப்பினர்கள், நித்தியபூஜை உபயகாரர்கள், திருவிழா உபயகாரர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர். பளை/ இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலய பரிபாலனசபை. பதிவு இல. HA/5/JA/654 செயலாளர்.

(19330) (45.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



திருமதி

### நவரத்தினம் கனகமணி

மலர்வு
26★08★1931

உதிர்வு
03★09★2012

கடந்த 03.09.2012 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (03.10.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

மா. நவரத்தினம்
குடும்பத்தினர்.

(22938) (45.6.7) (23495) (45.6.7)


## கொழும்பு பல்கலைக்கழக BIT முதலாம் வருட பெறுபேறுகள்

இவ்வாரம் வெளியான கொழும்பு பல்கலைக்கழக BIT-Degree Iம் ஆண்டு பெறுபேறுகளில் MCS நிறுவன மாணவர்கள் தொடர்ந்தும் உயர்ந்த பெறுபேறுகளை பெற்று Diploma in Information Technology தகைமையை கொழும்பு பல்கழைக்கழகத்திடமிருந்து பெற்றுள்ளனர். MCS இல் படித்த 56 மாணவர்களில் 47மாணவர்கள் இரண்டாம் வருடம் பயில்வதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இக்கற்கை நெறியை பயில விரும்பும் மாணவர்கள் உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும், சித்தியடையத்தவறியோர் FIT கற்கை நெறி மூலமும் MCS நிறுவனத்தில் BIT + Computer Engineering-USA இல் இணைந்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி ஆகுவதுடன் Microsoft, Cisco, Oracle, BCS நிறுவனங்களின் அங்கத்துவத்தையும் பெற்று சிறந்த தொழில் வாய்ப்பை பெற முடியும். A/L 2012 கலை,வர்த்தக,கணித,விஞ்ஞான பிரிவில் தோற்றியோரும் விண்ணப்பிக்கலாம். பல்கலைக்கழக மாணவர்களும் இக் கற்கை நெறியை மேலதிகமாக தொழில் வாய்ப்புக்கருதி பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கி உள்ளது. மேலதிக விபரங்களிற்கு 324, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள MCS ITCAMPUS ஐ நாடவும்.தொலைபேசி இலக்கம் 772395895

| | |
|---|---|
| R.Chithamparanathan | A 6B C |
| T.Bakeerathan | A 4B 3C |
| P.Kaitheki | A 2B 5C |
| S.Theivamainthan | 8B |
| S.Kavitha | 7B C |
| N.Senthuran | 6B 2C |
| S.Janani | A 2B 4C D |
| J.Thayalini | A 2B 5C |
| T.Sayanthini | 5B 3C |
| S.Kavitha | 5B 3C |
| S.Sanjeevkumar | 5B 3C |
| G. S Jeyadevan | 4B 4C |
| R.Asvini | 4B 4C |
| N.Yosaothara | 3B 3C 2D |
| S.Hamelton | 3B3C2D |
| T.Hapeerathan | 2B 6C |
| M.Jegatha | 2B5CD |
| S.Piragashini | 3B 5C |
| T.Thivaharan | 3B 2C 3D |
| S.Dillukshini | 2B5CD |
| Mr.R.Raguraam | 2B 6C |
| A.Sinthuja | 2B 3C 3D |
| M.Janahan | B6CD |
| B.Nishanthan | B5C2D |
| B.Priyanka | B 7C |
| V.Saseekaran | 8C |



S.Janani | T.Sayanthini | S.Kavitha | S.Theivamainthan | Chithamparanathan Computer Engineer-USA | T.Bakeerathan MTA-USA | Sanjeevkumar


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(1)

**வாழ்க்கையில் ஒரு வேகம் வேண்டும்**

நமது வாழ்க்கையில் ஒரு புது வேகம் வரவேண்டுமானால் மூன்று கொள்கைகளை முதலில் கடைப்பிடிக்க வேண்டும்.



நமது வாழ்க்கையில் குறுக்கிடும் யாருக்காவது நாம் உதவி செய்ய வேண்டும்.

நம்முடன் தொடர்பு கொண்ட யாருக்காவது வாழ்க்கையில் முன்னேற வழி வகுத்துத் தர வேண்டும்.

நமக்குத் தெரிந்த ஒருவர் தவறு செய்யும்போது அதைச் சுட்டிக்காட்டி, அவரைச் சரியான பாதைக்கு கொண்டு வர வேண்டும்.

இந்த மூன்று தத்துவங்களையும் கடைப்பிடித்தால், கண்டிப்பாக நம் வாழ்க்கையில் மற்றவர்களை நாம் கவர முடியும். மற்றவர்கள் நம்மைப் பாராட்டும்படி நடந்து கொள்ள முடியும். நமக்கு மட்டுமல்ல, நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் வெற்றியைத் தேடித் தரமுடியும்.

நமது வாழ்க்கையில் ஒரு புது வேகம் ஏற்பட்டிருப்பதை உணர முடியும். இப்படிப்பட்ட உணர்ச்சியால் மனதில் ஏற்படும் மகிழ்ச்சி வாழ்நாள் முழுவதும் தொடரும் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டாம்.

**வாழத் தெரிய வேண்டும்**

நாம் ஒரு தடவைதான் வாழ்கிறோம். எப்படியோ இந்த உலகத்தில் பிறந்துவிட்டோம். மூன்று வேளை உண்டு உறங்கிவிட்டு இறந்தால் சரி என்று எண்ணுவது தவறு. மிருகங்களும் பிறந்து வளர்ந்து இறக்கின்றன. தமக்குத் தேவையான உணவை வேட்டையாடி உண்கின்றன. ஆனால் மனிதன் முற்றிலும் வேறுபட்டவன். பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டும். பிரச்சினைகளைக் கண்டு பயந்து ஓடி ஒளியக் கூடாது.

எப்படிப்பட்ட பிரச்சினையையும் ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ள வேண்டும். பிறகு அதைச் சமாளிக்க வழி காண வேண்டும். வழி காணச் சிந்திக்கும் போது உடம்பில் ஒரு புதிய சக்தியும் வேகமும் உருவாவதை உணர முடியும். எப்படிப்பட்ட சக்தியினாலும் வேகத்தினாலும் துணிவு உண்டாகும். உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சக்தியையும், வேகத்தையும், துணிவையும் மற்றவர்களுடன் பங்கிட்டுக் கொள்ளுங்கள். அதாவது-

உங்கள் நண்பராக இருக்கலாம். உங்களுக்குத் தெரிந்தவராக இருக்கலாம். அல்லது உங்கள் பக்கத்து வீட்டுக்காரராகவோ இருக்கலாம். அலுவலகத்தில் உங்களுடன் வேலை செய்பவர்களாக இருக்கலாம். அவர்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும் போது, உங்களுடைய அனுபவத்தையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்து பிரச்சினையைச் சமாளிக்க உதவினால், உங்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சியும் மனத்தில் ஒரு வகை திருப்தியும் ஏற்படும்.

நாம் மற்றவர்களுக்கு உதவ முன்வரும் போதுதான், நம் மனதில் ஒரு புதிய சக்தி உருவாகிறது. வீட்டில் மட்டும் இல்லாமல், வெளியிலும் இந்தப் புதிய சக்தி உருவாக பழகிக்கொள்ள வேண்டும். மகிழ்ச்சியின் தொடக்கம் இதுதான். ''மகிழ்ச்சி என்பது ஒரு இனிய சென்ட்டைப் போன்றது. இதை மற்றவர்கள் மீது தெளிக்க முயல்வோமானால், நம்மீதும் கொஞ்சம் எப்படியாவது படும். அப்போது ஏற்படும் இன்பமே தனி'' என்பது எமர்ஸன் எனப்படும் தத்துவ ஞானியின் விளக்கம்.

எதையும் மற்றவர்களுக்குச் சொல்லலாம். ஆனால் நாம் அதைச் செய்வது கடினம். எதையும் நாம் முதலில் செய்து பார்க்க வேண்டும். இதற்குத் தேவையானது உற்சாகம், இடைவிடாத முயற்சி, பொறுமை, எல்லாவற்றிற்கும் மேலாக கடைசிவரை பார்த்து விடுவோம்என்ற ஓர் எண்ணம்.

பிரச்சினைகளைச் சமாளிக்க முயற்சி செய்யும்போது உங்களுக்கு சில முட்டுக்கட்டைகள் ஏற்படலாம். மனம் தளரக் கூடாது. உடல் நலம் சரியில்லாமல் போய் விடலாம். சோர்ந்துபோய் விடக்கூடாது. பிரச்சினைகளில் மூழ்ய உங்களை விட மோசமான நிலையில் உள்ளவர்களை நினைத்துப் பாருங்கள். அவர்களே பிரச்சினைகளைச் சவாலாக ஏற்று சமாளிக்கும் போது, நம்மால் ஏன் முடியாது என்று எண்ண வேண்டும்.

'கடவுள் இருக்கிறார், எல்லாம் பார்த்துக்கொள்வார்' என்பது புத்திசாலித்தனமல்ல. 'கடவுள் இருக்கிறார் அவர் உதவியுடன் நான் எதையும் சமாளிப்பேன்' என்று எண்ணுவதே வெற்றிக்கு வழிவகுக்கும்.

நாம் வேகமாக நடக்க இரண்டு கால்களும் ஒத்துழைக்க வேண்டும். ஒரு கால் நடக்கத் தவறினாலும் நடக்கவே முடியாது.

நாம் நமது நண்பர்களுக்கோ, உறவினர்களுக்கோ, தெரிந்தவர்களுக்கோ உதவி செய்தால், நமக்கு ஏதாவது சிக்கல் ஏற்படும் போது அவர்கள் நமக்கு உதவி செய்ய ஓடி வருவார்கள்.

-தமிழ்வாணன்-

(தொடரும்)

# பெற்றோர் கண்ணும் கருத்துமாக இருந்தால் சிறுவர் துஷ்பிரயோகம் கட்டுப்படும்

## மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவிப்பு

சங்கானை,ஒக்.3

எனது பிள்ளை நல்லபிள்ளை, அவனிடம் எதுவித கெட்ட பழக்கங்களும் இல்லை என நினைத்துக் கொண்டிருக்கும் பெற்றோர்களின் அசமந்தப் போக்கினால், வீட்டுக்கு வெளியே அந்தப் பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள்? எவருடன் பழகுகின்றார்கள் என்பதை அறிய முயலாமல் இருப்பதால், அந்தப் பிள்ளைகளால் சமூக கலாசார சீரழிவுகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாமல் உள்ளது. ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் மேல் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டால், சிறுவர் துஷ்பிரயோகம், களவு,கொள்ளை போன்ற தீய செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பெல் தெரிவித்தார்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தால் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பொறுப்பதிகாரி மல்கம் பெல் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் சொல்வதை நீங்கள் மனதில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களின் சொற்கேட்டு நடந்தால் அறிவான, பண்புள்ள பிள்ளைகளாக மிளிர்வீர்கள். பெற்றோர்கள் தமது பிள்ளைகள் நன்கு கல்வி கற்று உயர் பதவிகள் வகிக்க வேண்டும் என விரும்புகின்றனர்.

ஆனால் இன்று யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் போருக்குப் பிந்திய கடந்த மூன்று வருடங்களில் நாளுக்கு நாள் கலாசார சீரழிவு அதிகரித்துக் கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

பாடசாலைக் கல்வி பதினெட்டு வயது வரைதான். இந்த 10-18 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகளின் கைகளில் கைத்தொலைபேசிப் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்துடன் இந்த வயதிற்குட்பட்டோர் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெறாமல் வாகனங்களைச் செலுத்திச் செல்கின்றனர். விபத்துக்களை ஏற்படுத்துகின்றனர். பொலிஸாராகிய எங்களாலும் ஓரளவிற்குத்தான் எதனையும் தடுத்து நிறுத்த முடியும்.

பாடசாலையில் இருந்து வீட்டுக்குச் செல்லும் போதும் அல்லது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் போதும் சரி குறைந்தது இரண்டு மூன்று பேர்களுடன் சேர்ந்து செல்லுங்கள். உங்களுக்குத் தெரியாதவர்களின் வாகனங்களில் ஏறாதீர்கள். உங்கள் விருப்பத்துக்கு மாறாக யாராவது வாகனத்தில் பலவந்தப்படுத்தி ஏற்றினால், ஏதோ ஒரு வழியில் அந்த வாகன இலக்கத்தை பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினால்,நாம் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து விசாரணை செய்ய உதவியாக இருக்கும்.

மற்றும் கைத்தொலைபேசி வைத்திருப்பவர்கள் 'ரீ-லோட்' செய்வதற்கு கடைகளுக்குப் போகாதீர்கள். உங்கள் இலக்கங்கள் வெளிநபர்களுக்குத் தெரிவதாலும் பல பிரச்சினைகளை நீங்கள் எதிர்நோக்க வேண்டிவரும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் எம்மால் ஒரு முறைப்பாட்டுப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பெட்டியில் உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், இடர்கள், துன்புறுத்தல்கள் எவரால் ஏற்படுகின்றது என்பதைத் தெளிவாக எழுதிப் போடவும். நாங்கள் இவ்வாறான தீய செயல்கள் ஏற்படாமல் இருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வோம். குற்றச் செயல்கள் மறைக்கப்படுவதால், அவை தொடர்ந்து நடைபெறுகின்றன. அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டால் இவை தொடராமல் தடுக்க முடியும்.

மேலும் இளம் வயதில் மது அருந்துதல், புகைத்தல் என்பன சிறுவர்கள் மத்தியில் பல்கிப் பெருகி வருவதையும் நாம் அவதானிக்கின்றோம். இந்த தீய பழக்கத்தை இல்லாமல் செய்ய வேண்டும். உங்கள் முழுக்கவனமும் கல்வியிலே இருக்க வேண்டும். உங்களுக்குப் பாதுகாப்பாக நாம் இருக்கின்றோம். நீங்கள் எங்களுடன் இணைந்து செயற்பட முன்வரவேண்டும். எதற்கும் பயப்படத் தேவையில்லை. நாம் என்றும் உங்களுக்கு உதவத் தயாராக இருக்கின்றோம்- என்றார்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எ-29)



ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் வி.ரி.அறக்கட்டளையினால் வாழ்வாதார உதவி வழங்கும் திட்டத்தின் ஆண்டு விழா வைபவம் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வாழ்வாதார உதவியாக பெண்மணி ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. அருகில் அறக்கட்டளையின் செயலாளர் வே.கந்தசாமி மற்றும் அறக்கட்டளையின் ஆலோசகர்கள் (எ-11)

## மொழி பெயர்ப்பாளராக சத்தியப் பிரமாணம்



நீதி அமைச்சினால் நடத்தப்பட்ட தமிழ் - ஆங்கில மொழி பெயர்ப்பாளர்களுக்கான போட்டிப் பரீட்சையில் சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த செல்வராஜா ஞானராஜா சித்தியடைந்து யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.ஏ ஆனந்தராஜா முன்னிலையில் அரச மொழி பெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜப்பான் அரசின் JICA நிறுவனத்தின் வட-கிழக்கு இணைப்பாளராகவும் செயற்பட்டு வரும் இவர், லயன்ஸ் கழகத்தின் மூலமும் சமூக நல சேவைத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறார். (எ)

# நிர்வாகப் பதவிகளை பொறுப்பேற்பவர்கள் மக்களுக்கு உதவுவோராக இருக்க வேண்டும்

## கிராம அபிவிருத்தி அதிகாரி தெரிவிப்பு

அச்சுவேலி,ஒக்.3

''பொது நிறுவனங்களின் நிர்வாக பதவிகளை பொறுப்பேற்றுக் கொள்பவர்கள் நேர்மையுடன் பக்கச்சார்பு, சுயநலம் இன்றி பொதுமக்களின் தேவையை அறிந்து உதவி செய்பவர்களாகவும் இருக்க வேண்டும்'' என்று வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவு கிராம அபிவிருத்தி அதிகாரி ஏ.நிர்மலன் தெரிவித்தார்.

அச்சுவேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நிர்மலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்களுக்கான சேவையை வழங்குவதற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களும், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் தனித்தனி அமைப்புக்களாக செயற்படுகின்றன. ஆண்களுக்கும், பெண்களுக்குமாக தனித்தனியாக செயற்படும் இரண்டு அமைப்புக்களும் சேவை நோக்கோடு செயற்படும் போது குறித்த கிராம அலுவலர் பிரிவின் தேவைகள் உரியமுறையில் இனங்காணப்பட்டு நிறைவுசெய்யப்படும்.

கிராம அபிவிருத்தியோடு சம்பந்தப்பட்ட பொது அமைப்புக்களின் நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்பவர்கள் உண்மை, நேர்மை, பக்கச்சார்பின்மை மற்றும் சுயநலம் இன்றி பொதுநலனை நோக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். மேற்படி நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்பவர்கள் சுயநல நோக்கோடு செயற்படும் போது அவமரியாதைக்கு உள்ளாக வேண்டி ஏற்பட்டு விடுகின்றது.

''சமூகத்தை நேசிப்பவர்களை சமூகம் நேசிக்கும்'' என்ற உயர் குறிக்கோளோடு செயற்பட்டு பொது அமைப்புக்களில் பதவி வகிப்பவர்கள் செயற்படும் போது குறித்த கிராமத்தின் தேவைகளை இனங்கண்டு உரியமுறையில் நிறைவு செய்ய முடியும். குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்.

சமூகத்துக்கு முன்வந்து உதவுவதைக் கைவிட்டு, வெளியில் இருந்து விமர்சிப்பதன் மூலமும், பொதுத் தேவைகள் நிறைவுசெய்யப்படாமல் புறக்கணிப்புக்கு உள்ளாவதாக குறை கூறுவதன் மூலமும் காலங்கடத்துவதில் பயன் இல்லை.

கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் விழிப்புணர்வோடு செயற்படுவதன் மூலம் தமது கிராமத்தின் தேவைகளை அதிகாரிகளின் கவனத்துக்கு உரியமுறையில் சமர்ப்பித்து உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும்-என்றார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## மழை ஏன் பொய்த்தது?

அறம் பிழைத்தால் மழை பொய்த்துப் போகும் என்பது எவ்வளவு பொய்யாமொழி என்பதை இன்றைய ஆட்சியைப் பார்த்துப் புரிந்துகொள்ள முடிகிறது.

வடக்கில் இப்போது ஒழுங்கான அரசாட்சியில்லை. இங்கே காட்டுத் தர்ப்பார்தான் நடக்கிறது. இது இன்று நேற்று ஏற்பட்டதல்ல, கடந்த 3 வருடங்களாக – போர் முடிந்ததன் பின்பிருந்தே – இதுதான் நிலைமை. ஆட்சியாளர்களின் விருப்பங்கள் மட்டுமே இங்கு செய்யத்தக்கன என்று கூறப்படுகிறது. அதற்கேற்றாற் போலவே காரியங்கள் ஆற்றப்படுகின்றன.

இந்தக் காட்டாட்சியில் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது கல்வித்துறைதான்.

முதலில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டார். அதற்கான எந்த ஒரு கடிதமும் அவருக்கு வழங்கப்படவில்லை. ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் வீட்டில் நிறுத்தப்பட்டார். இந்த விடயம் வெளியே வந்ததும் மீண்டும் பணிக்கு அழைக்கப்பட்டார். சில மாதங்களின் பின்னர் பதவி உயர்வு என்ற பெயரில் அவரது கதிரையில் இருந்து அகற்றப்பட்டார்.

வன்னியில் ஒரு பாடசாலையின் நூல் வெளியீடு தொலைபேசி அழைப்பு ஒன்றின் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் பெறப்பட்ட வாழ்த்து அந்தப் புத்தகத்தில் பிரசுரிக்கப்பட்டது என்ற ஒரே காரணத்துக்காக இன்று வரை அது வெளியிடப்படவேயில்லை.

அதன் பின்னர் ஆசிரியர்களின் இடமாற்ற விவகாரம் பூதாகரமாகி, பிச்சல் பிடுங்கல்களுக்கு உட்பட்டு தீர்வு எதுவும் இன்றி அப்படியே கைவிடப்பட்டது.

இப்போது கல்வி அதிகாரி ஒருவர் ஜனாதிபதிக்கு முன்பாக உண்மையைச் சொன்னார் என்பதற்காக, எந்தக் காரணங்களையும் முன்வைக்காமல் இடம்மாற்றப்பட்டிருக்கிறார். கட்டப்படாத கட்டடம் ஒன்றைக் கட்டியதாக அதிகாரிகள் ஜனாதிபதியை நம்ப வைக்க முயன்ற மையை போட்டுடைத்ததுதான் அவர் செய்த தவறு.

இவ்வாறு தொடர்ந்து கல்வித்துறை காட்டாட்சியால் சீரழிந்து போய்க்கொண்டே இருக்கிறது. குறைந்தபட்ச நீதியைக்கூட இங்கு நிலைநாட்ட முயற்சிக்கிறார்கள் இல்லை.

அரச நியமனங்களில், குரங்கு பங்கிட்டது போன்று அமைச்சர்களும் ஆளும் கட்சி அமைப்பாளர்களும் தமக்கு விரும்பியவர்களை நியமிக்கிறார்கள். நியமிப்பவர்கள் தகுதியானவர்களாக இருந்தாலாவது பரவாயில்லை. எந்தத் தகுதியும் இல்லாதவர்களே அதிகம் நியமனம் பெறுகிறார்கள். வாக்குப் போடுவார்களா தேர்தலில் வேலை செய்வார்களா என்பது மட்டுமே அரச நியமனத்துக்கான இன்றைய தகுதியாகிவிட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்திக்காக மக்களின் பங்களிப்புடன் தெரிவு செய்யப்பட்டு அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்ட திட்டங்களில், மக்களுக்குப் பயன்தரக்கூடிய பெரிய கட்டடங்கள் அமைக்கப்படும் திட்டத்துக்கு அனுமதி தர அமைச்சர் மறுக்கிறார். ஏனெனில் அவை எதிர்த் தரப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் என்பது மட்டுமே காரணம்.

இப்படி அமைச்சர்களும் அரச நாடாளுமன்ற உறுப்பினர்களும் வைத்ததுதான் சட்டம் என்றாகிவிட்டது. அவர்களின் அரசு உருவாக்கிய சட்டங்களையும் ஒழுங்குகளையும் அவர்களே மீறி இங்கு தமக்கான காட்டாட்சியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். தட்டிக்கேட்க ஆளில்லாத காரணத்தாலும் தகுதியான பலமான எதிர்க்கட்சி ஒன்று இல்லாததாலும் அவர்களின் காட்டாட்சியில் ஒரே மழைதான். பின்னர் எப்படி நாட்டில் மழை பெய்யும். ஆட்சி பிழைத்தால் மழையும் பொய்க்கத்தான் செய்யும்.

# அலட்சியத்துக்கான புலிட்ஸர்

■ செந்தூரி

குற்றவுணர்வு ஒரு கொடும் வியாதி. தன்னாள்கைக் குட்பட்ட முயற்சியின் மூலம் சாதிக்கக்கூடியதென்று தெரிந்திருந்தவொரு காரியத்தை, தவறவிட்டதனால் ஏற்படும் பாதிப்பு இன்னொருவனின் துன்பத்துக்கு காரணமானதென்று தெரிகின்றபோது எழுகின்ற மனவலி கொடிதினும் கொடிது! தன் மனச்சாட்சியோடு சமரசம் செய்து கொள்ள முடியாத நல்லாத்மாக்கள் குற்றவுணர்வினால் காயப்படுவதில்லை. தவறென்று தெரிந்த பின்பும் திருத்திக் கொள்ளாத மனிதர்களிடம் உணர்வே இருக்காத போது, குற்றவுணர்வு மட்டும் எப்படி வந்துவிடப் போகின்றது.

தென்னாபிரிக்காவின் மேற்கு மலைத்தொடரின் பசிய போர்வையின் கதகதப்பினால் செழிப்புற்ற நகரம் ஜொஹானர்ஸ்பேர்க். கிரிக்கெட் பிரியர் நீங்களாயின், உங்களுக்கு இவ்விடம் இலகுவில் மறக்க முடியாத ஒன்று! தென்னாபிரிக்க அணிக்கெதிராக ஆஸ்திரேலியா பெற்றுக் கொண்ட உலகசாதனையான அதிகூடிய ஒருநாள் போட்டியொன்றின் ஓட்ட எண்ணிக்கையை, அடுத்த மூன்றரை மணி நேரத்தினுள் விரட்டிக் கலைத்து வெளுத்துக் கட்டிய தென்னாபிரிக்கர்களின் சாதனை பூமி! அங்கே பிறந்த ஹெவின் கார்ட்டர் தனது இருபத்தியிரண்டாவது வயதில் பிறந்த நாள் பரிசாகக் கிடைத்த புகைப்படக் கருவியை ஆழ்ந்து காதலிக்கத் தொடங்கினான். 'பப்பராஸிகள்' என்கின்ற பிரபலங்களைத் துரத்திப்படம் பிடித்து பிரபல்யம் ஆகின்ற புகைப்பட விற்பனைத் தொழில் பிரபல்யம் பெறத் தொடங்கிய காலத்தில், தனது எதிர்காலம் ஒளியோடும், இருளோடுமே இனிமேல் என்கின்ற முடிவுடன் புறப்பட்டான் ஹெவின்.

மூத்தவர்களின் குழுக்களில் சாதாரண ஒளிமானி வாசிப்பாளனாக தன்னை அறிமுகப்படுத்தி பல்வேறு தேசங்களுக்கும் அலைந்து திரிந்தவன், சரியாக பதினொரு வருடங்கள் தனக்கான அடையாளத்தைப் பெற காத்திருக்க நேரிட்டது. இன்றைக்கு சுதந்திர பூமியான, ஐக்கிய நாடுகள் சபையின் 194 ஆவது நாடான தென்சூடானின் மக்கள் கடுமையான பஞ்சத்திற்குட்பட்டு, ஒரு குவளை தண்ணீருக்காக உலகிடம் கையேந்தி இரந்து நின்ற 1993 ஆம் ஆண்டின் ஒருநாளில், தோளில் கனக்கும் ஒளிப்படக்கருவியுடன், அழுக்கு நிறைந்த ஆடைகளுடன், பறக்கும் தலைமுடியை விரல்களால் கோதியபடி தனக்கான இலக்கினைத் தேடி நடந்தான் ஹெவின்.

அடுத்தடுத்த மாதங்களில் ''நியூ யோர்க் டைம்ஸ்'' பத்திரிகையில் தன்னால் எடுக்கப்பட்ட புகைப்படம் வெளியாகும் வரை, அந்த நொடி பற்றிய எவ்வித சலனமும் இளம் கலைஞனிடம் ஏற்பட்டிருக்கவில்லை. புகழ், பெயர், பணம் என்று ஆர்முடுகி விதைத்த குறித்த புகைப்படம், புகைப்படத் துறையின் உயர்விநோத 1994 ஆம் ஆண்டுக்குரிய ''புலிட்ஸர்'' விருது வரை உயர்ந்து ஓய்ந்தபோது, ஹெவினின் பிட்டம் வழியேறிப் பின்தலையில் கெட்டியாக உட்கார்ந்து கொண்டது அட்டமத்துச் சனி!

உணவு வழங்கப்படும் நிவாரண முகாமொன்றினை நோக்கி நடக்க சக்தியில்லாமல் கைகளையும் ஊன்றி, தவழ்ந்து நகர முயன்று களைத்துக் கிடக்கின்ற வெற்றுமேனிப்பாலகி! அவள் பின்னால், தன் பசியாற்றும் கணத்துக்காக காத்திருக்கின்ற பிணந்தின்னிக் கழுகு ஒன்று! வேட்டை மிருகமொன்றின் முன்னால் பலியாகப் போகின்ற சக மானிடனைக் காப்பாற்ற முனையாமல், படமெடுத்ததோடு மட்டும் திரும்பி வந்து பிணம் பார்த்த ஹெவின் காட்டரை கலைஞ[illegible] பார்க்காமல், அலட்சிய[illegible] கேள்விகளைத் தொடுத்தது இந்தப் பொல்லாத உலகு!

''தவறுதலாக நடந்து விட்டது'', ''நான் அப்படி நினைக்கவில்லை'', ''எனக்கு முன்னாலும் பலர் கடந்து சென்றார்கள்'' என்று ஹெவின் சொன்ன வார்த்தைகள் எவற்றையுமே எவரும் நம்பத் தயாராக இல்லை! ''கைகளில் அந்தக் குழந்தையை தூக்கி, அருகில் இருந்த முகாமில் சேர்க்க தவறியமை'', ''தன் பையிலிருந்த உணவையாவது கொடுக்க முயன்றிராமை'', ''கல்லெடுத்து வீசி கழுகை விரட்ட தவறியிருந்தமை'', ''இரண்டு உயிர்களில் எதனுடைய பசி இறுதியில் வென்றது என்பது பற்றித் தெரிந்திராமை'' போன்ற நீதியான மனமொன்றின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் அழகிய ஜொஹானர்ஸ் பேர்க் கடற்கரையில் தன் காரினுள், தூக்க மாத்திரைகளால் தன்னுயிரை மாய்த்துக் கிடந்தான் ஹெவின் கார்ட்டர்! அவன் கைகளில் கிடந்த காகிதத் துண்டில், இருந்த ''என்னை மன்னித்து விடுங்கள்'' என்கின்ற இறுதி வார்த்தைக்கு இன்று வரைக்கும், எவருமே மன்னிப்பொன்றினால் பதிலளிக்கத் தயாரில்லை. கணத் தவறுதான் ஆயினும் அது மனித குலத்தின் களங்கம்!

கேப்பாப்பிலவு மக்கள்! அன்றைக்கு சூடானியச் சிறுமி ஒருத்தி இரையாகக் காத்துக் கிடந்ததைப் போல, சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனிதத் தனியன்கள் வேட்டை மிருகங்களின் காட்டில் தனித்து விடப்பட்டனர்.

எந்தப் பிணம் புணரும் தசை விரும்பிகளின் இரத்த வெறிக்குப் பயந்து, உயிர் ஒளித்தோடி இன்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன் அகதிகளாக வெளியேறினார்களோ, அதே மிருகங்களுக்கு முன்னால் தனித்து விடப்பட்டுள்ள இந்த மனிதர் கூட்டம் சாகப்பயந்திராத அசாதாரணர்களல்லர்! பெண்களும் சிறுவர்களும் பெரும்பான்மையினராய் நிரம்பியிருக்கின்ற அவர்களினுள், அடிப்படை வசதிக் குறைவு என்கின்ற நிரவப்படாத நோய் இன்னுமொரு பலி வாங்கிவிடக்கூடாதே யென்கின்ற அச்சம், எல்லோர் கண்களிலும் கூடு கட்டி நின்றிருந்தது.

'தரைமட்டமாக்கப்பட்ட வீடுகள்', 'மனித சஞ்சாரம் காணாமல் நீண்டு வளர்ந்த காட்டுச் செடிகள்', வெடிக்கும் அபாயத்தினை இன்னும் இழந்திடாத ஆயுத எச்சங்கள்', 'கரிய நிறத்தில் தூய்மைப்படுத்தப்பட்டிராத கிணற்றுத் தண்ணீர்', 'முள் வேலிகளால் எல்லைப்படுத்தப்பட்டுள்ள இராணுவ வலயங்கள்', 'கம்பிகளுக்கப்பால் கைகளில் சுடு கருவிகளோடு வக்கிரம் காக்கும் கண்களோடு சீருடைப் பேய்கள்' இவைதான் இன்றைய பொழுது வரை கேப்பாப்பிலவு, மந்துவில் போன்ற கிராம மக்களுக்காக முல்லைத்தீவின் அரச பணியாளர்கள் யாவரினதும் கடின உழைப்பின் (?) பயனாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள வாழும் வசதிகள்! மர நிழல்களில் இறக்கிவிட்டு, பொதி செய்த சமைத்த உணவினை எறிந்து விட்டு நகர்ந்து விட்ட அரச இயந்திரத்தினர்களில் எவனுமே தமிழனில்லையா?

அறிவித்த நேரத்திற்கு அரைமணி மேலதிகமாக மின்சாரம் தடைப்பட்டிருந்தால், தொலைபேசிக்கு பதிலளிக்கும் மின்சார சபை ஊழியருக்கு எவ்வளவு வசை விழுந்திருக்கின்றது? வாங்கிய அரிசியில் மிக மிக சொற்பமாக, மண்ணெண்ணெய் வாடை அடித்தாலே போதுமே, கூட்டுறவுக் கடை முகாமையாளரைக் ''கொலை வெறியுடன்'' திட்டியிருக்கின்றீர்களா இல்லையா? குழாய்க் குடி நீரை திறந்து மூட வரும் மாநகர சபை ஊழியன், வெறும் இரண்டு நிமிடம் [illegible] வந்து நிறுத்த முயன்றாலே [illegible] செய்கூலி, சேதாரத்துக்கு பேரம் பேசுபவர்களின் கணக்காய் எவ்வளவு நியாயம் கேட்டு வார்த்தைகளை வீசி இருக்கிறீர்கள்? கேபிள் தொலைக்காட்சியில் சன் ரீ.வி வராமல் போய் விட்ட நாளில், இணைப்புச் சரி பார்க்கும் பையனின் கைத்தொலைபேசிக்கு எத்தனை அழைப்புக்களை விட்டிருக்கின்றீர்கள்? இவையெல்லாம் உங்களுக்கு மட்டும் ஆடம்பரமாக இல்லாமல் அத்தியாவசியமாக தெரியும்போது, பால்மா இல்லையே? குடிநீர் இல்லையே? மலசலகூடம் இல்லையே? மரநிழலைத் தவிர வேறு இடம் இல்லையே? மறுநாள் சமைக்க நெருப்பைத் தவிர வேறெதுவுமில்லையே? என்கின்ற கூக்குரல்கள் எவையுமே ஏன் வலிக்கவில்லை இன்னமும்?

உனக்கு வந்தால் ''இரத்தம்'' அயலானுக்கு வந்தால் ''தக்காளிச் சட்னியா''?

லட்சங்களில் பொறுக்கித் தின்னும் அரசியல்வாதிகளாயினும், பல ஆயிரங்களில் பிச்சையெடுக்கும் அதிகாரிகளாயினும், சில ஆயிரங்களில் 'சுட்டு' சேமிக்கும் அரச ஊழியர்கள் ஆயினும், தவறிய கடமை தன் சக மனிதனின் உயிர்பாதிப்பிற்கு நிகரானதென்பதை ஏனைய்யா உணர மறுக்கிறீர்கள்? ஆபத்து நிறைந்து பூமியில் இறக்கி விடுவதைப் பூர்த்தியாக்கும் உங்களுக்கு மேல் உள்ளவனின் உத்தரவை நிறைவேற்றுவதில் உள்ள திருப்தி மட்டும்தான் மனு தர்மமா?


வவுனியா காளிகோயிலில் தேங்காய் உடைத்து, கிளிநொச்சி சந்தியில் பதாகை ஏந்தி ஆர்ப்பரித்தால் மட்டும் தீருமா இந்த இழிநிலை? எப்போது போராட எழுந்தாலும், 'காய்' எப்போது 'கனியாகும்' என்று மட்டுமே பேச்சுப் பல்லக்கில் ஏறுபவர்களே? ஏனடா வேரை விசாரிக்க அடிக்கடி மறந்து போகிறீர்கள்? தவித்த வாயோடு தாய்மடி மீது இளைத்துறங்கும் கேப்பாப்பிலவு மண்ணின் குழந்தையொருவனிலிருந்துதானே தொடங்குகின்றது தமிழ்த்தேசியத்தின் ஆணிவேர் என்கின்ற அறவுண்மையை மறுத்துப் பேசும் வேட்டிகள் யாவையுமே வெண்மையா?

ஊருக்கு உண்மை சொல்லப் போன செய்தியாளன், களபூமியில் தடுத்து நிறுத்தப்படும்போது ஏன் அவ்விடத்தில் எந்த தமிழ்த்தேசியவாதியும் நின்றிருக்கவில்லை? இரவிரவாக மரநிழலில் தான் உறங்கப்போகிறார்கள் என்று தெரிந்த பின்னரும், 'பிக்கப்பில்' விரைந்து வீட்டுக்குப் போன அரச நிர்வாகிகளின் சம்பளம் குபேரனின் நேரடிக் கஜானாவிலிருந்தா சொரிகிறது? தமிழ்த்தேசியம் என்கின்ற தீராக் கனவின், அடிப்படை அலகுகள் ஒவ்வொரு ஏழைத் தமிழனும்தான் என்கின்ற தெளிவினை உணரும் வரை உங்களுக்கும், 'ஹெவின் காட்டருக்கும்' குறைந்தபட்சம் 'ஆறு வித்தியாசம்' கூட கண்டுபிடிக்க முடியாது எவராலும்?

, சக இனத்தவரின் அழுகுரல் அதீதித்து ஒலிக்கும் அவல வேளைகளில், ''கட்சியாகப் பதிந்து கொள்வதற்காக கடிபடும் பஞ்சாயத்துக்களும்'', ''பத்திரகாளி அம்மன் வாயிலில் மாலை சூடி புளகாங்கிக்கும் பொழுதுகளும்'', ''இன்னமும் முஸ்லிம் காங்கிரஸின் வாயைப் பார்த்து ஏங்கி நிற்கும் இழிவுகளும்'', அவ்வளவு கொள்ளை அழகா தோழர்களே! குற்றவுணர்வென்ற கொல்லும் மனச்சாட்சி நிறைந்த நேரிய மனம் தங்களிடம் மீதமிருக்குமாயின், அடுத்தடுத்த தசாப்தங்களில் வரலாற்றின் பக்கங்கள் கேப்பாப்பிலவு மக்களின் கதைகளை கண்ணீர் சொரிந்து சொல்லுகையில், அந்த நேரம்- அந்தி நேரம் தங்களுக்கும் தூக்க மாத்திரைகளோ, முழக்கயிறோ, நச்சுப் போத்தலோ நிச்சயம் தேவைப்படும். அக்கணம் வரைக்கும் குற்றவுணர்வின் முன்னோடி, இன்னமும் மன்னிக்கப்பட்டிராத 'ஹெவின்' மட்டுமே! ''நாளைக்கும் நிலவு வரும், நாம்.......?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்துக்கு குழி தோண்டும் முயற்சி



'மிறர்' பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கம்: தமிழில் கோகுலன்

நீதித்துறையில் காலத்துக்குக் காலம் தவறான தீர்ப்பு வழங்குதல்களும், கட்சி அரசியல் திணிப்புக்களும் இடம்பெற்றிருந்த போதிலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை வழங்கிய 1978 ஆம் ஆண்டு அரசமைப்புக்கு பின்னர், ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பலத்த அரணாக அதுவே விளங்கி வருகின்றது.

நாட்டின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியான ஜே. ஆர். ஜயவர்த்தன முதல் தடவையாக தனிப்பட்ட சட்டவாளராகவிருந்த நெவில் சமரக்கூனை பிரதம நீதியரசராக நியமித்தார். அது ஒரு முன் வழக்கமற்ற நியமனமானாலும், அவர் ஒரு சிறந்த வழக்கறிஞர் என்பதால் அதற்கு சிறிய அளவிலேயே எதிர்ப்பு இருந்தது. அதற்குப் பிறகு, ஜயவர்த்தனவால் எதிர்பார்க்கப்படாதவைதான் நடைபெற்றன.

திரு சமரக்கூன் அவரது குணாம்சங்களுக்கும், மனோதர்மத்துக்கும் வசப்பட்டு உண்மையாக செயல்பட்டு தீர்ப்புகளை சுயாதீனமாகவும், சீரிய முறையிலும் வழங்கினார். அவை சட்டப்படி இறுக்கமாகவும் நீதியின் நியமங்களுக்கு அமைவாகவும் இருந்தன.

ஜனாதிபதியின் தலையீடுகளும் அச்சுறுத்தல்களும் மிகவும் சகிக்க முடியாத நிலைக்கு வந்தபோது திருசமரக்கூன் ஒரு பொதுக்கூட்டத்தில் அன்றைய அரசை பலமாகக் கண்டித்து உரையொன்றை நிகழ்த்தியிருந்தார். கோபத்துக்குள்ளான ஜனாதிபதி, பிரதம நீதியரசருக்கு எதிராக சில குற்றச்சாட்டுக்களைச் சோடித்து திரு சமரக்கூனை விசாரணைக்குட்படுத்தும் பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் தமக்கிருந்த 5/6 பெரும்பான்மையைப் பயன்படுத்தி நிறைவேற்றினார். ஆனால் நாட்டின் திறமை மிக்கவர்களில் ஒருவராக இருந்த பிரதம நீதியரசர் விலகிக் கொள்ளத் தீர்மானித்து கவலையுடன் ஆனால் புத்திசாலி மனிதராக நாட்டை விட்டு வெளியேறினார்.

1995 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அப்போதைய சட்டமா அதிபர் சரத் என் சில்வாவை பிரதம நீதியரசராக நியமித்தார். ஆரம்பத்தில் ஒரு சில எதிர்ப்புகள்தான் வந்தன. ஏனென்றால் சில்வா ஒரு சிறந்த வழக்குரைஞராகவும், நீதிவானாகவும் மதிக்கப்பட்டிருந்தார்.

ஆனால் கட்சி அரசியல் மெதுவாக உள்புகுவதற்கு ஆரம்பித்தது. இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உயர் நீதிமன்றத்தின்மீது செல்வாக்கு பிரயோகிக்க முயல்கிறார் என்ற குற்றச்சாட்டுகள் உருவாகி பிரதம நீதியரசருடன் மோதல் நிலை ஏற்பட்டது.

ஜனாதிபதி பதவியிலிருந்து விலக விரும்பாத நிலையில் ஒரு வருடத்துக்கு முன்பே அவர் பதவியிலிருந்து விலகும்படி செய்தார் பிரதம நீதியரசர்.

புதிய ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ வுடனான பிரதம நீதியரசரின் தொடர்புகள் ஆரம்பத்தில் சுமுகமாகவே சிலகாலம் காணப்பட்டன. ஆனால் அவர் தமது 65 வயதில் ஓய்வுபெற்றபோது நிறைவேற்று அதிகாரத்துறைக்கும் நீதித்துறைக்கும் இடையில் எதிர்ப்புகள் தோன்றியிருந்தன. பல சுயாதீனமான தீர்ப்புகள் இதற்குக் காரண மாகும். இதில் திறைசேரியின் அதிகாரமிக்க செயலாளராக இருந்தவரான பி.பி.ஜயசுந்தர மீது கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு அவர் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று விடுக்கப்பட்ட பணிப்புரையும் அடங்கும். இப்பொழுது சரத் என்.சில்வா எதிர்க்கட்சிகளுடன் இருக்கிறார். ராஜபக்ஷ நிர்வாகத்தில் காணப்படும் சர்வாதிகாரப் போக்கு ஊழல் போன்றவை குறித்து அழுத்தமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

ஜனாதிபதியின் தலையீடுகளும் அச்சுறுத்தல்களும் மிகவும் சகிக்க முடியாத நிலைக்கு வந்தபோது திருசமரக்கூன் ஒரு பொதுக்கூட்டத்தில் அன்றைய அரசை பலமாகக் கண்டித்து உரையொன்றை நிகழ்த்தியிருந்தார். கோபத்துக்குள்ளான ஜனாதிபதி, பிரதம நீதியரசருக்கு எதிராக சில குற்றச்சாட்டுக்களைச் சோடித்து திரு சமரக்கூனை விசாரணைக்குட்படுத்தும் பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் தமக்கிருந்த 5/6 பெரும்பான்மையைப் பயன்படுத்தி நிறைவேற்றினார்.

இந்த வகையில்தான் நிறைவேற்றுத்துறைக்கும், நீதித்துறைக்கும் இடையில் ஆபத்தான மோதல் நிலையொன்றை நாம் எதிர்கொண்டு நிற்கின்றோம்.

கடந்தவாரம் நீதித் துறைச்சேவைகள் ஆணைக்குழு, முன் எப்போதுமில்லாத வகையில் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் நீதித்துறையின் சுயாதீனத்துக்கு பெரும் அச்சுறுத்தல் தோன்றியிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

சமீப காலமாக நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க தலைமையிலான உயர் நீதிமன்றமானது துணிச்சலான சுயாதீன தீர்ப்புக்களை வழங்கி வருகின்றது. குறிப்பாக உயர்தரம் இஸட் ஸ்கோர் மற்றும் 'திவிநெகும' சட்ட முன்வரைபு தொடர்பான தீர்ப்புகள். இந்தத் தீர்ப்புகளால் அரச தலைவர்கள் கோபமுற்றுள்ளார்கள். அதனால் தந்திரமான முறையில் நீதித்துறையை அச்சுறுத்தயிருக்கிறார்கள். பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை 5 வருடங்களுக்குள் வரையறை செய்யும் வகையில் அரசமைப்புத் திருத்தம் கொண்டு வருவது பற்றியும் எதிர்வு கூறல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் போக்கு தொடருமானால் அதுதான் ஜனநாயக சவப்பெட்டியின் மீது அறையப்படும் இறுதி ஆணியாக இருக்கப் போகின்றது. சர்வாதிகாரத்தின் பயங்கர அபாயங்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறலுக்கு இடமே இல்லாத ஊழலும் பரிகாசத்துக்குரிய அரசியலுமே அங்கு நிலைபெற்றிருக்கும். (ப)

## பெற்றோர்களைப் பிள்ளைகளே பராமரிக்க வேண்டும்....

முதியோர்கள் பலர் இன்று பெரும் மனஉளைச்சலுடன் வாழ்கிறார்கள். இலங்கையில் 60 வயதின் மேல் முதியவர்கள் எனவும், மேலைத் தேயங்களில் பொதுவாக 65 வயதின் மேல் முதியவர்கள் எனவும் கூறப்படுகிறார்கள். இலங்கையில் 70 வயதின் மேல் 2 லட்சத்து 19193 பேர் உள்ளனர். மனஉளைச்சலின் மத்தியிலும் ஆண்களின் ஆயுள் 73 ஆகவும், பெண்களின் ஆயுள் 76 ஆகவும் உள்ளது.

உளநல மேம்பாடு என்பதற்கான தீர்வாக 'கலந்துரையாடல்' முன்வைக்கப்பட்டுள்ளது. முதியவர்களின் அனுபவப் பகிர்வுடனான கலந்துரையாடல்கள் அபிவிருத்தியின் மைல் கற்களாக அமையும் என்ற சிந்தனையுடன் இன்று இன்னுமொரு இறுதிப் பயணத்தில் இணைந்து கொள்வோம்.


காலைக் கதிரவனின் கதிர்வீச்சில் சிலிர்த்துப் போய் நின்ற விதம்விதமான செவ்வரத்தம் பூக்கள் அங்குமிங்கும் தலையசைத்தபடி நின்றன. பூவாளியினால் தண்ணீரை இறைத்தபடி நின்ற முதியவரின் புன்முறுவல் என்னை ஈர்த்தது. பெரிய ஒரு சந்தனப்பொட்டும், மூன்று குறிகளில் திருநீறும் பளிச்சென்று நெற்றியில் மின்னியது. காதில் செருகியிருந்த வெள்ளை நிறத் தேமாப்பூ காற்றில் அசைந்தபடி இருந்தது. தம்பி இண்டைக்கு என்ர மனுசி உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கின்றா. கோவிலுக்கு போட்டு வந்து நிக்கிறன். பலாலி தம்பி எங்கட இடம், வெளிக்கிட்டு கனகாலமாகிட்டுது. மகன் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில டொக்டர். பிரச்சனையில வெளிக்கிட்டவர் கனடாவில் இருக்கிறார்.

ம்...நீண்ட ஒரு பெருமூச்சுடன் பூங்காவினுள் இருந்த வாங்கின் மேல் அமர்கின்றார். பார்வையால் நோக்கிய அவர் மீண்டும் தொடர்ந்தார். எங்கட ஊர்ப்பிள்ளை, ரொம்பக் கஷ்டம். ஒன்றும் தேவையில்ல, குறிப்பை மட்டும் தாருங்கோ என்று வாங்கிப் பார்த்தன். வாங்கேக்குள்ளேயே நினைச்சன் குறிப்பு பொருந்த வேண்டும் என்று. முருகன் கைவிடேல்ல. குறிப்பு நல்ல பொருத்தம். மகனைக் கேட்டன், அப்பா நீங்க சொன்னா சரி என்றார். பிள்ளையை வெளிநாட்டுக்கு அனுப்ப கலியாணமும் முடிஞ்சுது. தம்பி, இப்பவும் மாமா என்டா தேன் ஒழுகும், அப்படி பாசம். நல்ல பிள்ளை. குடும்பம் சந்தோஷமாயிருக்கினம் என்னையும் வரட்டுமாம். எனக்கு எள்ளளவும் விருப்பம் இல்லை.

தோட்டத்தோட கிடந்து எத்தனை பயிர்கொடியை வைச்சிருப்பம். இண்டைக்கு எல்லாம் நாசமாய்ப் போச்சுது. அந்த செல்வாக்கைச் சொல்லேலாது மோன. அப்படி காசு புழங்கிச்சு. அந்தத் தண்ணியை குடிச்சாலே பசியெல்லாம் போயிடும் கண்டியளோ. மரவெள்ளிக்கிழங்கு அந்த செம்பாட்டு மண்ணிலை அந்தமாதிரி விளைஞ்சிருக்கும். இண்டைக்கு எல்லாம் கனவு மாதிரிக் கிடக்குது. மகன் நல்லாப் படிச்சார். இதனால நானும் தலைநிமிர்ந்து நிக்கிறன். தேடி எடுத்த மருமகளும் நல்லா வாச்சுப்போச்சு. அதனால நாங்க ஊசாடித்திரியுறம். என்ர மனுசியை இங்க இருக்கிற உத்தியோகத்தர்கள் நல்லாப் பாக்கினம்.

வீட்டில கூட இப்படியில்ல. கவலை தெரியாம இருக்கிறன் என அவரது வார்த்தைகள் முற்றுப்புள்ளியாகின்றன. ஐயா அவசரமாக வாங்கோ தாதி ஓடி வருகின்றார். இதயத்தைப் பலமாகப் பொத்திப் பிடித்தபடி மனைவியின் விடுதியை நோக்கி ஓடுகின்றார். மனைவியின் உடல் வேதனையில் அங்குமிங்கும் அசைந்தது.

அப்பா நான் போகப்போறன். மகன்ர சந்தோஷங்களையும் பார்க்காமப் போறன். நீங்கள் சந்தோஷமாக நான் இருந்த இடத்திலேயே இருங்கோ. நானும்... வார்த்தைகள் மரணிக்கத் தொடங்கின. தேவாரங்களை அந்த முதியவரின் உதடுகள் உச்சரித்துத் தீர்த்தன. மௌனமாக அவரது இதயம் அழுது தீர்த்தது.




கணவனும் மனைவியுமாக முதியோர் இல்லத்தில் வாழ்ந்து இன்று மனைவியை இழந்த நிலையில், அந்த முதியவரின் உடல் விம்மித் தணிந்தது. மனைவியிருந்த இடத்திலேயே தானும் வாழவேண்டும் என்ற எண்ணம் வலுவாக வேரூன்றியது. அந்த விடுதிகளில் இருந்த அனைவரும் எழுந்து நிற்கின்றனர். வழமைபோன்று அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்துமாறு அறிவிக்கப்படுகின்றது.

பிரேத அறையை நோக்கி அந்த முதியவரின் உடல் பயணிக்கிறது. திருமணவாழ்க்கையின் நாற்பத்து இரண்டு வருடங்களில் உருக்குலையாதிருந்த திருமண உறவு இன்று விரிசலாகி உடைந்து சிதறியது. அப்பா! அம்மாவுக்காக என்னால் அழ முடியவில்லை. அந்தஅளவிற்கு நான் உங்களைப் பிரிந்த காலம் முதல் அழுதுதீர்த்துவிட்டேன். அம்மாவின் இறுதிக்கடன்களை கூட நான் செய்யமுடியாததையிட்டு கலங்கி அழுகின்றேன். அம்மாவைப் பார்க்க நான் வந்துகொண்டிருக்கிறேன். என்தாயின் உடலில் விழுந்து அழுதால் கூட என்மனம் ஆறாது. வரநினைத்தும் வரமுடியாது இருந்த நான், இன்று என்ன நடந்தாலும் வர நினைத்து விட்டேன். இரண்டு நாட்கள் நான் வரும்வரை எனக்காக என்தாயை வைத்திருங்கள்.மகனின் புலம்பல் தொடர்ந்தது. தொலைபேசியில் வார்த்தைகள் வெடித்துச் சிதறின.

கண்ணீர் எல்லாம் வெந்நீராக அந்தக் காட்சி நகர்ந்தது. முதியவரின் சட்டையெல்லாம் தொப்பையாக நனைந்தது. என்னைப்பார்த்து இலேசாக கையை அசைக்கின்றார். ஆடிப்போன அவரது மனதின் தோற்றம் கைகளில் தெரிந்தது. இறுதி ஊர்வலக் காட்சி இப்போது புள்ளியாகிக் கொண்டது. முதுமை சுமையாக மாறியமைக்குள் சமூகத்தின் பங்களிப்பும் ஊறிக்கிடந்தது.

(தொடரும்)

த.கிருபாகரன், அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகை

ஒருவர் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்பதன் வெளிப்பாடு புன்னகை. எம்மை அன்புடன் வரவேற்கிறார் என்பதன் அடையாளம் புன்சிரிப்பு. அழகுத் தமிழில் முறுவல் என்பார்கள்.

உள்ளத்தில் வெறுப்போ,பகையோ இருக்குமானால் புன்முறுவல் வராது. ஒருவரது வருகை பிடிக்கவில்லை என்றாலும் புன்னகை பூக்காது. புன்னகை என்பது பூவாகப் பூக்கும் என்பார்கள் இலக்கியப் புலவர்கள்.

சீதையின் புன்முறுவல் ''புதியதோர் முறுவல் பூத்தாள்'' என்பார் கம்பர். பெண் கொடிதானே! அதில் புன்முறுவல் பூப்பது பொருத்தமானது தானே!

அம்பிகையின் அழகை வர்ணிக்கும் லலிதா ஸகஸ்ர நாமமும் ''மந்தஸ்மித ப்ரபா பூரமஜ்ஜத் காமேச மானஸா'' என்ற நாமமும் அவள் புன் சிரிப்பின் அழகை இயம்புகிறது. அபிராமி அந்தாதியும் அம்பிகையின் அழகுப் புன்முறுவலை ''பனிமுறுவல், துவளப் பெறாது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்'' என்றே பாடுகிறது.

மயிலிறகின் தண்டுப் பகுதியின் வெண்மை அம்பிகையின் பல் வெண்மைக்கு உவமையாக பேசப் பெறும். மூககவி என்பவர் நூறு பாடல்கள் அம்பிகை புன்முறுவல் பற்றி மட்டும் பாடுகிறார். அது ஒரு புறம்.

சிலபேர் பிறரைப் பார்க்கும்போது கண்ணாடியை மாட்டிக் கொள்கிற மாதிரி புன்சிரிப்பை எடுத்து முகத்தில் மாட்டிக் கொள்வார்கள். ஆதாரம், தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள், செய்தியாளர்களின் முகமூடிப் புன்னகை. கண்ணாடியைக் கழற்றி மாட்டுகிற லாவகத்தில் சிரிப்பையும் கழற்றி மாட்டுவார்கள்.

எனவே ஒருவர் புன்னகை மாறாத முகமாக இருந்தால் கோபமற்றவர். அன்பானவர். சாந்தமானவர். நெருங்கத் தக்கவர். கடின சித்தம் அற்றவர். அழகானவர் பலராலும் விரும்பி மதிக்கத்தக்கவர். பிறரை ஈர்க்கும் திறன் உடையவர். இப்படி பல்லுக்கு ஒரு பண்பு வைத்து முப்பத்திரண்டு பெருமைகள் முழங்கலாம்.

இவ்வளவு ஏன் சொன்னேன் என்றால், சற்குரு அருணகிரிநாதர் தம் முதல் பாட்டின் முதல் வரியில் ஒருவருடைய புன்னகை முகத்தை மிக மிகக் கொண்டாடுகிறார். இத்தனைக்கும் அந்த முகம் அவரது இஷ்ட தெய்வம் முருகனுடைய முகம் இல்லை. அந்த முருகனுடைய இஷ்ட தெய்வம் (மனைவியை இப்படிச் சொன்னால் தப்பில்லை) தெய்வானை அம்மையின் திருமுகம் !

திருவண்ணாமலை கோபுரத்தில் இருந்து அருண கிரிநாதர் கீழே விழ, முருகப்பெருமான் அவரைத் தாங்கிப் பிடித்துக் காத்தருள்கிறான். அவன் தரிசனம் அவரை மடை மாற்றுகிறது. வாழ்விலும் வாக்கிலும் புது வேகம் பிறந்தது. வேலினால் நாவினில் எழுதி, தம்மைப் பாடுக என்று கட்டளையிட்டார். ''முத்ததைத் தரு'' என்று அடியெடுத்தும் கொடுக்கிறான்.

முத்து என்றதும் சற்குரு அருணகிரி நாதர் பல்லைப் பற்றிச் சிந்தித்தார் போலும். பல்லுக்கு ஒளி உண்டு. பற்பசை விளம்பரங்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். மலருக்கு ஒளியுண்டு என்பதே பாரதி பாடிய பிறகுதான் பலருக்குத் தெரியும். ''சோலை மலர் ஒளியோ உனது சுந்தரப் புன்னகைதான்'' என்று புன்முறுவலை சோலை மலர் ஒளி என்கிறார் பாரதி.

முத்து என்றதும் பல்லொளி நினைவுக்கு வர, பல்லின் வரிசை அழகு அடுத்து நினைவுக்கு வருகிறது. பல்லின் அழகே அது வரிசையாக இருப்பதில் தான். மேடு பள்ளமாக இருந்தால் ஈர்ப்பு வராது. பல்வரிசையின் ஒழுங்கு பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட விடயமாகும்.



சுகி.சிவம்

# தொழிற் பயிற்சி வகுப்புகளை வழங்கும் நல்லொழுக்க சம்மேளனம்

(கடந்த வாரத் தொடர்ச்சி..)



இந்த ஆண்டில் வாழ்வாதாரத் திட்டம், மது பாவனை, புகைப்பிடித்தல், போதைப் பாவனைத் தடுப்பு விழிப்புணர்வுத்திட்டம், உட்கட்டுமாணம், அந்தியகாலத் திட்டம், சூழல் சுற்றாடல் பாதுகாப்புத் திட்டம் ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வாழ்வாதார திட்டத்தின் கீழ் ஈ.வி.ஐ. உதவி நிதி வழங்கல் தொழில் பயிற்சி வழங்கல், தொழில் முயற்சிக்கான கடன் வழங்கல், சேமிப்புப் பழக்கத்தை தூண்டல் பயிற்சி வழங்கல் என்பன முன்னெடுக்கப்பட்டன.

ஈ.வி.ஐ உதவி நிதி வழங்கலின் கீழ் மிகவும் நலிவுற்ற வறிய மக்களுக்கான வாழ்வின் ஆதாரத்துக்கான, அவர்களின் தேவைகளின் முன்னுரிமைக்கேற்ப குறிப்பிட்ட உதவிநிதி வழங்கப்பட்டு அவர்களின் குறிப்பிட்ட தேவை பூர்த்தி செய்யப்பட்டது. இதன் பிரகாரம் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவின் 5 பயனாளிகளுக்கு கோழிவளர்ப்புக்கென 80 ஆயிரம் ரூபாவும், 3 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்புக்கென 60 ஆயிரம் ரூபாவும், 5 பயனாளிகளுக்கு மாடு வளர்ப்புக்கென ஒரு இலட்சம் ரூபாவும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் ஒரு பயனாளிக்கு வியாபாரத்துக்கென 15 ஆயிரம் ரூபாவும், 10 பயனாளிகளுக்கு கோழிவளர்ப்புக்கென ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், 4 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்புக்கென 60 ஆயிரம் ரூபாவும், 2 பயனாளிகளுக்கு மாடு வளர்ப்புக்கென 30 ஆயிரம் ரூபாவும், 2 பயனாளிகளுக்கு விவசாயச் செய்கைக்கென 30 ஆயிரம் ரூபாவும், ஒரு பயனாளிக்கு தையலுக்கென 15 ஆயிரம் ரூபாவும், 3 பயனாளிகளுக்கு மரவேலைக்கென 45 ஆயிரம் ரூபாவும், ஒரு பயனாளிக்கு வீடுமேய்தலுக்கென 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. (மொத்தமாக 37 பயனாளிகள் 6 இலட்சம் ரூபாவை ஈ.வி.ஐ. உதவி வழங்கல் திட்டத்தின் மூலம் பெற்றுள்ளனர்)

ஈ.வி.ஐ. உதவி நிதி வழங்கலின் கீழ் மிகவும் நலிவுற்ற வறிய மக்களுக்கான வாழ்வின் ஆதாரத்துக்காக, அவர்களின் தேவைகளின் முன்னுரிமைக்கேற்ப குறிப்பிட்ட உதவி நிதி வழங்கப்பட்டு அவர்களின் குறிப்பிட்ட தேவை பூர்த்தி செய்யப்பட்டது.

தொழிற் பயிற்சி வழங்கலாக பாடசாலை விலகிய இளைஞர், யுவதிகள் உயர்கல்வியைத் தொடர முடியாத நிலையில் ஒரு வேலை வாய்ப் பைப் பெற்றுக் கொள்ள அல்லது ஒரு தொழிலை ஆரம்பித்து வருமானத்தைப் பெற்றுக் கொள்ளவென, ஒரு தொகுதியினருக்கு தொழிற் பயிற்சி வழங்கப்பட்டது. அத்துடன் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுகளில் தலா 6 பேருக்கு பற்றிக் பயிற்சி வழங்கப்பட்டது.

தொழில் முயற்சிக்கென குறிப்பிட்ட இந்த நிதியாண்டில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 15 பேருக்கு கால் நடை வளர்ப்புக்காக 4 லட்சத்து 35 ஆயிரம் ரூபாவும், 4 பேருக்கு விவசாயச் செய்கைக்காக ஒரு லட்சத்து 13 ஆயிரம் ரூபாவும் 16 பேருக்கு சிறுவியாபாரத்திற்கென 5 லட்சம் ரூபாவும், 5 பேருக்கு கோழி வளர்ப்பிற்கென 50 ஆயிரம் ரூபாவும், 3 பேருக்கு சிறுகைத் தொழில்களுக்கென 30 ஆயிரம் ரூபாவும், 2 பேருக்கு மரவேலைக்கென ஒரு லட்சத்து 3 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டது.

இதே போல பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 44 பேருக்கு கால்நடை வளர்ப்புக்கென 13 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், 16 பேருக்கு விவசாயச் செய்கைக்கென 6 லட்சத்து 85 ஆயிரம் ரூபாவும், 15 பேருக்கு கடற்றொழிலுக்கென 4 லட்சத்து 32 ஆயிரம் ரூபாவும், 28 பேருக்கு வியாபாரத்திற்கென 11 லட்சத்து 90 ஆயிரத்து 500 ரூபாவும், 26 பேருக்கு கோழி வளர்ப்பிற் கென 5 லட்சத்து 97 ஆயிரம் ரூபாவும், 14 பேருக்கு சிறுகைத் தொழிலுக்கென 5 லட்சத்து 19 ஆயிரம் ரூபாவும், 4 பேருக்கு மர வேலைக்கென ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

மொத்தத்தில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 45 பயனாளிகளுக்கு 12 லட்சத்து 31 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 147 பயனாளிகளுக்கு 49 லட்சத்து 43 ஆயிரத்து 500 ரூபாவும் 2008 ஆம் ஆண்டில் தொழில்முயற்சிக் கடனாக பகிர்ந்தளிக்கப்பட்டது. வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தில் கடன் பெற்ற கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 11 அமைப்புக்களிலிருந்து 13 லட்சத்து 94 ஆயிரத்து 420 ரூபாவும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 21 அமைப்புக்களிலிருந்து 61 லட்சத்து 34 ஆயிரத்து 10 ரூபாவும் குறித்த ஆண்டில் கடன் மீளளிப்பாகப் பெறப்பட்டது.

கர்ணன்

சேமிப்புப் பழக்கத்தைத் தூண்டும் திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டு வரை அங்கத்துவப் பயனாளிகளிடமிருந்து அங்கத்துவ அமைப்புக்களினூடாக சேமவட்டி உட்பட 69 லட்சத்து 27 ஆயிரத்து 822 ரூபா 12 சதம் நல்லொழுக்க நிறுவனத்தில் சேமிக்கப்பட்டிருந்தது. கடன் பெற்றவர்களில் கடன் மீளளிப்பினை நிறுவன ஒழுங்கு விதிகளுக்கேற்ப செலுத்தி வந்தவர்கள் தாங்கள் பெற்ற கடன் தொகையை அவர்களையறியாமலே சேமிப்பாகப் பெற்றுள்ளார்கள். பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 17 அங்கத்துவ அமைப்புக்கள் 50 லட்சத்து 59 ஆயிரத்து 761 ரூபா 4 சதத்தையும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 12 அங்கத்துவ அமைப்புக்கள் 18 லட்சத்து 68 ஆயிரத்து 61 ரூபா 8 சதத்தையும் சேமிப்பாகப் பெற்றுள்ளன. இந்த சேமிப்பில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மிகக் குறைந்த சேமிப்பாக ஆயிரத்து 729 ரூபா 13 சதத்தை கெருடாவில் அம்பிகை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும், மிகக்கூடிய சேமிப்பாக 5 லட்சத்து 42 ஆயிரத்து 454 ரூபா 28 சதத்தை உதய சூரியன் கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் மிகக் குறைந்த சேமிப்பாக 10 ஆயிரத்து 124 ரூபா 31 சதத்தை அல்வாய் ஞானவைரவர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும், மிகக் கூடிய சேமிப்பாக 4 லட்சத்து 11 ஆயிரத்து 459 ரூபா 62 சதத்தை கப்புதூ சனசமூக நிலையமும் பெற்றிருந்தன.

SYB பயிற்சி வழங்கலின் கீழ் இந்நிதியாண்டிலும் (2008) நிறுவன அங்கத்துவப் பயனாளிகள் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் தொழில் முயற்சியை ஆரம்பித்து அதனை இலாபகரமாக எப்படிச் செய்வது என்பதற்கான ''உங்கள் தொழிலை ஆரம்பிப்போம்'' என்னும் பயிற்சி நெறி இரு கட்டங்களாக நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி நெறியில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலிருந்து 21 பயிற்சியாளர்களும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து 15 பயிற்சியாளர்களுமாக மொத்தம் 36 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றிருந்தார்கள்.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் இரண்டாவது செயற்பாடாக மதுப்பாவனை, புகைப்பிடித்தல், போதைப்பொருள் பாவனைத் தடுப்பு விழிப்புணர்வுத் திட்டம் இந்த ஆண்டும் சிறப்பாக முன்னெடுக்கப் பட்டது. வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்தாது, அதனை அழிக்கும் நடவடிக்கையாகவும் வாழ்க்கையிலும் குடும்பத்திலும் துன்பத்தையும், துயரத்தையும் தருகின்ற மதுபாவனையைத் தடுத்தலுக்காக பல இடங்களிலும் பலவழிகளிலும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டு. மாநகர சபை ஊழியர்கள் பொலிஸாரிடம் வசமாக மாட்டினர்

### திருடிய பொருள்களும் மீட்பு



மட்டக்களப்பு,ஒக்.3

மட்டக்களப்பு நகரப்பகுதியில் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த மட்டக்களப்பு மாநகரசபை ஊழியர்கள் மூவரை மட்டக்களப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடம் இருந்து ஒரு தொகை பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த 13ஆம் திகதி திருப்பெருந்துறை சமூக அபிவிருத்தி நிறுவனம் மற்றும் மட்டக்களப்பு நகரில் உள்ள சில வீடுகள் உடைக்கப்பட்டு திருடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து கணினிகள், மடிக்கணினி, புகைப்பட வீடியோ கமராக்கள், தங்கநகைகள் உட்பட பல பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட பொருள்கள் மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்ட நிலையில், அவற்றை மீட்டதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சாந்தகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் இவர்களை முன்னிலைப்படுத்தியபோது எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச)

## முருகன் கோயில் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தம்:

# தொல்பொருள் ஆராய்ச்சி எனக் கூறி விகாரை அமைக்கும் சூழ்ச்சியா?

### தாண்டியடி ஆலய நிர்வாகத்தினர் அதிர்ச்சி

அம்பாறை,ஒக்.3

தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் விகாரை அமைக்கும் நடவடிக்கைக் காகவா திருக்கோவில், தாண்டியடி, சங்கமன்கண்டி மலை முருகன் ஆலய நிர்மாணப் பணிகள் நடைபெற்று முடிவுறும் நேரத்தில் நிர்மாணப் பணிகளை தொல்பொருள் திணைக்களம் இடைநிறுத்தியுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக இந்து கலாசார திணைக்களம், அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.



புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்து முடிவுறும் வேளை தொடர்ந்து வேலைகள் செய்யக் கூடாது என்று தொல்பொருள் திணைக்களத்தினர் உத்தரவு இட்டனர்.

பல நூற்றாண்டுகளாக கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்கள் தங்கித் தரிசித்துச் செல்லும் பழைமை வாய்ந்த இந்தக் கோயில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் இந்த ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்து முடிவுறும் வேளை தொடர்ந்து வேலைகள் செய்யக் கூடாது என்று தொல்பொருள் திணைக்களத்தினர் திடீரென வந்து உத்தரவு பிறப்பித்த செயல் கண்டிக்கத்தக்கது என்று ஆலய நிர்வாகத்தினர் கூறினர். (ச)

# முஸ்லிம் காங்கிரஸ் போன்று மக்களை ஏமாற்ற மாட்டேன்

### அமைச்சர் அதாவுல்லா கூறுகிறார்

மட்டக்களப்பு,ஒக்.3

முஸ்லிம் காங்கிரஸ் போல நாங்கள் அரசியலுக்காக பொய் சொல்லி மக்களை ஏமாற்றுவதில்லை என்று அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள பொத்துவில் பிரதேச சபைக்கான மூன்று மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றை நிறைவேற்றாது மாயமாய் மறைந்துவிடுவார்கள். ஆனால், தேசிய காங்கிரஸ் அவ்வாறு ஒரு போதும் செல்லாது. மக்கள் நலன் காப்பகமாக எமது கட்சி தொழிற்படுகிறது.

பொத்துவில் பிரதேச மக்கள் தம் எதிர்காலம் குறித்து சிந்தித்துச் செயற்பட வேண்டும். நீங்கள் அரசியலில் அநாதையாக்கப்படக் கூடாது என்பதற்காகவே செயற்பட்டு வருகின்றேன். ஆனால் நீங்கள் ஏமாற்றுப் பேர் வழிகளின் பின்னால் செல்கின்றீர்கள். மாகாண சபை உறுப்பினரையும் இழந்திருக்கின்றீர்கள். பிறர் உங்களது மண்ணை தீர்த்தக்கரையாக பாவித்திருக்கின்றனர்.

பொத்துவில் மக்கள் இழப்பதற்கு ஒன்றுமில்லை. இனிமேல் வரலாற்றில் நடந்த பிழைகளைச் செய்ய வேண்டாம். தேர்தல் காலங்களில் பொய் வாக்குறுதிகளை வழங்குபவர்களுக்கு உங்களது வாக்குகளை அள்ளிப் போடுகின்றீர்கள். அவ்வாறானவர்கள் உங்களுக்கு என்ன செய்துள்ளார்கள்?.

நீங்கள் எனக்கு வாக்களிக்காவிட்டாலும் உங்கள் பிரதேசத்துக்கு நானும் மாகாண அமைச்சர் உதுமாலெவ்வையும் பல்வேறு வேலைத்திட்டங்களை செய்துள்ளோம்.

ஆகவே, வாக்களிப்பதற்கு வேறு கட்சியும் அபிவிருத்தித் திட்டங்களைச் செய்வதற்கு அதாவுல்லாவும் என்ற நிலைப்பாட்டை நிறுத்திவிட்டு இனியாவது வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற வெற்றியாளர்களின் பின்னால் நின்று செயற்படுங்கள். - என்றார். (ச)

## பப்பாசிப் பழங்கள் அறுவடை

மட்டக்களப்பு,ஒக்.3

'திவிநெகும' திட்டத்தின் கீழ் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பப்பாசி மரக்கன்றுகளை உற்பத்தி செய்து குறித்த பப்பாசி மரங்களில் இருந்து பழங்களை அறுவடை செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காத்தான்குடி, முதலாம் குறிச்சியில் நடைபெற்றது.

'திவிநெகும' திட்டத்தின் கீழ் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் பயிர்ச் செய்கையை பிரதேச செயலாளர் உட்பட அதிகாரிகள் பார்வையிட்டனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் ஏற்கனவே சமுர்த்தி பயனாளிகளுக்கு மாமரம், பப்பாசி உட்பட பழ மரக்கன்றுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மழையைக் கண்டதும் விவசாயிகள் நிம்மதி

### பெரும்போகப் பணிகள் ஆரம்பம்

திருகோணமலை, ஒக்.3

திருகோணமலை மாவட்டத்தில் பரவலான மழை பெய்து வருகின்றது. கடும் வறட்சி காரணமாக ஏற்பட்ட குடிதண்ணீர் பிரச்சினை நீங்கியுள்ளது. விளைநிலங்களுக்கான நீர் வற்றியிருந்தபோதும் இந்த பருவ மழை தீர்க்கும் என்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

அடிக்கடி பிற்பகல் வேளையில் இடி, மின்னலுடன் ஆரம்பமாகும் இந்த மழை சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரையில் தொடர்ந்து பெய்கின்றது. இதனால் பெரும்போக நெற் செய்கைக்கான ஆரம்பப் பணிகள் மும்முரமாக திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

இந்த மாவட்டத்தில் இம்முறை அதிகளவிலான விவசாயிகள் நெற்செய்கையில் ஆர்வங்காட்டி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-40)

# அக்கரைப்பற்றுக்கு கிடைத்தது மாகாணசபை பிரதிநிதித்துவம்

### நன்றி தெரிவிக்கின்றார் தவம்

அக்கரைப்பற்று,ஒக்.3

22 வருடங்களுக்குப் பின்னர் அக்கரைப்பற்று மண்ணுக்கு மாகாணசபைப் பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது. அதிகளவான வாக்குகளை எனக்கு வழங்கி உங்கள் தீர்ப்பை உலகறியச் செய்தீர்கள். அதற்காக ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று அக்கரைப்பற்று பிரதேசத்திலிருந்து கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ள மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவம் கூறினார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்குமுகமாக அவரது அக்கரைப்பற்று இல்லத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலட்சியத் தெளிவோடு நமது பயணத்தை நாம் தொடர்ந்துகொண்டிருந்தோம். மக்கள் அபிப்பிராயத்தை ஜனநாயக வழியில் வெல்வதை விடுத்து அச்சுறுத்தி அடைந்துகொள்ள முடியாது என்பதை அக்கரைப்பற்று மக்கள் மிகத் துல்லியமாக வெளிப்படுத்துவீர்கள் என உறுதியாக நம்பிக்கை கொண்டிருந்தேன். அதேபோன்று நம்பிக்கை வீணாகிப் போகாமல் ஏழாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளை எமக்களித்து உங்கள் தீர்ப்பை உலகறியச் செய்துள்ளீர்கள்.

நீங்கள் எமக்களித்த வாக்குகள் அக்கரைப்பற்றில் ஓர் அதிகாரச் சமநிலையை கொண்டு வர உதவி இருக்கின்றன.

தேர்தல் காலத்தில் மட்டும் மக்களைத் தேடி காலடிக்குச் சென்று வென்ற பின்னர் மக்கள் தேடி அலைந்து சந்திக்கவும் முடியாமல் தவிக்கும் அரசியலை மாற்றியமைக்கும் மக்களாணையை நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள். இதற்காக எந்நேரமும் திறந்திருக்கும் கதவுகளோடு உங்கள் பணிக்காக காத்திருக்கின்றேன் - என்றார். (ச)



சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மலையகத்தில் இடம்பெற்ற ஊர்வலத்தில் புளியாவத்தை தமிழ் வித்தியாலய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் மனதில் நேர்மையும், கருணைக் குணமும் அதிகரிக்கும். நண்பர், உறவினரின் அத்தியாவசியத் தேவைக்கு இயன்றளவில் பணம் கொடுத்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பணப் பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு. உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**இடபம்:** உங்கள் செயற்பாடுகளில் தடுமாற்றம் ஏற்படலாம். சிறிய பணிகூட கடினமாகத் தோன்றும். தொழில், வியாபார நடைமுறை வளர்ச்சி பெற உங்கள் மீது அக்கறை உள்ளவர்களின் உதவி கேட்டுப் பெறுவீர்கள். முக்கிய செலவுகளுக்குப் பயன்படுகிற வகையில் பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** நீங்கள் நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். நண்பர், உறவினர்களின் திறமை நிறைந்த செயல்களை மனமுவந்து பாராட்டுவீர்கள். குடும்பத்தின் தேவைகளை பெருமளவில் நிறைவேற்றுவீர்கள். மனதில் மகிழ்ச்சியும், நிம்மதியும் நிறைந்திருக்கும்.

**கடகம்:** எவரையும் மதிப்புடன் நடத்துகிற பண்பாட்டுடன் செயற்படுவீர்கள். பேச்சில் அன்பும், பரிவும் கலந்திருக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற எதிர்பார்த்த அனுகூலம் கிடைக்கும். உறவினர் புதிய சொந்தங்களை அறிமுகப்படுத்துவர். உத்தியோகத்தர்களுக்கு பாரா' டு, வெகுமதி கிடைக்கும்.

**சிங்கம்:** உங்களிடம் நன்கு பழகியவர்கூட சந்தேக மனதுடன் பேசுவர். குடும்ப சிரமங்களை நம்பகத்தன்மை இல்லாதவரிடம் சொல்வதால் மன அழுத்தம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் தகுந்த கவனம் கொள்வதால் பணிச்சுமை மெல்ல மெல்லக் குறையும்.

**கன்னி:** உங்களின் செயற்பாடுகளில் குழப்பம் வரலாம். உறவினர், நண்பர்களின் எதிர்பார்ப்பு உங்கள் மனதை கவலைப்படச் செய்யும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற அனுகூல சூழ்நிலையைப் பயன்படுத்துவதால் சில நன்மை பெறலாம்.

**நாளை**

புரட்டாதி- 18 வியாழக்கிழமை 04.10.2012
திதி: சதுர்த்தி பி.ப 03.27 வரை
நட்சத்திரம்: கார்த்திகை பி.இ 01.12 வரை
சுபநேரம்: 07.32-09.02 வரை
ராகுகாலம்: 01.32-03.02 வரை

**துலாம்:** உங்கள் எண்ணத்தில் புதிய மாற்றம் ஏற்படும். தன்னைச் சார்ந்தவர்களுக்கு இயன்றளவில் உதவி புரிந்து மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூல காரணி பலம் பெறும். தாராள அளவில் பணவருமானம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** நீங்கள் முன்னர் செய்த உதவிகர செயல்களுக்கு உரிய நற்பலன் தேடி வரும். மனதில் புதிய நம்பிக்கையுடன் அன்றாடப் பணியை மேற்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணப் பரிவர்த்தனையில் அபிவிருத்தி உண்டு.

**தனுசு:** நீங்கள் பிறரிடம் அதிக எதிர்பார்ப்புடன் செயற்படுவீர்கள். பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் சிறிய அளவிலான குளறுபடி ஏற்படலாம். பணவரவு தாமதமாவதால் மனதில் கவலை ஏற்படும்.

**மகரம்:** உங்கள் மனதில் இனம் புரியாத சில குழப்பம் வந்து விலகும். உங்கள் நலனில் அக்கறை உள்ளவரின் ஆலோசனை பெற்றுச் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய யுக்தியைப் பயன்படுத்துவது அவசியம். எதிர்பார்த்ததை விட குறைந்தளவில் பணவரவு இருக்கும்.

**கும்பம்:** உங்கள் செயல்கள் சிறந்து, பலர் மனதில் உங்களைப் பற்றி நல்ல எண்ணங்களை உருவாக்கும். சிறியளவிலான உதவியும் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியில் கூடுதல் அக்கறை கொள்வீர்கள். சராசரி பண வரவுடன் உபரி பண வருமானமும் கிடைக்கும்.

**மீனம்:** சிலரது குறுக்கீடுகளால் உங்களது அன்றாடப் பணியில் தாமதம் ஏற்படலாம். சமயோசிதமாகச் செயற்படுவது அவசியமாகும். தொழில் இலக்கு பூர்த்தியாக அதிக கால அவகாசம் தேவைப்படும். கிடைக்கிற பணவரவுகள் செலவுகளை சிக்கனப்படுத்துவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 8 | | | | 3 | 4 |
| 6 | | | 5 | | | 8 | 2 | 9 |
| | | | | | 1 | | | 6 |
| | | 5 | | | 7 | | 8 | |
| 7 | 2 | 8 | | | | 6 | 4 | 3 |
| | 3 | | 2 | | | 7 | | |
| 8 | | | 6 | | | | | |
| 5 | 7 | 6 | | | 4 | | | 2 |
| 1 | 4 | | | | 5 | 9 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 7 | 9 | 6 | 1 | 3 | 5 | 8 |
| 1 | 9 | 8 | 5 | 3 | 7 | 6 | 4 | 2 |
| 6 | 3 | 5 | 2 | 8 | 4 | 1 | 7 | 9 |
| 9 | 6 | 3 | 4 | 1 | 8 | 2 | 5 | 7 |
| 2 | 7 | 4 | 6 | 9 | 5 | 8 | 3 | 1 |
| 8 | 5 | 1 | 7 | 2 | 3 | 4 | 9 | 6 |
| 7 | 4 | 2 | 8 | 5 | 6 | 9 | 1 | 3 |
| 3 | 8 | 6 | 1 | 7 | 9 | 5 | 2 | 4 |
| 5 | 1 | 9 | 3 | 4 | 2 | 7 | 6 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



(சி/3758)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூதனசாலை திருட்டில் மூவருக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஒக்.3

தேசிய நூதனசாலை திருட்டுத் தொடர்பில் கைது செய்யப்பட்ட மேலும் மூன்று சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட குறித்த மூவரும் நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

குறித்த சந்தேகநபர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நூதனசாலைத் திருட்டுத் தொடர்பில் பிரதான சந்தேகநபரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (ச)

# ஹெரோயினுடன் பெண் கைது

கொழும்பு,ஒக்.3

மொரட்டுவ ஒபேசேகரபுர - அருணோதய மாவத்தையில் பெண் ஒருவர் ஹெரோயின் மற்றும் பெருந்தொகை பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவரிடம் இருந்து 81 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயினும் 1,88,000 ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளன. இதனையடுத்தே இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)



வெளிநாடுகளிலுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு மஹிந்தாபிமானி புலமைப் பரிசிலை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கினார்.

# கொம்பனித்தெரு குடியிருப்புக் காணியை இந்தியாவுக்கு வழங்க இடைக்காலத் தடை

## உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,ஒக்.3

கொழும்பு - கொம்பனித்தெரு பிரதேசத்தில் வசிக்கும் மக்களை அங்கிருந்து வெளியேற்றி, அப்பகுதியில் உள்ள சுமார் 7 ஏக்கர் பரப்புள்ள காணியை இந்தியாவின் டாட்டா நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அரசு எடுத்துள்ள முடிவை தற்காலிகமாக இடைநிறுத்த உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொம்பனித்தெரு மக்கள் சிலர் தாக்கல் செய்திருந்த மனுவை பரிசீலித்த பின்னரே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. அரசினால் சுவீகரிக்கப்படவுள்ள இந்தக் காணிகளில் வசிக்கும் மக்களிடம் அதற்கான காணி உறுதிப்பத்திரங்கள் இருக்கின்றன என்று அவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வாதிட்ட சட்டத்தரணி சுஜீவ சேனசிங்க சுட்டிக்காட்டினார்.

குறித்த பகுதியில் அபிவிருத்தி செயற்றிட்டமொன்றை மேற்கொள்வதற்காக இலங்கை அரசு அந்தக் காணிகளை இந்தியாவின் டாட்டா நிறுவனத்திடம் வழங்கவுள்ளதாகக் கூறுகிறது. ஆனால், அந்த நடவடிக்கை மூலம் அப்பகுதியில் வசிக்கும் சுமார் 600 இற்கும் அதிகமான குடியிருப்புகள் இடிக்கப்படும் என்றும், அதனால் 1000 இற்கும் அதிகமான குடும்பங்கள் நிர்க்கதியாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனவும் சட்டத்தரணி சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

எனினும், குறித்த பகுதியில் வீடுகளை இழக்கும் மக்களுக்கு மாற்றுக் குடியிருப்புகள் வழங்கப்படும் என்று நகர அபிவிருத்தி அதிகாரசபை நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

ஆனால், அரசு குறித்த மக்களுக்கு வீடுகளை வழங்குவதற்கான உறுதியான வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளும்வரை அங்குள்ள காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கையை நிறுத்திவைக்குமாறு உயர்நீதிமன்றம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உத்தரவிட்டது என்று சட்டத்தரணி சேனசிங்க தெரிவித்தார். இந்த வழக்கின் அடுத்தகட்ட வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச)

# பல்கலைக்கழக ஆசிரியர்களின் 5 கோரிக்கைகளுக்கு அரசு இணக்கம்

## அமைச்சரவைக்கு சமர்ப்பித்த ஆவணத்தில் விவரிப்பு

கொழும்பு,ஒக்.3

பேராசிரியர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதான 6 கோரிக்கைகளில் 5 கோரிக்கைகளை அரசு நிறைவேற்றுவதற்கான இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளது. 6 ஆவது கோரிக்கையான சம்பள உயர்வு குறித்து இதுவரையில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை என்று உயர்கல்வி அமைச்சும் பொருளாதார அபிவிருத்தித் துறை அமைச்சும் கூட்டாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக்கு சமர்ப்பித்த இந்த ஆவணத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சர்வதேச தரத்துக்கு ஏற்ப நாட்டின் தேசிய வருமானத்தின் ஆகக் கூடுதலான சதவீதம் கல்வித்துறைக்கு ஒதுக்கப்படும். பல்வேறு கல்வித்துறைகளுக்கான தொழில் ரீதியான பயிற்சிகள் கொடுக்கப்படுவதுடன் இதற்கான ஆய்வுகளை நடத்துவதற்கும் இடமளிக்கப்படும். இதன் மூலம் தரமான கல்வியை நடைமுறைப்படுத்தி தேசிய சர்வதேச தரத்துக்கு ஏற்புடைய வகையில் கல்வியின் தரம் உயர்த்தப்படும்.

பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் விசேட தொழில் சார் உத்தியோகத்தர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். இதற்கு அங்கீகாரமளிப்பதற்காக விசேட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு தேவையான, உயர் தரமுடைய பேராசிரியர்களை நியமிப்பதற்கும் ஏற்கனவே உள்ள திறமைமிக்க பேராசிரியர்களைத் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்துவதற்கும், வெளிநாடு சென்றவர்களை மீண்டும் அழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான விசேட ஜனாதிபதி குழு ஒன்று நியமிக்கப்படும். இதன் மூலம் கல்வி அறிவில் ஆசியாவிலேயே இலங்கையை முன்கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

முதுமாணி, கலாநிதி பட்டங்களை வழங்குவதற்கு தனியானதொரு பல்கலைக்கழகம் அமைக்கப்படும்.

பல்கலைக்கழகங்களின் சுதந்திரத்தையும், இறைமையையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.


உயர்கல்வித்துறையை திருத்தி அமைக்கும்போது பல்கலைக்கழக பேராசிரியர்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படும். சகல உயர்கல்வி நிறுவனங்களும் சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படும்.

தேசிய அபிவிருத்திக்கு பல்கலைக்கழக பேராசிரியர்களின் அனுசரணையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவை ஆவணம் பல்கலைக்கழக பேராசிரியர் சம்மேளனத்துடன் கலந்துரையாடியே மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தமிழக எதிர்ப்புகளுக்கு அஞ்சி பயிற்சியைக் கைவிட முடியாது

## டிசெம்பரில் மற்றொரு பயிற்சி ஆரம்பம் என்கிறார் இராணுவத் தளபதி



கொழும்பு,ஒக்.3

தமிழ்நாட்டின் எதிர்ப்புகளுக்கு அஞ்சி, இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளைக் கைவிட முடியாது. எதிர்வரும் டிசெம்பர் மாதத்திலும் விசேட படையணியைச் சார்ந்த 45 உயரதிகாரிகள் பயிற்சிக்காக இந்தியா செல்லவுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தின் 63 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்நாட்டுப் போர் முடிவடைந்ததன் பின்னர் இராணுவத்தின் எண்ணிக்கை இரண்டு லட்சத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அப்பால் சென்று நாட்டின் மீள் கட்டுமான பணிகளுக்கும் இராணுவ ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளது. இதனை சிலர் விமர்சித்தும் வருகின்றனர்.

இராணுவத்துக்காக ஒதுக்கப்படுகின்ற நிதியில் ஒரு பில்லியனை நாட்டின் கட்டுமானப் பணிகளுக்காக இராணுவம் வழங்கியுள்ளது. எதிர்காலத்திலும் அவ்வாறே செய்யும். இராணுவம் எப்போதுமே முன்மாதிரியாகவே செயற்படுகின்றது.

நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்களை ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதிலும் ஆர்வமாகவே உள்ளோம். இதனடிப்படையில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனா உள்ளிட்ட பல நாடுகளின் இராணுவத்தினருடன் இணைந்து கூட்டுப் பயிற்சிகளை இலங்கையில் இராணுவம் அண்மையில் நடத்தியது. இவ்வாறான பயிற்சிகளை எதிர்காலத்திலும் வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

இந்தியாவில் சுமார் 800 இற்கும் அதிகமான இலங்கைப் படையினர் பயிற்சி பெற்று வருகின்றனர். அதே போன்று இந்தியப் படையினரும் இலங்கையில் பயிற்சிகளையும் பாதுகாப்பு கற்கை நெறிகளையும் பின்பற்றி வருகின்றனர்.

இரு நாடுகளுக்கும் இடையில் மிக நெருங்கிய புரிந்துணர்வு காணப்படுகின்றது. ஆனால் தமிழகம் இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளையே முன்னெடுக்கின்றது. இது குறித்து நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் இந்தியாவின் ஒரு பிராந்தியம் மட்டுமே தமிழகமாகும். இரு நாடுகளுக்கு இடையிலான இராணுவ ஒத்துழைப்புகளுக்கு தமிழக எதிர்ப்பு சவாலாக அமையாது. - என்றார். (ச)

# ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 2,380 பேர் இதுவரை கைது

## நேற்றும் காலியில் சிக்கினர் 23 பேர்



கொழும்பு,ஒக்.3

படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த 23 பேர் காலி - வெலிகம பிரதேசத்தில் கடற்படையினரால் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 23 பேரில் நான்கு பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். இவர்களில் 14 தமிழர்களும் 7 சிங்களவர்களும் இரண்டு முஸ்லிம்களும் உள்ளடங்குவர்.

கைது செய்யப்பட்டோர் வவுனியா, மட்டக்களப்பு மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை நேற்று வரை கைது செய்யப்பட்டவர்களுடன் இந்த வருடத்தில் 2380 இலங்கையர்கள் ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்தபோது கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று கடற்படையினர் குறிப்பிட்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MINISTRY OF HIGHER EDUCATION
**UNIVERSITY OF JAFFNA**
INVITATION FOR BIDS

**Construction of Building for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna - Block 'B'**

1. **The Chairman, Standing Cabinet Appointed Procurement Committee (SCAPC),** on behalf of the **University of Jaffna** now invites **sealed** bids from eligible and qualified bidders for **"Construction of Building for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna – Block B"** as described below and estimated to cost of **Rs.30.3 million.**

   The construction period is **301 days.**

2. Bidding will be conducted through National **Competitive** Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful **bidder shall** not have been blacklisted and shall be registered in the field of building **construction** for grade **C5** or above with the Institute for Construction Training and Development **(ICTAD)**,valid until the date of closing of the bids. **Further** the registration should be **valid at the** date of award.

4. Interested bidders may obtain further information from **Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna** and inspect the bidding documents at the same address **on** any working day from **9:00hrs to 16:00hrs.**

   Contact numbers are: Phone. Tel: 021 221 9201 **Fax:** 021 221 9201.

5. A complete set of Bidding Documents in English **language** may be purchased by interested bidders on the submission of a written application **to Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna** **from 01.10.2012 until 22.10.2012** from 9:00hrs to **15:00 hrs** on **working days** upon payment of a non refundable fee of Rupees Seven thousand **(Rs.7,000.00).**

6. Sealed Bids shall be delivered in duplicate **to reach the Director (Procurement), Ministry of Higher Education, No. 18, Ward Place, Colombo 07** **on or before 10.30 hrs on 31.10.2012.** Late bids will be rejected. Bids **will be opened** soon after the closing at the same address in the presence of the bidders' **representatives** who choose to attend.

7. Bids shall be Valid for a period of 91 Days **from the date** fixed for closing of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security **which** shall be;
   - in the form included in Section 09 **in the** Bidding document.
   - In favour of **Vice Chancellor-University of Jaffna.**
   - for an amount of **Rs. 600,000.00.**
   - Valid up to119 days from the **closing date** of Bid.
   - Issued by one of the agencies indicated **in the** clause 16.2 of the Bidding Data.

9. Pre bid meeting will be held at the Board Room, **University** of Jaffna, Thirunelvely, Jaffna at 11.00 am on 12.10.2012

**Chairman**
***Standing Cabinet Appointed Procurement Committee,***
***Ministry of Higher Education,***
***18, Ward Place, Colombo 07.***

(சி/3712)

MINISTRY OF HIGHER EDUCATION
**UNIVERSITY OF JAFFNA**
INVITATION FOR BIDS

**Construction of Building for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna - Block 'A'**

1. **The Chairman, Standing Cabinet Appointed Procurement Committee (SCAPC),** on behalf of the **University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for **"Construction of Building for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna x Block A"** as described below and estimated to cost of **Rs.146.o million.**

   The construction period is **546** days.

2. Bidding will be conducted through National **Competitive** Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful **bidder** shall not have been blacklisted and shall be registered in the field of building **construction** for grade C4 or above with the Institute for Construction Training and Development (ICTAD),valid until the date of closing of the bids. Further the registration **should be** valid at the date of award.

4. Interested bidders may obtain further information from **Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna** and inspect the bidding documents at the same **address on** any working day from **9:00hrs to 16:00hrs.**

   Contact numbers are: Phone. Tel: 021 221 9201 **Fax:** 021 221 9201.

5. A complete set of Bidding Documents in English **language** may be purchased by interested bidders on the submission of a written application **to Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna** **from 01.10.2012 until 22.10.2012** from 9:00hrs to **15:00 hrs** on **working days** upon payment of a non refundable fee of Rupees Ten thousand **(Rs.10,000.00).**

6. Sealed Bids shall be delivered in duplicate to reach the **Director** (Procurement), **Ministry of Higher Education, No. 18, Ward Place, Colombo 07** **on or before 10.00 hrs on 31.10.2012.** Late bids will be rejected. Bids will be **opened** soon after the closing at the same address in the presence of the bidders' representatives who choose to attend.

7. Bids shall be Valid for a period of 91 Days **from the date** fixed for closing of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security **which** shall be;
   - in the form included in Section 09 **in the** Bidding document.
   - In favour of **Vice Chancellor-University of Jaffna.**
   - for an amount of **Rs. 3.0 million.**
   - Valid up to119 days from the **closing date** of Bid.
   - Issued by one of the agencies indicated **in the** clause 16.2 of the Bidding Data.

9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely, Jaffna at 10.30 am on 12.10.2012

**Chairman**
***Standing Cabinet Appointed Procurement Committee,***
***Ministry of Higher Education,***
***18, Ward Place, Colombo 07.***

(சி/3713)

MINISTRY OF HIGHER EDUCATION
**UNIVERSITY OF JAFFNA**
INVITATION FOR BIDS

**Construction of Building for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna - Block 'D & E'**

1. **The Chairman, Standing Cabinet Appointed Procurement Committee (SCAPC),** on behalf of the **University of Jaffna** now invites sealed bids from **eligible** and qualified bidders for **"Construction of Building for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna – Block D & E"** as described **below** and estimated to cost of **Rs.82.1 million.**

   The construction period is **455 Days.**

2. Bidding will be conducted through National Competitive Bidding **Procedure.**

3. To be eligible for contract award, the successful bidder shall **not have been** blacklisted and shall be registered in the field of building construction for grade **C4 or above** with the Institute for Construction Training and Development (ICTAD),**valid until the** date of closing of the bids. Further the registration should be valid at the date of **award.**

4. Interested bidders may obtain further information from **Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna** and inspect the bidding documents at the same address on any **working day** from **9:00hrs to 16:00hrs.**

   Contact numbers are: Phone. Tel: 021 221 9201 Fax: 021 221 9201.

5. A complete set of Bidding Documents in English language may be **purchased** by interested bidders on the submission of a written application **to Deputy Registrar (Capital Works and Planning Unit) University of Jaffna, Thirunelvely, Jaffna** **from 01.10.2012 until 22.10.2012** from 9:00hrs to **15:00 hrs on working days** upon payment of a non refundable fee of Rupees Ten thousand **(Rs.10,000.00).**

6. Sealed Bids shall be delivered in duplicate to reach the **Director (Procurement), Ministry of Higher Education, No. 18, Ward Place, Colombo 07** **on or before 11.00 hrs on 31.10.2012.** Late bids will be rejected. Bids will be opened soon **after the** closing at the same address in the presence of the bidders' representatives who **choose to attend.**

7. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed **for closing** of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 in the Bidding **document.**
   - In favour of **Vice Chancellor-University of Jaffna.**
   - for an amount of **Rs. 1,532,000.00.**
   - Valid up to119 days from the closing date of Bid.
   - Issued by one of the agencies indicated in the clause **16.2 of** the Bidding Data.

9. Pre bid meeting will be held at the Board Room, University of **Jaffna, Thirunelvely,** Jaffna at 11.30 am on 12.10.2012

**Chairman**
***Standing Cabinet Appointed Procurement Committee,***
***Ministry of Higher Education,***
***18, Ward Place, Colombo 07.***

(சி/3714)

# மரண அறிவித்தல்



## அம்பலவாணர் பவானி அம்மா

காரைநகர், பலகாட்டை பிறப்பிடமாகவும் பசறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பலவாணர் பவானி அம்மா நேற்று (02.10.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அம்பலவாணரின் பாசமிகு மனைவியும், அருள்குமாரன், அருட் செல்வி, ஐங்கரன் ஆகியோரின் அன்புத் தாயும், கார்த்திகேஸ்வரன், சிவதர்சினி ஆகியோரின் அன்பு மாமியும், கார்த்திகா, கஸ்தூரி, முருகானந்தன், மோனிஷாண் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.10.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் பதுளை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No. 77, D.S.சேனநாயக்க மாவத்தை,
பசறை, பதுளை.

தகவல்:
**பிள்ளைகள்**

(23569)(45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும்பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# தமிழனின் சிந்தனையில் உத்வேகம் இறுதிக்கட்ட போருக்குப் பின்னர்

## விரைவில் புலிக்கொடி பறக்கும் என்கிறார் இயக்குநர் மணிவண்ணன்

ஈழத்தில் நடைபெற்ற இறுதிப் போருக்குப் பின்னர்தான் தமிழ் நாட்டில் தமிழனின் சிந்தனை மேலும் உத் வேகம்-பாய்ச்சல் பெற்றிருக்கிறது என்றார் திரைப்பட இயக்குநர் மணி வண்ணன். திருச்சி யில் உயிர் எழுத்து பதிப்பகம் சார்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற, ஈழப்போரை மையப்படுத்திய திருக்குமரனின் ''விழுங்கப்பட்ட விதைகள்' என்ற கவிதை நூல் விமர்சன அரங் கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''செங்கல்லும், சிமெந்தும் , மணலும் ஒன்று சேர்ந்து முழு வீடாக உருவாக்கப்படுவதைப் போல, வெவ்வேறு கருத்து களைக் கொண்டிருந்தாலும் தமிழர் களாக ஒன்றிணைவது நல்ல அம் சம். ஆயினும், தமிழைப் பேசிக் கொண்டே நம்மைப் பிளவு படுத்தும் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களைப் பொருட்படுத்த வேண்டிய தில்லை.

இலங்கையில் எல்லோரும் சேர்ந்து கூட்டு முயற்சியில் அயோக்கியத்தனத்தை அரங் கேற்றினர். ஈழத் தமிழ் மக்களின் நியாய மான போர் நசுக்கப்பட்டது. அதன் விளைவை விரைவில் இந்தியா சந்திக்கும். சீனா, பாகிஸ் தான், அமெரிக்கா ஆகிய நாடுகள் சேர்ந்து கொண்டு இந்தியாவை நெருக்கடிக்கு உள்ளாக்கும். சமா தானமாக சரணடைய வந்த நடேசனை நயவஞ்சகமாக சுட் டுக் கொன்றனர். இறுதிப் போரில் தன் குடும்பத்தையே இழந்தார் பிரபாகரன்.

ஏன் தமிழ் ஈழம் மலரக் கூடாது? ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கும் போது இந்த உலகில் எத்தனை நாடுகள் இருந்தன, அங்கே எத்தனை கொடிகள் பறந்தன.

தற்போது ஒலிம்பிக் போட் டிகள் நடக்கும்போது எத்தனை கொடிகள் பறக்கின்றன? பூமி



பெருத்துவிட்டதா? இல்லை, சுதந்திரமாக பல நாடுகள் பிரிந் துள்ளன.

பிரிவினைவாதிகள் என்று யாரும் ஒதுக்கப்பட்டார்களா? இல்லையே. அதுபோல, ஒலிம் பிக் போட் டிகள் நடக்கும் திடலில் விரைவில் புலிக்கொடியும் பறக் கும்; தமிழீழம் மலரும்' என்று அவர் மேலும் தெரிவித்தார். (3)

## ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

வடமராட்சி, ஒக்.2

அண்மையில் வெளியான ஐந்தாம்தர புல மைப்பரிசில் பரீட்சைப்பெறுபேறுகள் வரு மாறு:-

**மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை**

ரிதுர்சிகா ஜெயேந்திரன்-172, யோகரட்ணம் சஞ் ஜீபன்-170, சரவணநாதன் சர்ஜிகன்-168, யோண் டக்ளஸ் மார்சலின் டானியல்- 165, மோகனா பிரதீபன்- 158.

**கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலை**

கதிர்காமநாதன் சாமந்தி- 161.

**உடையார்கட்டு மகாவித்தியாலயம்**

நாராயணசாமி பாணுகா-165, நாகராஜ் திலக்சனா-160, சந்திரமோகன் றெஜீஸ் ஜான்-159, பொன்னுத்துரை விது சன்-148.

**வட்டு. மத்திய கல்லூரி**

தர்மினி நித்தியானந்தன்-170, கஜீபனா சிவநேசன்-149.

**யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

பிறின்சன் குணராஜ்- 177, சிவகுலசிங்கம் திருமேனன்-171, இரயவேல் குருசோ விஜயராஜ்-171, தவஞானரஞ்சன் கிரி ஷன்-160, ஏ.ஏ.டேவிட் பிரேம்சாந்-156, ஜெயக்குமார் புனிததாஸ்-154, சிவதாசன் கஜந்தன்-152, லக்ஸ்மன் டிலக்ஸ்மன்-151, பரமதயாளன் அருள்பிரியன்-148, சிவநாதன் தனுஜன்-148.

## நீர்வேலி கந்தசுவாமி கோயில் புனரமைப்பு

அச்சுவேலி,ஒக்.3

நீர்வேலி கந்தசுவாமி கோயில் முன் மண்டபம் அலங்கார வளைவுகளுடன் கூடியதாக சிமெந்தினால் நிர்மாணிக்கப் படவுள்ளது. பல மில்லியன் ரூபா செலவில் மேற்கொள் ளப்படவுள்ள இந்தக் கட்டு மானப்பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் இருந்து ஓட் டுக் கூரையுடன் காணப்பட்ட முன் மண்டபம் அகற்றப் பட்டு சிமெந்தினால் கட்டுமா ணப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. (3-11)

## முதியோர் தின நிகழ்வு

நவாலி கிழக்கு முதி யோர் சங்கத்தின் முதியோர் தினவிழா எதிர்வரும் 6ஆம் திகதி சனிக் கிழமை பி.ப.2.30 மணிக்கு முதியோர் சங்கத் தலைவர் பவுலின் தலைமையில் முரு கானந்தா சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செய லர் எஸ்.முரளிதரன் கலந்து கொள்வார். (3-100)

## திருவிழாவுக்காக சிரமதானம்

கொழும்புத்துறை, ஒக்.3

யாழ்.பிரதேச சமுர்த்தி அலுவலகத்தினால் சிரம தான முறையில் கொழும்புத்துறை புனித செப மாலை அன்னை ஆலய வளாகம் கடந்த வாரம் துப்புரவு செய் யப்பட்டுள் ளது.

ஆலயத் திருவிழாவை முன்னிட்டு இடம்பெற்ற சிரமதான வேலைத் திட்டத்தில் யாழ். பிரதேச சமுர்த்தி முகாமையாளர் பி.கியூமன் முகா மைத்துவப் பணிப் பாளர் கேதீஸ்வர சர்மா, சமுர்த்தி உத்தியோகத்தர் அகிலதாஸ், கிராம அலுவலர் கமலவேணி மற்றும் சமுர்த்திப் பயனாளிகள் கலந்து கொண் டனர். (3-135)

## கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், மற்றும் அரச சார்பற்ற நிறுவ னங்களுக்குமான மாதாந்த மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட " A " தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.
எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறொ யிலர் கோழி (இறைச்சிக் கோழி) மீள் கொள்வனவு செய்யப்படும். புறொயிலர் கோழிக்குஞ்சு ரூ80/= மட்டும்

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(23437) (6.7.8)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கொழும்புத்துறையில் 1½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

(23584)(6-7-2) தொடர்பு : 0773024445, 0773151175

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**MEDIA RESOURCE AND TRAINING CENTRE**

(Joint venture of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden)

Applications are invited from qualified persons for the under mentioned posts in the Media Resource and Training Centre, University of Jaffna upto 19th October 2012:

**Visiting Lecturer/Instructor** in Digital Photo Journalism/Rural Reporting/News Reporting/Cross Cultural Communication/Investigative Journalism/Advance Story Telling for Radio and T.V/Print Editing and Layout/Reporting and writing for Radio

**Rate of payment:**

| Posts | Rate |
|---|---|
| Visiting Lecturer | : Rs.300/- per hour |
| Visiting Instructor | : Rs.150/- per hour |

Application forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/ Academic Establishments**, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of **Rs.100/-** per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for more than one post should make separate application for each.

Applications for the above posts shall be sent to the **Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Incomplete, illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

Registrar
2012.10.01

## புலமைப் பரீட்சை தரம் - 5 - 2012



அதிபர்
திருமதி மோ.கிருஸ்ணபிள்ளை
வகுப்பாசிரியர்
திருமதி மஞ்சுளாதேவி கேதீஸ்வரன்
இடமிருந்து வலமாக மாணவர்கள்

| | |
|---|---|
| ஜெ.திவ்வியலோஜி | - 161 |
| ஞா. கவினா | - 160 |
| து.சரண்யா | - 158 |
| த.அஸ்வினா | - 168 |
| கு.ஜெனாளினி | - 153 |

Best Wishes

100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விவரம்:
ம.யதுர்சன் - 145, சி.தரணிகா - 145, த.அபிசன் - 134, பெ.கிசோகரன் - 131, சு.மேரி றெயினா - 129, வி.விதுஷா - 121, இ.கினோஜினி - 120, அ.அவேன்சியா - 111, த.விதுர்ஷா - 113, சி.சேனிஷா - 102, அ.டன்சன் - 112, இ.யொயிஷன் - 109, வி.விதுசிகா - 106, வி.மயூரிகா - 100

70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விவரம்:
வி.நிக்ஷன் - 98, செ.மிதுஷா - 97, ர.டிலக்சனா - 84, சி.சிந்துஜன் - 80, ச.சாம்சன் - 79

(23556)(2-6-7) - கிளி/ புனித பற்றிமா றோ.க.த.க.பாடசாலை சமூகம்.

## 57 ஆண்டு திருமண நிறைவில் வாழ்த்துகின்றோம்



பன்னெடுங் காலமெலாம் பார்போற்ற வாழ்த்துகின்றோம்

Best Wishes

திரு. திருமதி சவரிமுத்து டோமினிக் (அருள்)
லூசியம்மா (சீனியம்மா)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

18/8, [illegible] வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

(23555)(5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிபெற்றன அரியாலை வீதிகள்

ஒரு லட்சத்துப் பதினையாயிரம் ரூபா செலவில் அரியாலைப் பகுதி வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. நிண்ட காலமாக இருளில் மூழ்கிக் கிடந்த இந்தப் பகுதி வீதிகளினால் இரவில் பயணிப்போர் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர். வீதி மின் விளக்குகள் இல்லாமையால் அடிக்கடி வீதி விபத்துக்களும், திருடர்களின் கைவரிசையும் ஓங்கியிருந்த இந்த வீதிகள் தற்போது ஒளிபெற்றுள்ளன.

அரியாலைப் பகுதியில் உள்ள பொன்னம் பலம் வீதி, சின்னாலங்கண்டு வீதி, குகன் வீதி, ஆட்காட்டி வீதி, அருளம்பலம் விதி, அரியாலை சரஸ்வதி வீதி, முள்ளி வீதி, ஈச்சமோட்டை வீதி அதன் இரண்டாம் ஒழுங்கை, ஈச்சமோட்டை குளக்கரை வீதி, ஆனந்தம் வடக்கு வீதி என்பன வற்றுக்கு மொத்தம் 40 மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள் ளன. என மாநகர சபை உறுப்பினர் கே.என். விந்தன் தெரிவித்துள்ளார். மாநகர சபை உறுப்பினர்களுக்கான வருடாந்த நிதியிலி ருந்தே இந்த வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**ஜெயசீலன் புகழ்நேயன் (புகழ்)**
ஐந்தாம் தர புலமைப்பரீசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்ற ஜெயசீலன் பொறீன் தம்பதியரின் செல்வப் புதல்வன்

**புகழ்நேயன்**

அவர்களை மேன்மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகிறோம்.

— குடும்பத்தினர்.
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
(23571) (2-6-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



138 ஆவது அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட தேசியமட்ட அஞ்சல் தினப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற திருவாளர்

**அ.அருளானந்தசோதி**

(அஞ்சல் அதிபர், கரவெட்டி) அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல சாதனைகளைப் புரிய ஆண்டவரை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
மருமக்கள்.
A.S.இசானி, A.S.ஏஞ்சலின்,
A.S. அட்சயன், S.J.மிருதுளன்.
"மடத்துக்கடவை",
அல்வாய் வடமேற்கு.
(23568) (2-6-7)

## மனோதத்துவ வைத்தியம்
## (General Psychotheraphy)
### பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்

T.P: 0719315664, 0777569205

மீண்டும் யாழில்

03.10.2012 முதல் 09.10.2012 வரை 7 நாள்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக்கட்டணம் ரூபா300/=

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தை பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசுகரைதல், போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனபான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத்தவிர) எந்தவிதமான மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.அண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்துகொடுக்கபடுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழையகமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
(சி/3775) (6.7.8)

## வளமான எதிர்காலம் உனதாக மனமுவந்து பாராட்டுகின்றோம்
### உமாசந்திரன் ஜனனன்



தரம் 5 புலமைப் பரீட்சை 2012 இல் 169புள்ளிகளைப் பெற்று எமக்குப் பெருமை சேர்த்த யா/வல்வை சிவ குரு வித்தியாலய மாணவன் எங்கள் அன்புச் செல்வன் உமாசந்திரன் ஜனனன் அவர்கள் இறைவன் அருளால் கல்வியில் மேலும் பல பட்டங்களையும் பெற்று உயர் நிலைக்கு வரவேண்டுமென மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

மேலும் இவருக்கு கல்வி கற்பித்த பாடசாலை அதிபர்,ஆசிரியை, தனியார் கல்வி ஆசிரியர்களையும் பாராட்டுவதோடு எங்கள் மனங்கனிந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா(தமிழினி),தாத்தா-அம்மம்மா,
மாமாமார்-மாமிமார், [illegible]
மச்சான்மார்-தங்கைமார், [illegible]
ஆதிகோயிலடி,
வல்வெட்டித்துறை.
(23821) (5-6-7)

## கடை வாடகைக்கு

சாவகச்சேரி நகரில் 11' X 30' அளவுடைய இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 5615996
(21638)(6-7-8)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af

The Only Official French Language Centre in Jaffna
*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப் பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்கு செல் வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ள லாம்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri - Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliance jaffna@yahoo. com
(ரக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி கட்டடம்)
(23567) (45-6-7)

## சர்வதேச சான்றிதழ்களுக்கான தொழில்சார் பயிற்சி

DVP — Diploma in Digital Video Production — Duration 3 Months
DiWP — Diploma in Web Programming — Duration 3 Months
AdCHN — Adv. Diploma in Computer Hardware & Networking — Duration 3 Months
TFAP — Tally Financial Accounting Programme — Duration 3 Months

புதிய பிரிவுகள் 5-10-2012, 7-10-2012 மற்றும் 9-10-2012 காலை 9.30 ஆரம்பம்.

**CSC ASIAN COMPUTERS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 021-2225677 |
| நல்லூர் | 021-2229191 |
| நெல்லியடி | 021-2262399 |
| சாவகச்சேரி | 021-2270267 |
| கிளிநொச்சி | 021-2283925 |

(சி/3774)

## மணமகன் தேவை

1971 ஆம் ஆண்டு பிறந்த மக நட்சத்திரம் பாவக்கிரகம் 37இல் அமைந்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: 021 4914941
(26620)(6.7.8)

## காணி விற்பனைக்குண்டு

புத்தூர் நவக்கிரியில் பிள்ளையார் கோயில் அருகில் நிலப்பரப்பு 20 கொண்ட காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 9119428, 077 4201570
(23586)(6-7-8)

## சாதனையாளர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்



2012 தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த மழலைச் செல்வன்

**மரிய அன்ரனி மரிய யூட் நிக்ஸன்**
**(161 புள்ளிகள்)**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான

த. இராஜமோகன் – 137
க. வினிஷ்ரா – 125
கி. மேரிசெசில்டா – 119, அ. ஸ்ரெலின் ஜெனிஷாந் – 107
அ. அன்ரனி சுதர்சன் – 106

ஆகியோரையும் வழிப்படுத்திய அதிபர் திருமதி த. பாலசுப்பிரமணியம் மற்றும் தரம் - 1 - 5 வரை கற்பித்த வகுப்பாசிரியை திருமதி பு. நகுலேஸ்வரன் கற்பித்த ஆசிரியர்களான திருமதி உ. சாள்ஸ் றொபேட். திரு. இ. ஜெயகணேசன், திருமதி பி. பிரதீபன் மற்றும் வழிப்படுத்திய ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

பாடசாலைச்சமூகம்,
யா/சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை.
(சி/3685)(6.7.8)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
13.06.1950

மறைவு
26.09.2010



அமரர்
**கந்தன் கதிரவேலு**

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து -எமை
அவனியிலே வாழ்வாங்கு வாழ வைத்த தந்தையே!
இரண்டாமாண்டு நினைவுத் திதியிலே உம்மை
நினைத்து வணங்குகின்றோம் அப்பா!

கைதடி மேற்கு,
கைதடி.
குடும்பத்தினர்.
(23450)(5-6-7)

வாழ்க வளமுடன்

## 11 ஆம் ஆண்டு நினைவுதினம்

03.10.2012

மலர்வு
01.03.1939



உதிர்வு
03.10.2001

**அமரர் தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்கள்**

(சிவயோக சுவாமிகளின் அடியவரும், வட இலங்கை சர்வோதய ஸ்தாபகரும் ஜீவதானியும்)

என் கடன் பணி செய்து கிடப்பதே

"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும்
மக்கள் இனமீன்ற தமிழ்நாடு தனக்கும்
என்னால் தினையளவு பயனேதும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்"


இன்று (03.10.2012) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வட இலங்கை சர்வோதய சேவை வளாக புஸ்பா மணிமண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

வட இலங்கை சர்வோதயம்,
புங்குடுதீவு.
வட இலங்கை சர்வோதய
குடும்பத்தினர்.
(23512) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.நகரில் நேற்று காந்தி பிறந்தநாள் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஒக்.3

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் 144 ஆவது காந்தி ஜெயந்தி தின நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யாழ்.ஆஸ்திரி வீதியில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலையடியில் யாழ். மாவட்ட காந்தி சேவா சங்கத்தின் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவரும், கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபருமான ரி.இராசநாயகம், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் முன்னாள் தலைவர் சோ.தம்பிப்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் எஸ்.சிவகரன், யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் ராகுலாதேவி வல்லிபுரநாதன் மற்றும் தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள், அகில இலங்கை காந்தி சேவா சங்க அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை-

பருத்தித்துறை பஸ் நிலைய நுழைவாயிலில் இருக்கும் மகாத்மா காந்தியின் சிலைக்கு மலர்மாலை அணிவித்தும் மலரஞ்சலி செலுத்தியும் நினைவுகூரப்பட்டது.

வடமராட்சி காந்தி சேவா சங்கத்தின் உபதலைவர் சிவஸ்ரீ தியாகசிரோன்மணி சுந்தராஜக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன், உபதலைவர் சி.பத்மநாதன், மங்கள் வங்கி பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் கொன்றை பி.கிருஷ்ணானந்தன் ஆகியோர் மகாத்மா காந்தியின் சிலைக்கு மலர்மாலை அணிவித்தனர்.

(த-17-23-8)

# சைக்கிளுக்கு இலக்கத்தகடு பெறாதோர் மீது நடவடிக்கை

தென்மராட்சி, ஒக்.3

சைக்கிள்களுக்கு இந்த ஆண்டுக்கான இலக்கத்தகடு பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பயன்படுத்தப்படும் சைக்கிள்கள் பொலிஸாரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இது குறித்த அறிவிப்பைப் பொலிஸார் விடுத்துள்ளனர்.

சைக்கிளைப் பயன்படுத்தும் பொதுமக்கள் நலன் கருதி சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் நகராட்சி மன்றத்தால் தினமும் காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இலக்கத்தகடுகள் விநியோகிப்பதற்கான விசேட கருமபீடம் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் செயற்படுவதாகவும், பொதுமக்கள் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகளைப் பெற்று அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது.

(த-9)

## நல்லூர் பிரதேச எல்லைக்குள் பொதுக் கிணறுகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பொதுக்கிணறுகள் புனரமைக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அரியாலைப் பகுதியில் பொதுக் கிணறுகள் யுனிசெப் நிறுவனத்தினரின் நிதிஉதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கோண்டாவில் நந்தாவில் குளத்துக்கு அருகாமையில் உள்ள பொதுக் கிணறு, பொற்பதி காளி கோயிலுக்கு அருகில் உள்ள பொதுக் கிணறு, கோண்டாவில் வடக்கு செபஸ்ரியார் வீதியில் அமைந்துள்ள பொதுக் கிணறு ஆகிய மூன்று தினங்களும் நல்லூர் பிரதேச சபையின் நிதியிலிருந்து புனரமைக்கப்பட்டு வருகின்றன.

பொது மக்களின் குடிதண்ணீர் தேவைக்கும் கால்நடைகளின் தாகத்தைத் தீர்ப்பதற்கும் இந்தப் பொதுக் கிணறுகள் பெரும் உதவியாக அமையும். மேலும் அரியாலை கிழக்கு கடற்கரை வீதிப் புனரமைப்புக்காக சபை நிதியிலிருந்து 16 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்தது. இதனால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர். தற்போது மக்களின் நன்மை கருதி இந்த வீதி புனரமைக்கப்படவுள்ளது என்றார்.

(த-13)

## வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 வகுப்பு மாணவர்களுக்கான கணித மதிப்பீடு- இல.8 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கணித மாதிரி வினாத்தாள் வழிகாட்டல் கருத்தரங்கும் செயற்பாடும் இல.14 ஆகியவை எதிர்வரும் எட்டாம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

வினாத்தாள்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-9)

## மிருசுவிலில் புதிதாக கூட்டுறவுக் கிளை

வரணி, ஒக்.3

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில், ஐ.நா. அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தினரால் கூட்டுறவுக் கிளைக்கான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் கொடிகாமம் தென்மராட்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் விரைவில் கையளிக்கப்படவுள்ளது.

24 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

கட்டடம் அமைப்பதற்கான 2 பரப்பு காணியை தென்மராட்சி பிரதேச செயலகம் இலவசமாக வழங்கியது.(த-122)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் தோல் சிகிச்சைப் பிரிவு அவசியம்

தென்மராட்சி, ஒக்.9

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் நலன் கருதி தோல் சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்குமாறு உரிய அதிகாரிகளை நோயாளர்கள் கோரியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, வவுனியா பொது வைத்திய சாலை ஆகியவற்றில் மட்டுமே தோல் சிகிச்சைப் பிரிவுகள் இயங்குவதால் இவற்றில் பெரும் எண்ணிக்கையியான நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, பூநகரி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் தோல் நோயால் பாதிக்கப்படும் பெருமளவானோர் ஏ-9 வீதியூடன் இணைந்துள்ள சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நாள்தோறும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனால் இந்த நோயாளர்களின் நலன்கருதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தோல் சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்க மாகாண சுகாதாரத் திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியுள்ளனர். (த-9)

# 14 விவசாய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க 22 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், ஒக்.3

வடக்கு மாகாணத்துக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையில் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்துக்கு 14 வேலைத் திட்டங்களை முன்னெடுக்க 22.608 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண விவசாய, காணி, கால் நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன கடற்றொழில் அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம்.ஹால்டின் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான எமது அமைச்சின் ஊடாக 14 வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

உவர் நிலங்களை தங்கி வளரும் பயிர் இனங்களை அறிமுகம் செய்யவதற்கு 3.5 மில்லியன் ரூபாவும், பல்லாண்டுப் பயிர்கள், மரக்கறி நாற்றுக்களை உற்பத்தி செய்யும் தனியார் நாற்று மேடையாளர்களை பலப்படுத்துவதற்கு 70 மில்லியன் ரூபாவும் பிரதேசத்துக்கு தனித்துவமான மறு வயற் பயிற் செய்கையை விரிவுபடுத்துவற்கு 1.59 மில்லியன் ரூபாவும் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் மலைநாட்டு மரக்கறிச் செய்கையை ஊக்குவிப்பதற்கு 8.44 மில்லியன் ரூபாவும் ஒட்டுப் பலாக்கன்று நடுகையை ஊக்குவிப்பதற்கு 1.98 ரூபாவும் வருடாந்தம் முழுவதும் உற்பத்தியை பெறுவதற்கான மா மரச் செய்கையில் புதிய இன மரத்தினை அறிமுகம் செய்வதற்கு 1.85 மில்லியனும் புதிய இன பப்பாசிச் செய்கையை விரிவு படுத்துவதற்கு 1.77 மில்லியன் ரூபாவும் மாமரங்களைக் கத்தரித்தல் மற்றும் பயிற்சியளித்தலுக்கு 2.38 மில்லியன் ரூபாவும் களஞ்சியக் குடில் அமைப்பதன் மூலம் சின்ன வெங்காயத்துக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவற்கு 3.03 மில்லியன் ரூபாவும் பழங்கள் சேகரிப்பு விற்பனைத் தொகுதி அமைப்பதற்கு 10 மில்லியன் ரூபாவும் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையங்களுக்கு சுற்றுப்புற வேலி அமைப்பதற்கு 5 மில்லியன் ரூபாவும், மண் வளத்தைப் பரிசோதித்தலுக்கும் அடையாளப்படுத்தலுக்கும் 1.12 மில்லியன் ரூபாவும், தீவுப் பகுதிகளில் வீட்டு மட்டத்திலான விவசாய வனச் செய்கையை ஊக்குவிப்பதற்காக 4.76 மில்லியன் ரூபாவும் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிப்பதற்காக [illegible] காக 1.2 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(த-13)

## முதியோர் தின விழிப்புணர்வு பேரணி

கைதடி, ஒக்.3

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணி ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி கைதடியில் நடைபெறவுள்ளது.

கைதடி அரச முதியோர் இல்லத்தின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வுப் பேரணி இடம்பெறவுள்ளது.

பெற்றோர்களைப் பிள்ளைகள் எவ்வாறு பராமரிப்பது என்பது பற்றிய விழிப்புணர்வைச் சமூகத்தில் ஏற்படுத்துவதற்காக இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக முதியோர் இல்ல அத்தியட்சகர் தெரிவித்தார்.

இந்த விழிப்புணர்வுப் பேரணியின் போது வாகனங்களில் ஒட்டுவதற்கான முதியோர் தின விழிப்புணர்வு [illegible] விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-17)

## வரணியில் இரு ஆலயங்களில் திருடர்கள் கைவரிசை

வரணி, ஒக.3

வரணிப் பிரதேசத்தில். கடந்த புதன்கிழமை இரவு இரண்டு இந்து ஆலயங்கள் திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளன.

கரம்பைக்குறிச்சி பாலை அத்தாய்முத்து விநாயகர் ஆலயம், மற்றும் வரணி இயற்றாலை காட்டுக் கந்தசாமி ஆலயம் இரண்டிலும் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

மூத்த விநாயகர் ஆலயத்தில் சிவலிங்க திருவுருவம் மற்றும் ஒரு தொகைப்பணமும், காட்டுக் கந்தசுவாமி ஆலயத்தில் மூலத்திருவுருவமும் பெயர்க்கப்பட்டு தங்கத் தகட்டுயந்திரமும் களவாடப்பட்டுள்ளன.

வரணி இயற்றாலை காட்டுக் கந்தசுவாமி ஆலய கும்பாபிஷேகம் இடம்பெற்று. ஓரிரு மாதங்களே ஆன நிலையில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.


அன்றைய தினம் கடும் மழை பெய்ததினை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இரு கோயில்களும் அடுத்தடுத்துள்ள கிராமங்களில் அமைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

(த-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைக்கு மரியாதை



யாழ்ப்பாணம்,ஒக்.3

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியில் நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு பாடசாலை அணியினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு நேற்று செவ்வாய்க் கிழமை கல்லூரிச் சமூகத்தினரால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்கள் பஸ்ரியன் சந்தியில் இருந்து கல்லூரி நுழைவாயில் வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். கல்லூரி நுழைவாயிலில் வைத்து சாதனை வீரர்களுக்கு ஆசிரியர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர். அதன் பின் கல்லூரி அதிபர் என்.ஜே. ஞானப்பொன்ராஜா தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.இந்த நிகழ்வில் அருட்தந்தைதனேந்திரன், கல்லூரியின் முன்னாள் உப அதிபர் அன்ரனிப்பிள்ளை ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் கல்லூரி பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ஙு-23)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப.3.30 மணி

கலைமதி விளையாட்டுக் கழகம் எதிர் சென்.சேவியர் விளையாட்டுக் கழகம்

பி.ப4.30

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வதிரி குருநகர்பாடுமீன் விளையாட்டுக் கழகம்.

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப.3 மணி

பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகம் எதிர் நவசக்தி விளையாட்டுக் கழகம்

பி.ப4.30

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம். (ஙு-23)

## தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டி 9 ஆம் திகதி அம்பாந்தோட்டையில்

யாழ்ப்பாணம்,ஒக்.3

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை வெலியத்த சர்வதேச மஹிந்தராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்காக எதிர்வரும் 7 ஆம் திகதி வடமாகாணத்தில் இருந்து 300 இற்கு மேற்பட்ட வீர வீராங்கனைகள் அம்பாந்தோட்டைக்குச் செல்லவுள்ளனர். (ஙு-23)

## பொம்மர்ஸ்,யங்ஹென்றிஸ் வீழ்த்தின எதிரணிகளை

யாழ்ப்பாணம்,ஒக்.3

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம், இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது. இதில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் மோதிக்கொண்டது.

இதில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 7:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக கலைமதி அணியை வீழ்த்தி வெற்றியீட்டியது. (ஙு-23)

## ஆதிசக்தி வெற்றிக்கிண்ண ஆட்டங்களின் முடிவுகள் சில

யாழ்ப்பாணம்,ஒக.3

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம், அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுடர் ஒளி விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

இதில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ஙு-23)

## கிளிநொச்சியில் மாவட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.3

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக முதற்கட்ட போட்டிகள் பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தப்பட்டன.

இதன் இரண்டாம் கட்டமாக கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலங்கங்களுக்கு இடையிலான 21 வயதுப் பிரிவு அணிகளுக்கான மாவட்ட மட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதன் போது பிரதேச ரீதியாக வெவ்வேறு கழகங்களைச் சேர்ந்த வீரர்கள் திறமையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு, தத்தம் பிரதேச செயலகம் சார்ந்த ஓர் அணியாக களமிறங்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஙு-23)

## சம்பியனானது மகாத்மா அணி

யாழ்ப்பாணம்,ஒக்.3

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக முதற்கட்ட போட்டிகளை யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தி வருகின்றன.

இந்த வகையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் மகாத்மா அணியை வீழ்த்திச் சம்பியனாகியது. (ஙு-23)

## நன்னியன் ஞாபகார்த்த கரப்பந்து பரபரப்பான இறுதி இன்று

### அச்சுவேலி விக்னேஸ்வரா - உடுப்பிட்டி நவஜீவன் மோதல்

புத்தூர், ஒக்.3

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் நன்னியன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று புதன்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இன்று மாலை 6.30 மணியளவில் மின்ஒளியில் நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.



இரு அணிகளும் சுற்றுப்போட்டிகளில் வெளிப்படுத்திய ஆட்டத்திறனை இறுதிப் போட்டியிலும் வெளிப்படுத்தவுள்ளதால் எந்த அணி கிண்ணத்தை வெல்லும் என்பதைக் கணிக்கமுடியாதுள்ளது

இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன்,கௌரவ விருந்தினராக அச்சுவேலி இலங்கை வங்கியின் முகாமையாளர் ரி.புவனேந்திரன்,சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்க தலைவர் கி.மனோகரன், கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ஆர்.அகல்யா, சட்டத்தரணி சோ. தேவராஜா, யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் வி.அப்புத்துரை, புத்தூர் மேற்கு கிராம அலுவலர் ஐ.சிவானந்தம், கலைமதி சனசமுக நிலையக் காப்பாளர் கா.கதிர்காமநாதன், கலைமதி கல்விக் குழுத் தலைவர் வாகிஷன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தவராசா, கலைமதி முன்பள்ளித் தலைவர் ஆ.ஜெயா, கிந்துசிட்டி முன்பள்ளித் தலைவி திருமதி வனிதாமணி, ஆலடிமுருகன் ஆலயத் தலைவர் க.நவரட்ணம், கருமாரி அம்மன் ஆலயத் தலைவர் அ.சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஙு-23)

## சென்.லூட்சை வீழ்த்தி வாகை சூடியது பாரதி

யாழ்ப்பாணம்,ஒக்.3

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக முதற்கட்ட போட்டிகளை பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தி வருகின்றன.

இந்த வகையில்தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக் குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகஅணி மோதிக்கொண்டது.

இதில் பாரதி விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் இளவாலை சென். லூட்ஸ் அணியை வீழ்த்திச் சம்பியனாகியது. (ஙு-23)

## சென்.ஹென்றிஸ்– யாழ்.மத்தி சிநேகபூர்வ உதைபந்து முடிவு

யாழ்.மத்திய கல்லூரிக்கும் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரிக்கும் இடையிலான 14, 16,18,21 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றன.

இதில் 14 வயதுப் பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

21 வயதுப் பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் மத்திய கல்லூரியை வீழ்த்தியது. (ஙு-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டநாயகன் ஹசன்









ஜம்ஷெட்

# ஆஸி.யின் ஆட்டத்தை அடக்கியது பாகிஸ்தான்

தொடர்ச்சியாக வெற்றிகளைக் குவித்து வந்த ஆஸ்திரேலிய அணிக்கு நேற்றைய தினம் கடும் நெருக்கடி கொடுத்து 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றுக் கொண்டது பாகிஸ்தான் அணி. ஆஸியின் 'ரன் மெஷின்' வொட்ஸனும் பாகிஸ்தானின் சுழலில் ஆரம்பத்திலேயே சிக்கியதால் ஆஸி. மீட்சியின்றி தோல்வியைத் தழுவியது.

நான்காவது 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரின் 'சுப்பர் - 8' சுற்றின் ஆட்டங்கள் நேற்று நடைபெற்றன. ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் பி.ப 3.30 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியை எதிர்த்து பாகிஸ்தான் அணி விளையாடியது. பாகிஸ்தான் அணி தனது அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. ஆஸி. அணி இந்தத் தொடரில் சகல ஆட்டங்களிலும் முதலில் களத்தடுப்பிலேயே ஈடுபட்டு வெற்றியைப் பெற்றிருந்ததால் நேற்றைய தினமும் அவ்வாறே களத்தடுப்பை தேர்வு செய்தது.

பாகிஸ்தான் அணிக்கு வழமை போன்று சிறப்பான ஆரம்பம் கிடைக்கவில்லை. மந்தமாக ஓட்டங்களைச் சேர்த்ததுடன் முதலிரண்டு இலக்குகளையும் வேகமாகப் பறிகொடுத்தது. அத்துடன் ஜம்ஷெட் களமிறங்கிய அடுத்த பந்திலேயே ஆட்டமிழப்புக்கான சந்தர்பம் ஏற்பட்டும் ஆஸியின் களத்தடுப்பின் சொதப்பலால் அது வீணாகியது.

அதன் பின்னர் மூன்றாவது இலக்குக்காக ஜம்ஷெட், கம்ரான் அக்மல் ஜோடி மிகச் சிறந்த இணையை வழங்கியிருந்தது. ஆரம்பத்தில் நிதானமாகவும் போகப் போக அதிரடியாகவும் ஆடி இந்த ஜோடி ஓட்டங்களைச் சேர்த்தது. அதிரடியாக ஆடிய ஜம்ஷெட் 41 பந்துகளில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். சீரான இணைப்பாக ஓட்டங்கள் பகிரப்பட்டு பாகிஸ்தான் வலுவான நிலையை நோக்கி நகர்கையில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த ஜம்ஷெட், டொஹேட்டியால் வெளியேற்றப்பட்டார். அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே கம்ரான் அக்மலும் ஆட்டமிழக்க பாகிஸ்தான் மீண்டும் இக்கட்டான நிலையில் மாட்டிக் கொண்டது.

அதன் பின்னர் அப்துல் ரஷாக் ஓரளவு அதிரடியாக ஆடினார். ஏனைய வீரர்கள் மந்தமாகவே தமது ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ரஷாக்கின் இறுதிக் கட்ட சுமாரான அதிரடியுடன் பாகிஸ்தான் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

மிகவும் இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய ஆஸிக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி கொடுத்தது பாகிஸ்தான். ஆரம்பத்திலேயே பாகிஸ்தான் சுழல் பந்து வீச்சை முழுவதுமாக பாவித்தது. இதனால் திணறிய ஆஸி. அடுத்தடுத்து இலக்குகளை பறிகொடுத்தது. 'ரன் மெஷின்' வொட்ஸனும் விதிவிலக்கில்லாமல் ஆரம்பத்திலேயே நடையைக் கட்டினார். பாகிஸ்தானின் சுழல் மாயாஜாலத்தை சமாளிக்க முடியாத ஆஸி. 65 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து திணறியது.

அதன் பின்னர் மைக் ஹஸி - வேட் இணைந்து சுமாரான இணைப்பாட்டத்தை பகிர்ந்தனர். இவர்களது இணைப்பாட்டம் ஆஸி.யின் மோசமான தோல்வியை ஓரளவு தவிர்த்தது. 45 ஓட்டங்கள் ஆறாவது இலக்குக்கு இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் இறுதிக் கட்டத்தில் மீண்டும் பாகிஸ்தானின் சுழலில் மாட்டிக் கொண்டது. அஜ்மல் அடுத்தடுத்து இலக்குகளை சரிக்க ஆஸி. 110 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.112 ஓட்டங்களைப் பெற்றால் மாத்திரமே அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெறலாம் என்ற நிலையில் போராடிய ஆஸி. அணிக்கு இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் ஹஸி பவுண்டரி விளாசி அரையிறுதியை உறுதியாக்கினார். அத்துடன் தனது அரைச் சதத்தையும் பெற்றுக் கொண்டார்.ஆஸி. அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 117 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இதன் மூலம் 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியதுடன், இந்தத் தொடரில் முதலாவது தோல்வியையும் சந்தித்தது. ஆட்டநாயகனாக சுழலில் மிரட்டிய ஹசன் தெரிவானார். (5)

# சரியான நோக்கத்துக்காகவே சங்கா தலைவரானார்

இலங்கை அணி நேற்று முன்தினம் குமார் சங்ககாரவை அணித்தலைவராகச் செயற்படுத்தியமையில் தவறு இல்லை என்று இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். சரியான நோக்கத்திற்காகவே அந்த முடிவ எடுக்கப்பட்டதாகவும் மஹேல ஜெயவர்தன தெரிவித்தார்.இங்கிலாந்துடன் இடம்பெற்ற ஆட்டத்தில் இலங்கை அணியின் வழக்கமான தலைவராக மஹேல ஜெயவர்தனவிற்குப் பதிலாக குமார் சங்ககார உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தார்.இந்த நிலையில் அந்த முடிவு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, இதற்கு முன்னர் இடம்பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான ஆட்டத்தில் இலங்கை அணி குறித்த நேரத்திற்குள் பந்துப் பரிமாற்றங்களை வீசி முடிக்கவில்லை என்பதால் தனக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், இங்கிலாந்திற்கெதிரான ஆட்டத்திலும் இலங்கை அணி குறித்த நேரத்திற்குள் பந்துப் பரிமாற்றங்களை வீசி முடிக்காதுவிடின் போட்டித்தடை விதிக்கப்படும் என்பதாலேயே குமார் சங்ககார அணித்தலைவராகச் செயற்பட்டதாகத் தெரிவித்தார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் விதிகளின் படி அணியொன்று ஒரே தலைவரின் கீழ் 12 மாதங்களுக்குள் இரண்டு தடவைகள் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் பந்துவீசியிருக்காவிடில் அடுத்த ஆட்டத்தில் அணித்தலைவர் பங்குபற்றுவதற்குத் தடை விதிக்கப்படும்.

இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன, மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் ஏற்கனவே ஒரு தடவை அகப்பட்டுக் கொண்ட நிலையில் இங்கிலாந்திற்கெதிரான ஆட்டத்திலும் அகப்பட்டுக் கொண்டால் அரையிறுதி ஆட்டத்தில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டிருக்கலாம். எனவே குமார் சங்ககார அணித்தலைவராகச் செயற்பட்டார்.

முக்கியமான ஆட்டங்களில் போட்டித்தடை காரணமாக பங்குபற்றாமல் விட முடியாது என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, சரியான நோக்கத்திற்காகவே இந்த முடிவை எடுத்ததாகவும், எந்தவிதத் தவறான நோக்கங்களும் காணப்பட வில்லை எனவும் தெரிவித்தார். (5)

**இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் தலைவி யார்?**

..........................................

பெயர்- ..........................................

முகவரி- ..........................................

..........................................

■ உதயனில் வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து ι.ɪ.10.2012 ற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

■ உதயனின் யாழ். அலுவலகம், நெல்லியடி, சாவகச்சேரி, கரடிப்போக் குச் சந்தி, வவுனியா, மன்னார் ஜோதி புத்தகசாலை, சிவசாந்தி தேநீர்ச்சாலை- தாழ்வுப்பாடு அலுவலகங்களில் வைக் கப்பட்டுள்ள பெட்டியில் கூப்பனை இடலாம்.

**உதயன்**
**தினமும் வெல்லுங்கள்**
ரூபா.
**2000**
கேள்வி 15

## 2012 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ரி-20 ஆட்டம்

ஆஸ்திரேலியா எதிர் பாகிஸ்தான் நாணயச் சுழற்சி: ஆஸ்திரேலியா
முடிவு: பாகிஸ்தான் 32 ஓட்டங்களால் வெற்றி ஆட்டநாயகன்: ஹசன்

பாகிஸ்தான்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மொஹமட் ஹபீஸ் | lbw b ஸ்ராக் | 04 | 05 | 0 | 0 |
| இம்ரான் நஷீர் | c பெய்லி b வொட்ஸன் | 14 | 13 | 2 | 0 |
| ஜம்ஷெட் | c வோணர் b டொஹேட்டி | 55 | 46 | 4 | 2 |
| கம்ரான் அக்மல் | c வைட் b ஸ்ராக் | 32 | 26 | 1 | 1 |
| உமர் அக்மல் | ஆட்டமிழக்காமல் | 09 | 08 | 1 | 0 |
| அப்துல் ரஷாக் | c வொட்ஸன் b குமின்ஸ் | 22 | 17 | 2 | 1 |
| அப்ரிடி | b ஸ்ராக் | 04 | 02 | 1 | 0 |
| சொயிப் மலிக் | ஆட்டமிழக்காமல் | 04 | 03 | 0 | 0 |
| உமர் குல் | | | | | |
| சயிட் அஜ்மல் | | | | | |
| ஹசன் | | | | | |
| உதிரிகள் | | 05 | | | |

| பெயர் | O | R | W | M | TOTAL - 149/6 (20) |
|---|---|---|---|---|---|
| டொஹேட்டி | 4 | 27 | 1 | 0 | 1-5 (மொஹமட் ஹபீஸ்), |
| ஸ்ராக் | 4 | 20 | 3 | 0 | 2-29 (இம்ரான் நஷீர்), |
| வொட்ஸன் | 4 | 23 | 1 | 0 | 3-108 (ஜம்ஷெட்), |
| குமின்ஸ் | 4 | 42 | 1 | 0 | 4-108 (கம்ரான் அக்மல்), |
| மக்ஸ்வெல் | 1 | 08 | 0 | 0 | 5-136 (அப்துல் ரஷாக்), |
| ஹெறாக் | 3 | 29 | 0 | 0 | 6-144 (அப்ரிடி). |

ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வொட்ஸன் | lbw b ஹசன் | 08 | 14 | 1 | 0 |
| டேவிட் வோணர் | lbw b மொஹமட் ஹபீஸ் | 08 | 13 | 1 | 0 |
| மைக் ஹஸி | ஆட்டமிழக்காமல் | 54 | 47 | 4 | 1 |
| பெய்லி | lbw b சயிட் அஜ்மல் | 15 | 12 | 1 | 1 |
| கம்ரான் வைட் | c இம்ரான் நஷீர் b மொஹமட் ஹபீஸ் | 12 | 11 | 0 | 1 |
| மக்ஸ்வெல் | c மொஹமட் ஹபீஸ் b ஹசன் | 04 | 05 | 0 | 0 |
| வேட் | b சயிட் அஜ்மல் | 13 | 14 | 1 | 0 |
| குமின்ஸ் | lbw b சயிட் அஜ்மல் | 00 | 01 | 0 | 0 |
| ஸ்ராக் | ஆட்டமிழக்காமல் | 01 | 03 | 0 | 0 |
| கிறிஸ்ரெய்ன் | | | | | |
| ஹெறாக் | | | | | |
| உதிரிகள் | | 02 | | | |

| பெயர் | O | R | W | M | TOTAL - 117/7 (20) |
|---|---|---|---|---|---|
| மொஹமட் ஹபீஸ் | 4 | 22 | 2 | 0 | 1-15 (வொட்ஸன்), |
| ஹசன் | 4 | 14 | 2 | 0 | 2-19 (வோணர்), |
| சயிட் அஜ்மல் | 4 | 17 | 3 | 0 | 3-44 (பெய்லி), |
| அப்ரிடி | 4 | 33 | 0 | 0 | 4-58 (வைட்), |
| மலிக் | 2 | 19 | 0 | 0 | 5-65 (மக்ஸ்வெல்), |
| உமர் குல் | 2 | 11 | 0 | 0 | 6-110 (வேட்), 7-110 (குமின்ஸ்) |

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விரக்தியில் டோனி, ஹோக்லி

# பலிக்கவில்லை பகல் கனவு வென்றும் வெளியேறியது இந்தியா

ராசி பார்த்து 'ரி-20' இற்கு பிரேத்தியேகமாக தயாரிக்கப்பட்ட ஆடையைப் புறக்கணித்த இந்திய அணி, உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டத்திற்கு கூட தகுதி பெறாமல் வெளியேறியது. இந்திய அணி வெளியேறியதால், அதன் பரம எதிரியான பாகிஸ்தான் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது. தென்னாபிரிக்க அணியைப் போராடி ஓர் ஓட்டத்தால் மயிரிழையில் வென்றது இந்திய அணி.

இலங்கையில் நடைபெற்றுவரும் 'ரி-20' உலகக் கிண்ண தொடரில் நேற்று இரவு நடைபெற்ற 'சுப்பர் - 8' இறுதி ஆட்டத்தில் இந்திய, தென்னாபிரிக்க அணிக ள் மோதிக் கொண்டன. பாகிஸ்தான் அணி, ஆஸிக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்றதால் இந்திய அணி இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியை மிகப் பெரிய வித்தியாசத்தில் வெல்ல வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

கம்பீர்-சேவாக் ஜோடி களமிறங்கியது. ஸ்ரெய்ன் வீசிய முதலாவது பந்தை பவுண்டரிக்கு விளாசி கணக்கை தொடங்கிய இந்திய அணிக்கு அந்த அதிரடியைக் கொண்டு செல்வதற்கு முடியவில்லை. மோர்னி மோர்கல் வேகத்தில் கம்பீரின் இலக்கு தகர்த்து எறியப்பட்டது. தொடர்ந்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த தென்னாபிரிக்க அணி சேவாக், ஹோக்லி என அடுத்தடுத்து வெளியேற்றி இந்திய அணிக்கு அடி கொடுத்தது. அதன் பின்னர் யுவராஜ் சிங் - ரோகித் சர்மா சிறியதொரு இணைப்பாட்டத்தை பகிர்ந்தனர். அதிரடியாக ஆடி இவர்கள் ஓட்டங்களைப் பெற்றனர்.

இவர்களின் சுமாரான இணைப்பாட்டம் 32 ஓட்டங்களுடன் பிரிக்கப்பட்டது. அதன் பின்னர் களமிறங்கிய ரெய்னா அதிரடியாக ஆட்டத்தை தன் கையில் எடுத்து ஆடினார். ரெய்னாவின் பிடியெடுப்பு வாய்ப்பை இரண்டு தடவைகள் தென்னாபிரிக்கா வீணாக்கியது. இறுதிக் கட்டத்தில் நுழைந்த டோனியும் வெளுத்து வாங்க இந்திய அணி கௌரவ இலக்கை நெருங்கியது. இருபது பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி.

இந்திய அணி அரையிறுதிக்கு தகுதி பெற வேண்டுமானால் தென்னாபிரிக்க அணியை 121 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் களமிறங்கியது. ஆரம்பத்திலேயே தென்னாபிரிக்காவுக்கு அதிர்ச்சி கொடுத்தது இந்தியா. அம்லாவை முதலாவது பந்துப் பரிமாற்றத்தில் வெளியேற்றி வைத்தது. தொடர்ந்து கலிஸ், டீ வில்லியர் என்று சொற்ப ஓட்டங்களில் வெளியேற இந்திய அணி வீரர்கள் துள்ளிக் குதித்தனர். இருந்தும் பிளெஸிஸ் தனி மனிதனாக அதிரடியாக ஆட இந்தியாவின் அரையிறுதி கேள்விக்குறியானது. பிளெஸிஸையும், டுமினியையும் அடுத்தடுத்து 107 ஓட்டங்களுக்குள் வெளியேற்ற இந்தியா அரையிறுதிக்கு தகுதி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதற்கமைவாக அடுத்ததாக ரொபின் பீற்றர்ஸனும், அஸ்வின் சுழலில் ஆட்டமிழந்தார். இருந்தும் அந்தப் பந்து முறையற்றது என்று அறிவிக்கப்பட இந்திய வீரர்களின் முகம் கறுவியது. அதன் பின்னர் ரொபின் பீற்றர்ஸன் அதிரடியாக ஆட தென்னாபிரிக்க அணி 122 ஓட்டங்களைப் பெற்றது.

### ஹோக்லி அழுகை

இந்திய அணியின் வெளியேற்றத்தைப் பொறுக்க முடியாத ஹோக்லி தென்னாபிரிக்கா 122 ஓட்டங்களைப் பெற்றதும் மைதானத்தில் கண்ணீர் விட்டழுதார். அத்துடன் இந்திய வீரர்கள், ரசிகர்கள் எல்லோரது கண்களும் பனித்தன. ஆனால் மைதானத்திலிருந்த பாகிஸ்தான் ரசிகர்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர்.

இருந்தும் தென்னாபிரிக்கா தனது வெற்றியை நோக்கி போராடியது. இறுதிக் கட்டத்தில் சிக்ஸர் விளாசுவதும் அடுத்த பந்திலேயே ஆட்டமிழப்பதுமாக தென்னாபிரிக் வீரர்களின் நிலை இருந்தது. 6 பந்துகளில் 14 ஓட்டங்கள் தேவையென்ற நிலையில் அல்பி மோர்கல், பாலாஜியின் பந்தை எதிர் கொண்டார். முதல் பந்திலேயே ஆறு ஓட்டங்கள் விளாசி அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த மோர்னி மோர்கல் முதலாவது பந்தில் ஓட்டமெதனையும் பெறவில்லை. 3 பந்துகளில் 8 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் அடுத்த பந்தில் சிக்ஸர் விளாசினார். இரண்டு பந்துகளில் 2 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பாலாஜி, மோர்னி மோர்கலை வெளியேற்ற இந்திய அணி ஓர் ஓட்டத்தால் தென்னாபிரிக்க அணியை வெற்றி கொண்டது. ஆட்டநாயகனாக யுவராஜ் தெரிவானார்.

### அரையிறுதி

இந்திய அணி நேற்று வெற்றியைப் பெற்றும் அரையிறுதிக்கு தகுதி பெறாமல் சோகத்துடன் நாடு திரும்புகின்றது. அதே வேளை பாகிஸ்தான் அணி இலங்கை அணியை எதிர்த்தும், ஆஸ்திரேலிய அணி மேற்கிந்தியத்தீவுகள் அணியை எதிர்த்தும் அரையிறுதியில் மோதவுள்ளது. (ஏ)

## 2012 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ரி-20 ஆட்டம்

தென்னாபிரிக்கா எதிர் இந்தியா — நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

முடிவு: இந்தியா ஓர் ஓட்டத்தால் வெற்றி — ஆட்டநாயகன்: யுவராஜ் சிங்

**இந்தியா**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கம்பீர் | b மோர்னி மோர்கல் | 08 | 12 | 1 | 0 |
| சேவாக் | b பீற்றர்ஸன் | 17 | 14 | 1 | 1 |
| ஹோக்லி | c டீ வில்லியர்ஸ் b கலிஸ் | 02 | 06 | 0 | 0 |
| ரோகித் சர்மா | lbw b பீற்றர்ஸன் | 25 | 27 | 2 | 0 |
| யுவராஜ்சிங் | b மோர்னி மோர்கல் | 21 | 15 | 1 | 2 |
| சுரேஷ் ரெய்னா | run out ( டீ வில்லியர்ஸ் ) | 45 | 34 | 5 | 0 |
| டோனி | ஆட்டமிழக்காமல் | 23 | 13 | 3 | 0 |
| இப்ரான் பதான் | | | | | |
| அஸ்வின் | | | | | |
| சகீர்கான் | | | | | |
| பாலாஜி | | | | | |
| உதிரிகள் | | 11 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரெய்ன் | 4 | 26 | 0 | 1 |
| மோர்னி மோர்கல் | 4 | 28 | 2 | 0 |
| கலிஸ் | 3 | 24 | 1 | 0 |
| ரொபின் பீற்றர்ஸன் | 4 | 25 | 2 | 0 |
| போத்தா | 3 | 30 | 0 | 0 |
| பிளெஸிஸ் | 1 | 03 | 0 | 0 |
| டுமினி | 1 | 06 | 0 | 0 |

TOTAL - 152/6 (20)
1-23 (கம்பீர்), 2-30 (ஹோக்லி), 3-36 (சேவாக்), 4- 68 (யுவராஜ் சிங்), 5- 112 (ரோகித் சர்மா), 6- 152 (ரெய்னா)

**தென்னாபிரிக்கா**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அம்லா | c சேவாக் b சகீர்கான் | 00 | 02 | 0 | 0 |
| கலிஸ் | c சர்மா b பதான் | 06 | 08 | 1 | 0 |
| டீ வில்லியர்ஸ் | b யுவராஜ் சிங் | 13 | 13 | 2 | 0 |
| டு பிளெஸிஸ் | c ரெய்னா b யுவராஜ் சிங் | 65 | 38 | 6 | 2 |
| டுமினி | c கம்பீர் b பாலாஜி | 16 | 23 | 0 | 0 |
| பெகர்டின் | c ரெய்னா b சகீர்கான் | 13 | 12 | 1 | 0 |
| ரொபின் பீற்றர்ஸன் | b சகீர்கான் | 10 | 10 | 1 | 0 |
| அல்பி மோர்கல் | b பாலாஜி | 10 | 06 | 0 | 1 |
| போத்தா | c ரெய்னா b அஸ்வின் | 08 | 05 | 0 | 1 |
| ஸ்ரெய்ன் | ஆட்டமிழக்கவில்லை | 00 | 00 | 0 | 0 |
| மோர்னி மோர்கல் | b பாலாஜி | 06 | 03 | 0 | 1 |
| உதிரிகள் | | 04 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சகீர்கான் | 4 | 22 | 3 | 0 |
| இப்ரான் பதான் | 3 | 26 | 1 | 0 |
| யுவராஜ் சிங் | 4 | 23 | 2 | 0 |
| ரோகித் சர்மா | 1 | 13 | 0 | 0 |
| அஸ்வின் | 4 | 27 | 1 | 0 |
| பாலாஜி | 3.5 | 37 | 3 | 0 |

TOTAL - 151/10 (19.5)
1-0 (அம்லா), 2-16 (கலிஸ்), 3-46 (டீ வில்லியர்ஸ்), 4-95 (பிளெஸிஸ்), 5-107 (டுமினி), 6- 127 (பெகர்டின்), 7- 127 (ரொபின் பீற்றர்ஸன்), 8- 138 (போத்தா), 9-145 (அல்பி மோர்கல்), 10-151 (மோர்னி மோர்கல்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

SUN BRITISH BUSINESS MANAGEMENT COLLEGE
FRENCH CLASSES
வவுனியா மண்ணில் முதன் முதலாக French வகுப்புக்கள்
France, Canada, Swiss, Belgium போன்ற நாடுகளுக்கு திருமணம் முடித்து செல்லவுள்ளோர் கற்றுக் கொள்ளலாம்.
நீண்டகால அனுபவமும், திறமையும் வாய்ந்த பிரபல ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.
முதற் 10 பேருக்கு மட்டுமே அனுமதி...
No.26, APPALO HOSPITAL UPSTAIR, STATION Rd.
VAVUNIYA
T.P : 077 9789456 / 024 2226649

பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் தாம் சிறுகச் சிறுகச் சேமித்த பணத்தை மக்கள் எம்மை நம்பி ஒப்படைக்கும் போது அவர்கள் கேட்டவுடன் அதனை மீள வழங்குவதே தார்மீகம். இதனை இவ் விசா ஆலோசனைத்துறை சார்ந்த ஏனையோரும் பின்பற்ற வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

திசைகாட்டி முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவன நிர்வாக இயக்குநரும் பட்டயக்கணக்காளருமான சி. செல்வராசா அவர்கள் மேற்கண்டவாறு கடந்த 30.09.2012 அன்று திசைகாட்டி பிறைவேற் லிமிட் யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நடத்திய முன்மாதிரியான கைங்கரிய நிகழ்வான விசா ஆலோசனைப்பணம் மீளளித்தலில் பங்கு பற்றி உரையாற்றுகையில் அறைகூவல் விடுத்தார். ஊடகவியாலாளர் முன் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

அந் நிகழ்வுகளின் பதிவுகள்

திசைகாட்டி நிறுவன நிர்வாக இயக்குநரும் பட்டயக்கணக்காளருமான சி. செல்வராசா அவர்கள் சுபராஜ் குடும்பத்திற்கு விசா ஆலோசனைப்பணத்தை மீளளிக்கிறார்.





திசைகாட்டி இணை நிர்வாக இயக்குநர் அ. பிரவீணா ஆலோசனைப் படிவங்களை கையளிக்கிறார்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் ( PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 2219016

தவறிவிட்டது

15/5 கச்சேரி கிழக்கு அரியாலையை சேர்ந்த நித்தியானந்தன் துஷ்யந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (841472250V), சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார்வாகன வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், JOBIC என்பன பிருந்தாவனம் வீதிக்கும் A32 முழங்காவில் பல்லவராயன் கட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:- 0777430916

மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com
(23606)(15-6)

பாராட்டி வாழ்த்துகிறோம்



முகுந்தன் சஞ்சிகா



அரவிந்தன் சரவண்யா

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளை பெற்ற
முகுந்தன் சஞ்சிகா -165 புள்ளி
அரவிந்தன் சரவண்யா -165 புள்ளி
(விசுவமடு மகா வித்தியாலயம்)
ஆகிய இரு மாணவிகளும் இறைவன் திருவருள் துணைகொண்டு கல்வியில் மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்.
76/1, வாணிவிலாஸ், விசுவமடு. (ச/3792)(9.14)
வாழ்த்துபவர்கள் அப்பப்பா, அப்பம்மா

கணக்கீடு பிரத்தியேக வகுப்புக்கள்

A/L, AAT, HNDM [Tamil, English medium]
மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு:-
0750710252, 0774525213
த.சுதர்சன், BBA(Sp.FM), நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(23581)(15-14.6)

பதவி வெற்றிடம்

ராம் சுப்பசிற்றி
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP.No:0212221252
01. பொதி செய்வோர்
02. விற்பனையாளர்
03. கணக்காளர்
காலம்:- 04.10.2012 நேரம்:- மு.ப 10 மணி
தகைமையுடையவர்கள் உரிய ஆவணங்களுடன் நேர்முகத்தேர்வுக்கு சமுகம் அளிக்கவும்.
(ச/3786)(15-14.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அறிவும்
உண்மையும்
நெருங்கிய
உறவுடையன.
--பிளேட்டோ--

# புதன் பொய்கை A

உதயன் 03 ஒக்ரோபர் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

■ மணி



# நம்பிக்கை மீது நம்பிக்கை வைப்போம்

எண்ணிய எல்லாம் எய்த வேண்டுமானால் மனத்தூய்மையோடு அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இந்த நான்கும் இல்லாமல் வாழப்பழக வேண்டும்.

இவ்வுலக உயிர்களின் மீது அன்பு கொண்டு, எல்லா உயிர்களும் இன்புற்று வாழ, எவ்வுயிர்க்கும் தீங்கு எவ்விதத்திலும் நேராத வண்ணம் நல்ல தேவைகளைக் குறித்து எண்ண வேண்டும்.

எண்ணியவற்றில் மாறுபாடு இல்லாமல், எண்ணச் சிதறல் இல்லாமல் கவனத்தைக் குவித்து, தெளிந்த அறிவோடு தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டும்.

திட்டவட்டமான குறிக்கோளை மனதில் பதித்து எண்ணினால் எண்ணியது நிறைவேறும்.

> எண்ணிய முடிதல் வேண்டும்
> நல்லவே எண்ணல் வேண்டும்
> திண்ணிய நெஞ்சம் வேண்டும்
> தெளிந்த நல்லறிவு வேண்டும்

பாரதி எண்ணியதை எண்ணியவாறு அடைய 'நம்பிக்கை' உணர்வு அவசியம். பொதுவாக மனிதர்கள் தங்களின் அபிலாஷைகள், ஆசைகள், தேவைகள், இலட்சியங்கள் குறித்து எண்ணுகின்ற போது இயல்பாகவே மனம் கணக்குப் போட்டுப் பார்க்கும்.

மனிதக் கணக்கின் விடை பல நேரங்களில் 'எதிர்மறையாக இருக்கும். உயர்ந்த இலட்சியங்களை உருவாக்கு' என்று உலகம் போதித்தாலும் உள் மன ஆசையால் ஒன்றை அடையவேண்டும் என்று தீர்மானிக்கும்போது எப்படி அடைவது? எப்படி நமக்குக் கிடைக்கும்? என்ன வழி இருக்கிறது? என்று அறிவுபூர்வமாகக் கேள்விகள் பிறப்பது இயற்கை.

இந்த அறிவுபூர்வமான கேள்விகளுக்கு விடை கிடைக்காது. விடை கிடைக்காதபோது விட்டுவிடத் தோன்றுவதால் முயற்சி முளையிலேயே தடைப்பட்டுவிடும். முனைந்து முயலாததால் முன்னேற்றமும் தடைப்பட்டுவிடும்.

கணக்குப் போட்டுப் பார்த்துக், காரியம் நடவாது என்று முடிவெடுக்காமல், நடக்கும், எப்படியோ நடக்கும் என்று நம்புவதற்கும் எதிர்பார்ப்பதற்கும் ஓர் உபாயம் மனிதர்களுக்குத் தேவைப்படுகிறது. அந்த உபாயம்தான் 'நம்பிக்கை'.

நம்பிக்கைதான் எண்ணத்துக்கு வண்ணம் சேர்க்கும், வலிமை சேர்க்கும்.

நம்பிக்கை இல்லாத எண்ணங்கள், நலிந்த எண்ணங்கள் நலம் பயக்காதவைகள்.

தன் அறிவாற்றலின் மீதும், செயலாற்றலின் மீதும் நம்பிக்கை வைத்து தன்னம்பிக்கையோடு செயற்பட்டாலும் பல நேரங்களில் மனிதர்கள், தங்கள் ஆற்றலுக்குத், தங்களுக்குள்ளாகவே ஓர் எல்லை வகுத்துக் கொள்வதால், நடக்குமா? எப்படி நடக்கும் என்ற ஐயம் மனதிலே உருவாகி நடக்க வழியில்லை என்கிற நம்பிக்கையின்மை வலுப்பெற்று விடுகிறது. இது ஓர் உளவியல் உண்மை.

இந்த உளவியல் உண்மையை உடைத்து, உள்ளத்தில் நம்பிக்கை நாற்றை நடவு செய்வதற்கு மனித குலத்தில் உதித்த மகான்கள், அறிஞர்கள், மேதைகள், சில உளவியல் சார்ந்த உபாயங்களை உருவாக்கித் தந்தார்கள்.

அந்த உபாயங்களும் உத்திகளும்தான் கடவுள் நம்பிக்கை. கடவுளின் ஆற்றலை அறிவிக்கும் புராண இதிகாசக் கதைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், பிரார்த்தனைகள் என இன்னபிற செயல்கள்.

இதுகுறித்து, தீர்க்கமான சிந்தனையற்றவர்கள் இந்த மனவியல் மார்க்கங்களை மட்டரகமான, முட்டாள்தனமான மூடநம்பிக்கைகள் என்று முறைகேடாக முழங்கி வருகிறார்கள்.

மனித சமுதாயத்தில் எல்லா மனிதர்களும் மன முதிர்ச்சியும், சிந்தனை ஆற்றலும் உள்ளவர்கள் அல்லர். [illegible] இயலாது. படித்தவர்கள் இருக்கலாம், படிக்காத பாமரர்கள் இருக்கலாம். பட்டறிவின் வழி சிந்திப்பவர்கள் இருக்கலாம். சிந்திக்கத் தெரியாத அல்லது சிந்திக்க மறுக்கிற சிந்தனைச் சோம்பேறிகள் இருக்கலாம்.

வாழ்க்கைச் சூழலாலோ, காலக்கட்டாயத்தாலோ, அறியாமை இருளில் அவல நிலையில் அல்லல்படுபவர்கள் இருக்கலாம். இதுபோன்றவர்கள் தன்னம்பிக்கையற்றவர்கள், தாழ்வு மனப்பான்மை நோயால் தளர்ந்து நிற்பவர்கள்.

இப்படிப்பட்டவர்களும் வாழ்வில் நலம் பெறவேண்டும், வளம் பெறவேண்டும். இதற்கு வழி என்ன? இவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது எங்ஙனம் என்று எழுந்து நின்று யோசித்தவர்கள்தான் இந்த நம்பிக்கை சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் உண்டாக்கினார்கள்.

நடக்கும் என்கிற நம்பிக்கை எண்ணத்தின் மீது நம்பிக்கை உருவாக ஓர் உபாயம்தான் சடங்குகள், சம்பிரதாயங்கள்.

மற்றவர்களுக்கு இடையூறும் தீங்கும் நிகழா வகையில் நன்மை உண்டாகும் விதமாக மகான்கள் மார்க்கங்களைக் கற்பித்து, உருவாக்கி, போதித்துச் சென்றார்கள். அவைகள் காலப் போக்கில் மாற்றம் பெற்று சடங்குகளாகவும், சம்பிரதாயங்களாகவும் வழிவழியாகப் பின்பற்றப்படுகின்றன.

இந்தச் சடங்குகளும், சம்பிரதாயங்களும் அறிவுபூர்வமாக காரண காரிய விதிப்படி ஆராயப்பட்டு இவைகள் மூட நம்பிக்கைகள், முட்டாள்தனமானவைகள் என்று நிரூபணமாக விமர்சிக்கப்பட்டாலும் ஒன்றை நாம் ஆழ்ந்து சிந்தித்து ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும்.



இந்த நம்பிக்கைகளையும், சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் நீக்கிவிட்டு, அனைவரின் அறியாமையையும் போக்கி விட்டு உயர்ந்த, தன் சக்திக்கு மீறிய இலக்குகளை அடைய மனித மனத்தில் நம்பிக்கையை எப்படி விதைப்பது?

மனித குலத்தின் மாந்தர்கள் அனைவருக்கும் எல்லாக் கால கட்டத்திலும், எல்லாத் தலைமுறையினருக்கும் தன்னம்பிக்கை ஊட்டுவதும், உளவியல் பாட உபதேசம் செய்வதும் நடக்கக்கூடிய செயலா?

அறிவு பூர்வமாக சிந்திக்கத் தொடங்கிவிட்ட மனிதன் தன் சக்திக்கு மீறிய இலட்சியத்தை அடைய கணக்குப் போட்டுப் பார்த்தால், விடை முடியாது, இயலாது, விட்டுவிடு என்பதாகத்தான் இருக்கும்.

விடை எதிர்மறையாகத் தொடக்கத்திலேயே இருக்கும் போது சாதாரணமானவர்கள் சாதனை நிகழ்த்துவது எப்போது? விடை எதிர்மறையாக இருப்பதால் முயற்சியைக் கைவிட்டு விலகி விடுவார்கள். விலகிவிடுபவர்கள் வெற்றி பெறுவதில்லை.

விட்டு விலகாமல் விடா முயற்சியோடு கலங்கரை விளக்கமாக ஏதோ ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று, உள்ளத்தில் உருவானால் தான் முயற்சியைக் கைவிடமாட்டார்கள். அப்படிப்பட்ட நம்பிக்கையாளர்கள் தான், விலகாமல் வெற்றியை அடைகிறார்கள்.

படித்தவர்களாக இருந்தாலும் படிக்காத பாமரர்களாக இருந்தாலும் அறிவு ஜீவிகளாக இருந்தாலும் அறியாமையில் உழல்பவர்களாக இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் உள்ளத்தில் நம்பிக்கையை உற்பத்தி செய்வதற்காகத்தான் இறை நம்பிக்கை, சடங்குகள், சம்பிரதாயங்கள் எல்லாம்.


இறை நம்பிக்கையை இந்த மனித குலத்திற்கு உபதேசித்தவர்கள் உளவியல் மேதைகள், மகான்கள். அந்த மகான்களைக் கூட மனித உருவில் கடவுள் என்று கற்பித்தவர்கள் கூட, கடவுளைக் கண்ணால் கண்டிருக்க மாட்டார்கள்.

ஆனாலும் அந்த நம்பிக்கை, அந்த உளவியல் கொள்கை உண்மையிலேயே உன்னதமான நன்மையை நாளும் நம் மக்களுக்குத் தரும் என்று தீர்க்கமாகச் சிந்தித்து இயற்கைச் சக்திகளின் மீது இந்த நம்பிக்கையை இணைத்தும் பிணைத்தும் கடவுள் நம்பிக்கை என்கின்ற கொள்கையை வகுத்துச் சென்றிருக்கிறார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிலும் கலை வண்ணமா?



ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த ஒருவர் கண்களை அழகுபடுத்தி மற்றவர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளார். சிறு வண்ண ஆபரணங்கள், இறகுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கண்களை அலங்கரித்துள்ளார்.

# சிறுவனின் திறமை இப்படியுமா...?




தாம் உயரமாக வளரவேண்டும் என்பதே அதிகமான சிறுவர்களின் ஆசையாக காணப்படுகின்றது. அதே போன்றதே ஏழு வயதான இந்தச் சிறுவனின் ஆசையும்கூட. ஆனால் இந்தச் சிறுவன் சிறுவயதிலேயே சாதிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டான். தனியே வாகனங்களைக் கட்டி இழுத்தல், தன்னிலும் பாரம் கூடிய பொருள்களைத் தூக்குதல் போன்றவற்றில் திறமையாகச் செயற்படுகிறான்.
90 கிலோ கிராம்களுக்கு மேல் எடை கொண்ட தனது தந்தையைக் கூட தோழில் சுமந்து அசத்தியுள்ளான் இந்தச் சிறுவன்.



# படிமுறைகளை அறிந்தால் சிறந்த ஓவியம் வரையலாம்





ஓவியம் வரையும் ஆற்றல் பலருக்கு காணப்படுகின்ற போதிலும் சிலராலேயே சாதிக்க முடியும். இதற்கு காரணம் எல்லோரிடத்திலும் மற்றவர்களைக் கவரும் கற்பனைத்திறன் காணப்படுவதில்லை. எனினும் விடா முயற்சியாலும், சிறந்த பயிற்சியாலும் தலை சிறந்த ஓவியங்களைப் படைக்க முடியும். இதற்காக சில ஓவியர்கள் தாம் வரையும் ஓவியங்களின் படிமுறைகளை வெளிப்படுத்துவதன் மூலம் மற்றவர்களையும் சாதிக்க வைக்கின்றார்கள். அவ்வாறான ஓவியங்கள் வரையப்படும் காட்சிகளை இங்கே காணலாம்.

# முப்பரிமாண ஓவியம்

மொஸ்கோ நகரில் உள்ள பூங்காவில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் பாதைகளில் முப்பரிமாண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஜேர்மன் கலைஞர்களால் வரையப்பட்டுள்ள இந்த ஓவியங்கள் பார்ப்பவர்களை மிகவும் கவர்வதுடன் மிரளவும் வைக்கின்றன.






# விநோதமான ஓட்டோ

சான்பிரான்சிஸ்கோவில் வசிக்கும் ஜே நெல்சன் என்பவர் பளேவூட் பலகைகள் மற்றும் ஓட்டோவின் பாகங்கள், பைபர் கிளாஸ் என்பவற்றைப் பயன்படுத்தி விநோதமான ஓட்டோவை வடிவமைத்துள்ளார்.
ஆனாலும் இது ஒரு மின்னியல் ஓட்டோ ஆகும். மின்மோட்டரின் உதவியுடன் மணிக்கு 20 கிலோமீற்றர்கள் எனும் வேகத்தில் பயணம் செய்யக் கூடியதாக காணப்படுகின்றது. இந்த ஓட்டோவில் சமயலறை, படுக்கையறை என்பவனவும் உள்ளடக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வெளிப்பாடுகள்....



மனிதனின் நாகரிக வரலாறு, அவன் சமூகமாய் கூட்டமாகவாழத் தொடங்கிய காலத்திலிருந்து தொடங்கியது எனலாம். ஆதி காலத்தில் சமூகமாய் வாழ்ந்த மனிதனை முக்கியமாக பிணைத்தது அவனது கருத்துப் பரிமாற்றம். மனிதன்சக மனிதனுடன்தொடர்பு கொள்ளவும், கருத்துப் பரிமாறவும் பயன்படுத்திய மொழியானது உடலசைவுகள், ஒலி வடிவங்கள், வரிவடிவங்கள் இன்னும் பல்வேறு முறைகளில் வெளிப்பட்டன.

மனிதன் சக மனிதர்களுடன் தொடர்பு கொள்ளும் போதும், இணைந்து செயற்படும் போதும் மானிடச் செயற்பாடு உருவாகின்றது. இது மானிடத்தின் சாராம் சமும் ஆகும்.

மனிதன் தன் சூழலை தான் விரும்புவதற்கேற்ப மாற்றிக் கொள்ளவும், அதன்மூலம் மனித இனம் வளர்ச்சியடையவும், அவன் பிற மனிதர்களுடன் இணைய வேண்டியது அவசியமாகிறது. இந்த கூட்டுமுயற்சியின் அடிப்படையே மனிதனை சமுதாயமாக வாழச் செய்கின்றது. சமுதாய உறுப்பினனான மனிதனை சமூக ஜீவி என்கிறோம்.

சமூக ஜீவியாக அல்லாமல் மனிதனுக்கு இருத்தல் இல்லை. மனிதனை சமூக ஜீவியாக மாற்ற கலையும், இலக்கியமும் பயன்படுகின்றன. இதைப் புரிந்து கொள்ள மனிதனின் வெளிப்பாடுகளை அறிய வேண்டியது அவசியம்.

மனிதன் தன் எண்ணங்களை, கட்டளைகளை, செயற்பாட்டை, அனுபவத்தை பல வழிகளில் வெளிப்படுத்தினான்.

எந்த வெளிப்பாட்டு வடிவத்தை அனுபவம் கையாளுகிறதோ, அதைப் பொறுத்து அது கலையாகவோ, இலக்கியமாகவோ உருவாகின்றது.

இந்த அனுபவம் நேரடியாக பங்கு பெற்ற அனுபவமாகவோ, கேள்வி அனுபவமாகவோ இருக்கலாம். அது சமூகத்தால் மெருகேற்றப்பட்டுள்ளது. உதாரணமாக பழங்கதைகள், குழு ஆட்டம், நாட்டுப் பாடல்கள், வழிபாடுகள் போன்றவை. பிற்காலத்தில் தனிமனித வெளிப்பாடுகள் வளர்ச்சி அடைய அடைய கலைஞன் தனிமனிதனாகத் தோன்றினான்.

கலைஞன் தன் அனுபவத்தைச் சிதைக்காமல், மாற்றாமல் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் திறமையுடையவன். தனது வெளிப்பாட்டு வடிவத்தின் மேல் அவனுக்குள் தேர்ச்சி அனுபவத்தை, வெளியீட்டு வடிவத்திற்கு மாற்றும் திறமை, மிக நுட்பமான சலனங்களையும், உணர்வுகளையும் பதிவு செய்து வெளியிடுதல் போன்றவற்றில் தேர்ச்சியடைந்தவனே கலைஞன்.

மனித வெளிப்பாட்டின் வடிவமான கலை, இலக்கியத்தை பிற மனிதர்களும் அனுபவிக்க வேண்டிய அவசியம் என்ன?

சமூக ஜீவியான மனிதன், தன்னை சமூகத்தின் உறுப்பினனாக மாற்ற அவன் பிறர் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளவும் பங்கு கொள்ளவும் வேண்டியுள்ளது. பிறர் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் முயற்சி உரையாடல்கள் இணைந்து, இசைந்து ஆடுதல், கூட்ட வழிபாடுகள், இணைந்த போராட்டங்கள் இப்படி பல வகைகளில் நடை பெறுகிறது. இவற்றுள் முதன்மையானது கலையும் இலக்கியமும்.

கலை, இலக்கியங்களுக்கு சில தனிப்பட்ட கூறுகள் உண்டு. அழகியல் அனுபவம், புதுமை, அறிவூட்டுதல், புனைகதைத் தன்மை இப்படி பல அதில் உட்படும். ஆதி சமூகம் தொட்டு இன்றைய சமுதாயம் வரை, கலை, இலக்கியங்கள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். அதன் வடிவங்கள், வகைமைகள் மாறுபடும்.

எனவே எந்த மனித சமுதாயத்திற்கும் கலை, இலக்கியம் இன்றியமையாதது. சமூகவியல் நோக்கில் கலை, இலக்கியத்தை சமுதாய நிறுவனமாகக் கொள்ளலாம். மனிதனின் வாழ்வோடு நெருங்கிய உறவைக் கொண்டுள்ள கலை, இலக்கியம் பல்வேறு நோக்கத்துடன் பல்வேறு விதமாக பயன்படுத்தப்படுகின்றது.

மனிதனுக்குத் தேவையான கலை, இலக்கியத்தின் பல்வேறு பண்புகள் இன்று வியாபாரப் பொருள்களாக மாற்றப்பட்டு அவனைச் சுரண்டப் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக இன்றைய ஜனரஞ்சக சினிமா, நட்சத்திர எழுத்தாளர்கள், 'பொழுது போக்கு' என்ற நாகரிகமான பெயரைப் பெற்றுள்ளன.

இடதுசாரிகள் கலை, இலக்கியத்தையே சமூகச் செயற்பாட்டுக்கான ஒரு கருவியாகக் காண்கின்றனர். கலையும், இலக்கியமும் சமகால சமூகம் பற்றிய விமர்சனத்தையும் பிரச்சினைகள் பற்றிய விவாதத்தையும் கொண்டிருக்கின்றன. என்றோ ஒரு நாள் உருவான படைப்பு இன்றும் மக்களால் அனுபவிக்கப்படுவதற்கான நியாயமான காரணம் இதுவே.

**மனிதன் சக மனிதர்களுடன் தொடர்பு கொள்ளும் போதும், இணைந்து செயல்படும் போதும் மானிடச் செயற்பாடு உருவாகின்றது. இது மானிடத்தின் சாராம் சமும் ஆகும்.**

இந்த இரண்டையும் ஒரு கலைஞன் மேற்கொள்ள அவனுக்கு சமூக உணர்வு அவசியமாகிறது. எனவே சிறந்த படைப்புக்களின் பின்னணியில் சமூக உணர்வு அமைகின்றது. இந்த சமூக உணர்வை உடைய கலைஞனே தன் படைப்பின் மூலம் சமூகத்தை விமர்சனம் செய்கின்றான். படைப்பு ஒரு விமர்சனமாகிறது.

மனிதனுடைய சமூகம் பற்றிய விமர்சனம் கட்டுரைகளாக, துண்டுப் பிரதிகளாக போராட்டங்களாக, ஊர்வலங்களாக பல்வேறு வடிவங்களில் வெளியிடப்படுகிறது.

படைப்பு சமுதாயத்தை விமர்சிப்பது போலவே படைப்பும் விமர்சிக்கப்படுகிறது. இது இரண்டு விதங்களில் செயற்படுகிறது.

படைப்பும் ஒரு விதத்தில் மனிதனது உற்பத்திப் பொருள் தான். எனவே அதன் குறை நிறைகளை, அதற்குரிய மதிப்பீடுகளில் வைத்து காண்கிறான். பழைய குறைகளைத் தவிர்த்து புதிய படைப்புகள் உருவாகின்றன. இதற்கு உதவுவது விமர்சனம். படைப்பை அனுபவித்த வாசகனின் வெளிப்பாட்டை மற்றொரு படைப்பு என்றும் கூறலாம்.

விமர்சனத்தையும் கலை என்பது இந்தப் பொருளில் தான். கலை என்பது சமூக விமர்சனம். அது மீண்டும் வாசகனால் விமர்சிக்கப்படுகிறது. கலையின் செயற்பாடு தொடர்கிறது.


(தொடரும்)

## காட்டிக் கொடுப்பவர்கள்

காட்டிக் கொடுப்பது, போட்டுக் கொடுப்பது எமக்கு ஒன்றும் புதிதில்லை. இலங்கை அரசுக்கு போட்டுக் கொடுத்தே தமது பதவிகளைத் தக்க வைத்த அமைச்சர்களும் ( சத்தியமாய் தியேட்டர்காரரை சொல்லவில்லை) இருக்கின்றனர்.

இந்த வகையில் தற்போது புதிதாக ஒரு கூட்டமே கிளம்பியுள்ளது. ஒன்றாகப் படித்து, ஒன்றாகப் போராடியவர்கள் இன்று தமது சுயநலன்களுக்காக கூட இருப்பவனையே போட்டுக் கொடுப்பதும், காட்டிக் கொடுப்பதும் என்ற கேவலமான எண்ணத்துக்குள் சிக்கியுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் வேலையற்றிருந்த பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனங்கள் வழங்கப்பட்டன. தமக்கான போராட்டங்களை நடத்தி நியமனங்களைப் பெற்றிருந்தனர். இதன் பின்னர் ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் அவர்கள் பிரித்து விடப்பட்டிருந்தனர். இந்த நிலையில் தற்போது ஒவ்வொரு அமைச்சுக்களுக்குமாக நிரந்தர நியமனங்களுக்கு அவர்கள் உள்வாங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.




இங்கேதான் தமது காட்டிக் கொடுப்புக்களையும், போட்டுக் கொடுத்தலையும் செய்யத் தொடங்குகின்றனர். வேலைக்காகப் போராடும் போதே மூன்று சங்கங்களை உருவாக்கி வைத்திருந்தவர்கள். தற்போது நியமனங்கள் பெறுகையில் ஒவ்வொரு சங்கத்தவர்களும், மற்றைய சங்கத்து உறுப்பினர்களை போட்டுக் கொடுப்பதும், காட்டிக் கொடுப்பதுமாக உள்ளனர்.

அமைச்சரிலிருந்து, அரச உயர் அதிகாரிகள் வரைக்கும் போட்டுக் கொடுப்பதற்கென்றே ஒரு குழுவாகச் செயற்படுகின்றனர் போலும். தமக்கு நியமனங்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காக தம்மோடு படித்த தோழர்களையே இவர்கள் காட்டிக் கொடுக்கின்றனர்.

காட்டிக் கொடுப்புக்களால் நமது இனம் முள்ளிவாய்க்கால் வரை சென்று செத்து மடிந்ததை அதற்குள் மறந்திருக்கமாட்டார்கள். ஆனாலும் தொடர்கிறது காட்டிக் கொடுப்புக்கள்.

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

வன்னியில் மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளை அக்கு வேறு ஆணி வேறாக வெளியிடும் உதயனுக்கு வாழ்த்துக்கள். அண்மையில் அடிப்படை வசதிகள் ஏதும் இன்றி மீள்குடியமர்ந்த கேப்பாபிலவு மக்களின் பிரச்சினையை வெளிச்சம் போட்டுக் காட்டினாய்.

அதேபோல் வன்னியில் பல இடங்களில் மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும். உதயன் அதனை செய்வான் என்று நம்புகிறேன்.

அரசியல்வாதிகளின் பகட்டான பேச்சுக்கள் வன்னி மக்களின் வாழ்வில் இன்னும் ஒளிஏற்றவில்லை. எனவே இவர்களின் மறுமுகத்தையும் உதயன் பிரசுரிப்பானா?.

**அன்ரன், யாழ்ப்பாணம்.**

★ ★ ★

உதயன் பல பக்கங்களுடன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக உலகச் செய்தி, இந்தியச் செய்தி, கொழும்புச் செய்தி, விளையாட்டுச் செய்தி என்று அலங்கரிக்கிறது. உனது செய்திப் பக்கங்களில் கூடுதலாக யாழ்ப்பாண செய்திகளையும் எதிர்பார்க்கிறோம்.

உலகில் எந்த மூலையில் நடக்கின்ற செய்திகளையும் உடனுக்குடன் வெளியிடும் திறமை கொண்ட உதயனுக்கு, யாழ்ப்பாணச் செய்திகளை முழுமையாக வெளியிடுவது பெரிய விடயமல்ல. எனவே எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுப்பாய் என நம்புகிறேன்.

அன்றாடம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் நிகழ்வுகளை முழுமையாக உதயன் ஊடாக, பார்க்க முடியுமா? அதற்கான பக்கங்கள் போதுமானதாக இருக்குமோ தெரியாது. ஆனாலும் எமது எதிர்பார்ப்பு இதுவாகவே இருக்கிறது.


ஒவ்வொரு நிகழ்வுகள் இடம் பெறும் போதும், மறுநாள் உதயனைப் பார்க்கின்றபோது நடைபெற்ற நிகழ்வுச்செய்தி வெளிவந்திருக்குமா என்றுதான் ஒவ்வொருவரும் பார்க்கிறார்கள். நிகழ்வுச் செய்தி வெளிவராதுவிடின் அவர்கள் மனதில் ஒரு ஆதங்கம் ஏற்படும்.

எனவே யாழ்ப்பாணத்தில் அன்றாடம் இடம்பெறும் நிகழ்வுகளை நிழல் படமூலமாகவோ, செய்தியாகவோ வெளியிடுவீர்களா? நிகழ்வுப் படங்கள் வாரத்தில் ஒருநாள் ஒரு பக்கம்முழுவதும் அலங்கரித்து வருவது நன்று. வெளிவராத நிகழ்வுப் படங்களையும், செய்திகளையும் நாள் பிந்தியும் பிரசுரிப்பீர்களா?

அருந்தா, இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் எல்லோரும் ஓரினம், எல்லோருக்கும் சம உரிமை என்றெல்லாம் இன்னமும் அரசு பீற்றிக்கொண்டிருக்கும் நிலையில், தமிழர்கள் இன்னமும் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே நடத்தப்படுகின்றார்கள் என்பதை இந்தச் சம்பவமும் சுட்டி நிற்கிறது.



■ ஓடுகாலி

# கும்பிடப்போன தெய்வம் குறுக்கே மறிக்குதம்மா

புது இடங்களைப் பார்க்கும் ஆவல் அந்தப் பிஞ்சுகளின் முகங்களில் அளவுக்கு அதிகமாகவே ஒட்டியிருந்தன. எல்லா இடங்களையும் விரியும் விழிகளோடு பார்த்து மகிழ்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் கொண்டு வந்த கமராக்களுக்குள் அந்த இடங்களில் நின்று படங்களும் எடுத்துக்கொள்ளத் தவறவில்லை. கன்னியா வெந்நீர் ஊற்றில் குளித்துவிட்டு கோணேஸ்வரரை தரிசிக்க மாணவர்களை ஏற்றிக்கொண்டு பஸ் விரைந்தது. தேவாரப் பாடல்பெற்ற வரலாற்றுத் தலம் அல்லவா அது?

இதுநாள் வரையும் திரைகடல் ஓரம் நித்திலமும் கொழிக்கும் கோணமாமலையமர்ந்தவரை சம்பந்தரின் தேவாரப் பாடல் வரிகள் ஊடாக மட்டுமே தம் மனக் கண்ணில் கண்டிருந்த மாணவர்களுக்கு அந்தத் தலத்தை இன்றைக்கு நேரில் கண்டு தரிசிக்கப் போகிறோம் என்ற எண்ணம் அளவிட முடியாத ஆனந்தத்தை ஊட்டியது. தம்மையும் மறந்தவர்களாக சில மாணவர்கள் கோணேஸ்வரப் பதிகத்தை முணுமுணுக்கவும் தொடங்கி விட்டனர். கடல் நடுவே குன்றில் கோயில் கொண்ட கோணேஸ்வரரின் கோபுரமும் அண்மையில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான சிவனின் சிலையும் தூரத்தே தெரியவே மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பரவசம் தொற்றிக்கொண்டது.

கோயிலுக்குச் செல்லும் பிரதான பாதை ஊடாக பஸ் உள்ளே நுழைந்த போது ''யண்ட பா(போகேலாது)'' என்ற அதிகாரக்குரல் அந்த பஸ்ஸை தடுத்து நிறுத்தியது. சீருடை அணிந்த ஒரு கடற்படைச் சிப்பாய் பாதையின் குறுக்கே இரு கைகளையும் நீட்டி அப்பால் போக வேண்டாம் என்று சைகையும் செய்தான்.

''இது கோயில் இருக்கும் இடம். அத்துடன் கடற்படைத் தளங்களும் உள்ள பகுதி. இங்கு பஸ் போன்ற பெரிய வாகனங்கள் உள்ளே நுழைய தடை விதிக்கப்பட்டிருக்கிறது.'' என்பதை அந்தச் சிப்பாய் ஒன்றுக்கு இரண்டு தடவை பஸ் சாரதியிடம் கூறினான். 'என்ன, பஸ்ஸை திருப்பட்டுமா?' என்பது போல திரும்பி அதிபரைப் பார்த்தார் அந்தச் சாரதி.

''நாங்கள் பாடசாலையில் இருந்து கல்விச் சுற்றுலாவாக வந்திருப்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லைத் தானே. ஏனைய சுற்றுலாப் பயணிகள் என்று நினைத்துத்தான் உள்ளே செல்வதற்கு அனுமதி மறுத்திருக்கிறார்கள். அவர்களிடம் நாங்கள் பாடசாலையில் இருந்து வந்திருக்கிறோம் என்பதை விளங்கப்படுத்தினால் அனுமதித்து விடுவார்கள்'' என்று சக ஆசிரியர்களுக்கு கூறி விட்டு அதிபர் கீழே இறங்கிச் சென்றார். அவருக்குத் துணையாக இன்னும் சில ஆசிரியர்களும் சென்றனர்.

''சேர்! நாங்கள் வன்னியில உள்ள ஒரு ஸ்கூல்ல இருந்து எடியுக்கேஷன் ரூர் வந்திருக்கிறம். பஸ்ஸுக்குள்ள இருக்கிறது முழுக்க ஸ்ருடன்டும், ரீச்ஷேஸும் தான்'' என்று ஆங்கிலம், தமிழ் மற்றும் தனக்குத் தெரிந்த சிங்களம் என்று படாதபாடு பட்டு நிலைமையை அந்த சிப்பாய்க்கு அதிபர் விளக்கினார்.

ஆனால் எல்லாவற்றையும் கேட்டு விட்டு ''நீங்க போக முடியாது. பஸ்ஸை வெளியில விட்டுட்டு நடந்து கோயிலுக்குப் போங்க'' என்று தன் பிடியில் சற்றும் தளராதவனாக இருந்தான் அந்தச் சிப்பாய். அதிபர் கெஞ்சிக் கூத்தாடியும் அவன் மசிவதாக இல்லை. தன்னுடைய அதிபர் என்ற நிலையை விடவும் அவர் சற்று இறங்கி வந்து கதைக்கத் தொடங்கியதும், சிப்பாய் திமிர் அதிகரித்து அவனது வார்த்தைகளும் தடிக்கத் தொடங்கின. இனியும் அந்தச் சிப்பாயுடன் கதைத்தால் இருக்கும் மரியாதையையும் இழக்க நேரிடும் என்பதை உணர்ந்துகொண்ட அதிபர் தலையைக் குனிந்தபடி மீண்டும் பஸ்ஸுக்கு வந்தார்.

''எங்கையாவது கிட்டவா பஸ்ஸை நிப்பாட்டிப்போட்டு நில்லுங்கோ நாங்களும் பிள்ளையளும் நடந்துபோய் கோயிலைக் கும்பிட்டுட்டு வாறம்'' என்று சாரதியிடம் கூறி விட்டு, மாணவர்களையும் ஆசிரியர்களையும் அழைத்துக்கொண்டு, பொடிநடையாக, மலை உச்சியை நோக்கி நடக்கத்தொடங்கினார் அதிபர். மூச்சு வாங்கியபடி வியர்வை வழிந்தோட அவர்கள் மேல் நோக்கி சென்றுகொண்டிருந்தனர். அப்போது 'பைலா' பாடலை அந்தப் பகுதி எங்கும் பரவவிட்டபடி சிங்களப் பயணிகளோடு கோணேஸ்வரரை நோக்கி - மலை உச்சியை நோக்கி - இவர்களைத் தாண்டி விரைந்தது பெரியதொரு பஸ். கோணேஸ்வரரும் இப்போது பெரும்பான்மை இனத்துக்குத்தான்

## கோணல் கோலங்கள்

சலுகை கொடுக்கிறார் போலும்.

மேற்குறித்த சம்பவம் அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து கல்விச் சுற்றுலா சென்ற ஒரு பாடசாலை சமூகத்துக்கு நேர்ந்த விடயம். தொன்றுதொட்டு தங்கள் மனங்களில் பூசித்து வந்த ஆலயத்தைத் தொழுவதற்கு பஸ்ஸில் செல்லும் உரிமை இந்த மாணவர்களுக்கு மறுக்கப்பட்ட அதேவேளை, களியாட்டத்தனத்தோடு, கண்களில் இன்னும் போதை தெளியாத சிங்களப் பயணிகளுக்கு பஸ்ஸோடு செல்ல எந்தவிதத் தடைகளும் இருக்கவில்லை.

இலங்கையில் எல்லோரும் ஓரினம், எல்லோருக்கும் சம உரிமை என்றெல்லாம் இன்னமும் அரசு பீற்றிக்கொண்டிருக்கும் நிலையில், தமிழர்கள் இன்னமும் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே நடத்தப்படுகின்றார்கள் என்பதை இந்தச் சம்பவமும் சுட்டி நிற்கிறது. அதுவும் வேற்றிடத்தில் இல்லாது தம்முடைய சொந்தப் பூமியிலேயே தங்களுடைய கடவுளரைக் கும்பிடுவதற்குக்கூட படைத்தரப்பின் அனுமதி அவர்களுக்கு அவசியமாகி விட்டது. மாணவர்கள் என்று கூறியும் கூட அவர்களுக்கு சலுகை காட்டாத சிப்பாய், தன் இனம் சார்ந்த களியாட்ட பயணிகளுக்கு மட்டும் கதவை அகலத் திறந்து விட்டமையானது, எங்களுக்கான எல்லாக் கதவுகளும் பூட்டப்பட்டதையே குறிக்கிறது.

இந்த கதிர்காமக் கந்தன் எப்படி தமிழர்களிடம் இருந்து அந்நியப்படுத்தப்பட்டு சிங்களவர்களின் 'கதிரகமதெய்யோ'வாக மாற்றப்பட்டாரோ, அதேபோன்று வெகு விரைவில் கோணேஸ்வரரும் சிங்களக் கடவுளராக மாறும் நாள் வெகு தொலைவில் இல்லை என்ற சிந்தனையே குறித்த சுற்றுலாவுக்குச் சென்ற மாணவர்களிடம் இன்னமும் மேலோங்கி நிற்கிறது. அதிலும் தவறில்லைத் தானே?

# குழந்தையாய் இருங்கள்

நாளடைவில் சமூகத்தில் நடைபெறும் பலவிதமான கேடுகளை எதிர்க்கத் திராணியற்று வன்முறைகளை வளர்க்கும் போக்குக்கு மௌனமாக ஒத்துழைக்கிறார்கள். அதனால், வீடுகளில் நடக்கும் வன்முறைகளுக்கு ஓர் அளவே இல்லாமல் போய்விட்டது.

என்ன? வன்முறையா? குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் வன்முறையாளர்களா? பெற்ற குழந்தைகளை ஒழுங்காக வளர்க்க நாங்கள் என்ன பாடுபடுகிறோம்? வன்முறை செலுத்துகிறோம் என்கிறீர்கள்?

சரி. நான் அன்றாடம் நடக்கும் சில செய்திகளைச் சொல்லிக் கொண்டே வருகிறேன். இது வன்முறையா? இல்லையா என்று பாருங்கள்.

குழந்தை இல்லாத ஒரு தம்பதியினருக்கு 15 மாதக் குழந்தை விற்கப்பட்டுள்ளது. இது போன்ற பல செய்திகளைச் செய்திதாள்களில் காணமுடியும்- இது வன்முறையில்லையா?

நடுத்தரக் குடும்பங்களில் கருக்கலைப்புகள் நடந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவை வன்முறையில்லாமல் வேறென்ன?

குழந்தைகளை ஆசையோடும், அன்போடும் அரவணைத்து வளர்ப்பவர்கள் பெற்றோர்கள் என்பதுதான் நம் பொதுவான கருத்து. ஆனால் பெற்ற பிள்ளைகள் வீட்டை விட்டு வெளியேறும் அளவுக்கு நடக்கும் நிகழ்வுகள் ஏராளம். இவைகளை வன்முறை என்று சொல்லலாமா? கூடாதா?

குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களால் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. இவை வன்முறைதானே? இல்லையா?

குழந்தைகளுக்கு எல்லா இடங்களிலும் வன்முறைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இதன் அடிப்படையான காரணத்தைத் தோண்டும் போதுதான் அவை சங்கிலித்தொடர் போன்று சமூகப் பிரச்சனையாகவும், அரசியல் பிரச்சனையாகவும் வடிவெடுக்கின்றன. பாரபட்சமான, ஏற்றத்தாழ்வான சாதிய அடக்குமுறைகளும் இதற்குக் காரணமாகின்றன என்று புலப்படுகிறது. இவற்றைக் களைய வேண்டும் என்றால் பல கட்டங்களில் நம் போராட்டம் தொடரவேண்டும்.

பெரியவர்கள் வீடுகளில் சண்டை போடுவது கூட சிறுவர்களின் மனநிலையை மிக ஆழமாக பாதிக்கிறது. ஒருநாள் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள ஒரு சிறுமியிடம் படம் வரையச்சொன்னேன். தன் அப்பாவும் அம்மாவும் சண்டையிடுவதால் தனக்குப் படிப்பும் வரவில்லை, இருக்கவும் பிடிக்கவில்லை என்று குழந்தை சொல்வதான கார்ட்டூனை வரைந்து காட்டினாள். அந்தச் சிறுமியிடம் பேசிக் கொண்டிருந்த போது எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளாள்



■ இணையவன்

என்று தெரிந்தது.

சிறுமி சொன்னாள் ''யார் யாரோடு சண்டை போட்டாலும் கடைசியில் பாதிக்கப்படுவது நான் தான். எனக்குத்தான் அடி கிடைக்கும். திட்டு கிடைக்கும். அப்போதெல்லாம் நான் அழுவேன். அழுதால் அதற்கும் அடி கிடைக்கும். அதனால் கஷ்டப்பட்டு அடக்குவேன். தொண்டையெல்லாம் அமுக்கி வலிப்பது போல இருக்கும். நெஞ்சுவலிக்கும். நிற்க வைத்து ஜெயிலுக்குள் இருப்பவர்கள் கிட்ட கேள்வி கேட்பது போல் கேட்பார்கள். நிறைய தடவை நினைப்பேன். சுனாமி வந்தபோது இவர்கள் செத்து போயிருக்க கூடாதா? என்று கேட்டு விட்டு உடனே சாமியிடம் மன்னிப்பும் கேட்பேன். நான் அடியும் உதையும் வாங்கிற போதெல்லாம் எங்கயாவது ஓடிப்போய் விடனும் போல இருக்கும். அப்படி போனால் பொம்பிளைப் பிள்ளைகளை பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள் என்று சொல்வார்கள். அப்பா அடிக்கும் போதெல்லாம் கெஞ்சுவேன்.

அதைக் காதில் வாங்க மாட்டார். என்மேல் அம்மாவும், அப்பாவும் அன்பு செய்ய மாட்டார்களா என்று ஏங்குவேன். அவர்கள் மடியில் படுக்க வேண்டும் போல இருக்கும். கோபமா இருக்கும்போது அவர்களைப் பார்த்தாலே எனக்கு பயம் ஏற்படும். இதனால் சரியாகவே படிக்க முடியவில்லை. பள்ளிக் கூடத்திலே டீச்சரும் படிக்காட்டி அடிப்பாங்க. செத்துப் போகலாம் என்று இருக்கும். சுனாமியில் செத்திருக்கலாம்'' என்று விம்மிவிம்மி அழுதாள் அந்தக் குழந்தை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org